கல்கி

KALKI 3.6.90 ரூ. 2.50



சிம்ரஞ்ஜித்சிங் மான்:

மரணத்தின் பிடியிலிருந்து மக்களவைக்கு...



"எனக்குப் பிடித்த
சக-நடிகரா?
ஸின்த்தால்!
மூன்று ஷிஃப்ட்களில்
நடித்த பிறகும்
அது என்னை
புத்துணர்ச்சியுடனும்
எழிலுடனும் வைக்கிறது."
Godrej
CINTHOL
LUXURY
TOILET POWDER
CINTHOL
கோத்ரெஜ்
தயாரிப்பு
ஸின்த்தால் - நாள்முழுதும் புத்துணர்ச்சியூட்டும் நறுமணம்

மருத்துவமனையைப் பீடித்துள்ள நோய்!

சில மாதங்களுக்கு முன்பு ஒருநாள் பட்டப் பகல் வேளை. கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் ஒரு கொள்ளை! கத்தி காட்டி மிரட்டாமல் கழுத்தில் கை வைத்து அழுத்தாமல்... கூச்சலோ குருதியோ வெளிப்படாமல் கூட்டத்தோடு கூட்டமாய் இயல்பாய் மிகப் பெரிய கொள்ளை!

அந்த அம்மாவுக்கு நாற்பத்தி எட்டு வயதிருக்கும். தொண்டையில் சதை வளர்ந்து ரணம் தாங்காமல் டாக்டரைப் பார்த்திருக்கிறார். டாக்டர் ஆபரேஷனுக்கு நாள் குறித்துத்தர, அமைந்தக்கரையிலிருந்து கீழ்ப்பாக்கம் மருத்துவமனைக்கு வந்திருக்கின்றார். கூடவே அறுபதைத் தொடுகின்ற கணவர். ஆபரேஷனுக்கு எங்கே போய் டாக்டரைப் பார்க்க வேண்டும் என்று தெரியவில்லை. ஒவ்வொருவராய் வழிமறித்துக் கேட்க, எங்கெங்கோ கை காட்டியிருக்கிறார்கள். அலைய உடம்பில் தெம்பு இல்லை. பட்டை உரிக்கின்ற பன்னிரண்டு மணி வெயில். கூட வந்த பெரியவர் நிழல் தேட, ஒரு மரத்தடியில் போய் அமர்ந்திருக்கின்றார்கள். அப்போதுதான் அந்தப் 'புண்ணியவானை'ப் பார்த்திருக்கின்றார்கள். பார்ப்பதற்கு டாக்டர் போல் தெரிய, அவரிடம் தனக்குத் தொண்டையில் சதை வளர்ந்திருக்கின்ற விவரத்தையும், ஆபரேஷன் செய்ய வேண்டும் என்றும் கூறிய உடனே, அவரே அழைத்துக் கொண்டு போயிருக்கிறார்.

லிப்டில் உயரப் போய், ஒரு ப்ளோரில் இறங்கி நடந்து வளைந்ததும் சின்னதாய் ஓர் அறை. அவரே அந்த அம்மாவைச் சோதனை செய்யத் துவங்கினார். நாடி பிடித்துப் பார்த்து, 'ஆ' சொல்லச் சொல்லி தொண்டைக்குள் உற்றுப் பார்த்து, ஐந்து நிமிஷத்தில் ஆபரேஷனுக்குத் தயாராகி விட்டார்! கழுத்தில் காதில் போட்டிருப்பதையெல்லாம் அவிழ்த்து வைத்து விட்டு உள்ளே வரச் சொல்லியிருக்கின்றார். அந்த அம்மாவும் அப்படியே செய்திருக்கிறார். பெரியவர் வராந்தாவில் நின்று கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்.

ஐந்தே நிமிடத்தில் அது நடந்து முடிந்து



* கீழ்ப்பாக்கம் மருத்துவமனை





விட்டது. அந்த அம்மா அவிழ்த்து வைத்திருந்த ஆறு பவுன் நகைகளைச் சுருட்டிக் கொண்டு மாயமாய் மறைந்து விட்டான் 'டாக்டர்'! அந்த அம்மாள் அழுது புலம்பி ஆஸ்பத்திரியே ஒரே அமர்க்களமாயிற்று.

இது முடிந்து போன கதையென்று முற்றுப்புள்ளி வைத்து விட முடியாது. இந்த அவலம் இன்னும் தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருக்கின்றது.

ஆஸ்பத்திரிக்குள் சின்னதாய் ஒரு போலீஸ் ஸ்டேஷன் இருந்தும் திருட்டுச் சம்பவங்கள் நிறைய நடக்கின்றன. திருட்டுக்களுக்கும் ஏமாற்று வேலைகளுக்கும் முக்கிய காரணம் ஆஸ்பத்திரி சிப்பந்திகள் யாருமே யூனிபார்ம் போடாததுதான் என்று கூறுகின்றார்கள். இதனால் வெளியாட்கள் யார்? சிப்பந்திகள் யார்? என்று தெரியாமல் போய் விடுகின்றது.

இந்தக் குழப்பம் கே. எம். சி.யில் நிலவுவதை நேரில் சென்று பார்த்த நாம் இது பற்றி கே. எம். சி.யின் டீன் இராமகிருஷ்ணனிடம் கேட்டோம்.

"நீங்கள் சொல்லுவது வாஸ்தவம்தான். யூனிபார்ம் போட வேண்டும்தான். ஆனால் அவர்களைக் கட்டாயப்படுத்த முடியாது. அவர்களாகவே உணர வேண்டும். சட்டமாகச் சொன்னால் சிக்கலாகிப் போகின்றது. மேலும், இது பொது ஆஸ்பத்திரி. எங்க எங்கவிருந்து எல்லாமோ ஜனங்கள் வந்து குவிந்து போகிறார்கள். இந்தக் கூட்டத்தில் சில தவறுகள் நடக்கத்தான் செய்யும்" என்று நழுவி விட்டார்.

நோயாளிகளை ஏமாற்றிப் பணம் பறிக்கின்ற வேலையை ஒரு கும்பல் மிகவும் சாதுர்யமாகச் செய்து வருகின்றதாகக் கூறுகின்றார்கள். இதற்குச் சிப்பந்திகளே உடந்தையாகவும் இருக்கின்றார்கள். ஆஸ்பத்திரிக்கு கண் பரிசோதனைக்கென்று வருகின்ற நோயாளிகளை பரிசோதனைக்குக் கூப்பிட்டுப் போவது போல் ஒரு மறைவான இடத்திற்கு அழைத்துக் கொண்டு போய் விரல்களைக் காட்டி இது எத்தனை? இது எத்தனை என்று இரண்டு மூன்று முறைகள் கேட்டு விட்டு, 'இருநூறு ரூபாய் கொடுக்க வேண்டும்' என்று வாங்கிக் கொண்டு, அவர்களை அம்போவென்று விட்டு விட்டுப் போய் விடுகின்றார்களாம்.

இந்தக் 'கை காரியத்தினை'ப் பெட் — பேஷண்டுகளிடமும் காட்டி விடுகின்றார்கள். வார்டுகளில் மிகவும் பரிதாபமாகப் படுத்திருக்கின்றவர்களிடம் நகைகளையும் கைச் செலவுக்கு வைத்திருக்கின்ற பணத்தையும் எப்படியோ திருடிக் கொண்டு போய் விடுகின்றார்கள். வார்டு டூட்டி நர்ஸ், க்ளீனர் பாய், வாட்ச்மேன் இத்தனை பேர் சுற்றியிருப்பினும் எப்படி திருட்டுப் போகின்றது என்பது மட்டும் இன்னும் புரியாத புதிராகவே இருக்கின்றது.

பிறந்த குழந்தைகளைக் கூடத் திருடிக் கொண்டு போய் விடுவதாகக் கூறுகின்றார்கள். ஆஸ்பத்திரி சுவர்களில் 'குழந்தை திருட்டு' பற்றி எச்சரிக்கைகள் செய்யப்பட்டுள்ளது.

சில வருடங்களுக்கு முன்பு நடந்த சம்பவம் ஒன்று எல்லோரையும் உலுக்கி விட்டது. பிறந்த குழந்தையை நாய் வெளியில் வீதிக்குத் தூக்கிக் கொண்டு போய் விட்டது! குழந்தை செத்துப்போய் விட்டது. இந்தச் செய்தி அப்போது பத்திரிகைகளில் வெளிவந்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அதன் பின்பு இது மாதிரிச் சம்பவங்கள் நடக்கவில்லை என்றாலும் கூட, ஆஸ்பத்திரிப் பணியாளர்களின் கவனக்குறைவும் அலட்சியப்போக்கும் அப்படியேதான் இருக்கின்றன.

அரசு மருத்துவமனைகளைத் தாக்கியுள்ள இந்தக் கொடிய நோய்களைப் போக்க உடனே சிகிச்சை செய்ய வேண்டும்.

— பாரதிபாலன்

புகைப்படம்: **உத்ரா**



வடமாநிலம் ஒன்றிலிருந்து கோடை விடுமுறையில் வந்துள்ள ஒரு நர்ஸரிக் குழந்தை சொன்ன குட்டிக் கதை.

டி. டி. ஈ., டிக்கெட் இல்லாத பேர்வழியை மடக்கினாராம். "டிக்கெட் வாங்காமெ எங்கே போய்க்கிட்டிருக்கே?"

"ராம் ஜன்ம பூமிக்கு" என்றாராம் அந்த ஆள்.

"அப்படியா... சரி. முதல்லே "கிருஷ்ண ஜன்ம பூமிக்கு" போகலாம் வா!" என்றாராம் பரிசோதகர்.

— வெல்பால்.



படத்துக்கு முத்தம் சிலைக்குக் கற்பூரம்!

எம். ஜி. ஆர். நினைவு இல்லம்

"திறந்து மூன்று நாட்கள்தான் ஆகின்றன; கிட்டத்தட்ட மூவாயிரம் பேருக்கு மேல் எம். ஜி. ஆர். நினைவு இல்லத்தைப் பார்த்து விட்டார்கள் என்றார் எம். ஜி. ஆர். நினைவு இல்லப் பாது காப்பாளர் முத்து. கிட்டத்தட்ட ஆயிரம் பரிசுப் பொருட்கள் காட்சிக்கு வைக்கப் பட்டிருக்கின்றன. எம். ஜி. ஆர். பயன்படுத் திய கார், கை கடிகாரம், கூலிங்கிளாஸ், தொப்பி ஆகியவை முக்கியமானவை.

சாமான்ய மக்களின் கூட்டம் அலை மோதுகிறது. எம். ஜி. ஆர். வளர்த்து, 'அடிமைப் பெண்'ணில் நடித்த சிங்கத்தின் உடல் பதப்படுத்தப்பட்டு வைக்கப்பட் டிருக்கிறது. ஆலையம்மன் கோயில் பகுதி யிலிருந்து குடும்ப சகிதமாக வந்திருந்த கதிரவன், சிங்கத்தைக் காட்டி, "இது பேர் ராஜா... மிருகக் காட்சி சாலைக்குத் தலை வரு தன்கொடையா கொடுத்தாரு. இறந்த வுடனே வாங்கி பதப்படுத்தி வைச்சுட் டாரு..." என்று விளக்கிக் கொண்டிருந் தார். சிங்கத்தைச் சுற்றிலும் சிறுவர்கள் கூட்டம்.

எம். ஜி. ஆர். பயன்படுத்திய உடற் பயிற்சி சாதனங்கள் பலவித எடையுள்ள கர்லாக் கட்டைகள், எடைத் தட்டுக்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. "வாத் யாரு வைச்சிருந்ததைப் பார்த்தியாடா" என்று இளைஞர்கள் வியப்புடன் பார்வை யிட்டுச் சென்றார்கள். தண்டையார் பேட்டையிலிருந்து வந்திருந்த சண்முகம், நிலையப் பாதுகாப்பாளர் ஒருவரிடம், "ஏங்க... சத்யராஜுக்குத் தலைவர் ஒரு கர்லாக் கட்டையை அன்பளிப்பாகக் கொடுத்தார். அதுவும் இங்கே இருக்குதா?" என்று ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந் தார்.

மாடிக்குச் செல்லும் இருப்பத்தில் பெரிய அறை. எம். ஜி. ஆர். படம் மாட்டப் பட்டிருக்கிறது. மாடியில் பார்த்து விட்டுத் திரும்பும் மக்கள் (குறிப்பாகத் தாய்க்குலம்) அந்த எம். ஜி. ஆர். படத்தின் கன்னத்தைக் கை விரல்களால் தொட்டு, முத்தமிட்டுச் செல்வது வழக்கமாகி விட்டது!

எம். ஜி. ஆர். நடித்த படங்களின் ஸ்டில் கள் வரிசையாக வைக்கப்பட்டிருக்கின்றன. 'திடீ'ரென்று ஒருவர் சப்தமாக "ஜெய லலிதா கூட தலைவர் இருக்கும் படம் ஒண்ணு கூட இல்லையே...!" என்று குரல் கொடுத்தார்.

"போஸ் நல்லாப் பாருய்யா..." என்று ஜெ – எம். ஜி. ஆர். நடித்த 'அடிமைப் பெண்'ணின் ஸ்டில்களைக் குறிப்பிட்டுக் காட்டினார் மற்றொருவர்.

தலைவர்கள், எம். ஜி. ஆருக்கு எழுதிய கடிதங்கள், மற்றும் எம். ஜி. ஆர். படித்த புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ள அறை தற் காலிகமாக மூடப்பட்டிருக்கிறது. அவை யெல்லாம் ஒழுங்காகக் காட்சிக்கு வைக்கப் பட்டவுடன் அந்த அறை திறந்து விடப்படு மாம்.

மயிலாப்பூரிலிருந்து வந்திருந்த கணபதி ராமன் ரொம்ப ஆர்வத்துடன், "என் னார்... அண்ணா நியூயார்க்கிலிருந்து தலைவருக்குக் கடிதம் எழுதினாரே? அது எங்கே இருக்கு?" என்று விசாரித்துக் கொண்டிருந்தார். அவரை மட்டும் தனியே அழைத்துச் சென்று விவரத்தைச் சொல்லி கடிதத்தையும் காட்டி அனுப்பினார் முத்து. அந்த ரசிகருக்கு பரம திருப்தி.

எம். ஜி. ஆருக்கு ஜெயலலிதா கொடுத்த ஐந்தரை அடி உயர செங்கோலும் காட் சிக்கு வைக்கப்பட்டிருக்கிறது. "இது ஜெய லலிதா அம்மா கொடுத்தது' என்று எழுதி வைத்தால் என்ன ஸார்?" என்று குறை பட்டுக் கொண்டார் மணி என்பவர்.

ராமாவரம் தோட்டத்திலிருந்து லாரி யில் கலப்படமாக வந்து இறங்கிய பொருட் களைப் பார்த்து, முறைப்படி காட்சிக்கு வைத்தவர்கள் முத்துவும், ஸ்வாமிநாதன் என்பவரும். "ஒரு வாரம் எங்கள் பெண்டு கழன்று விட்டது" என்றார் முத்து. இவர் கிட்டத்தட்ட பதினேழு வருடம் எம். ஜி. ஆரிடம் பணிபுரிந்தவர்.

நினைவு இல்லத்தின் உள்ளே நுழைந்தவு டன் வலது புறம் எம். ஜி. ஆரின் மார்பள வுச் சிலை இருக்கிறது. தினமும் குறைந்தது பத்து பேராவது அந்தச் சிலைக்குக் கற்பூரம் காட்டுகிறார்களாம்.

— ப்ரியன்

படம்: சுபா

தண்டனையாக விளங்கிய 'தாலாட்டு!'



* ருக்மிணி தேவி: வரவேற்கத்தக்க மறு ஒளிபரப்பு

ஓல்ட் இஸ் கோல்ட்' என்பார்கள். அண்மையில் ஒளிப்பரப்பான இரண்டு படங்களைப் பார்த்த பிறகு, எல்லா ஓல்டுமே கோல்ட் ஆக இருந்துதான் தீர வேண்டும் என்கிற கட்டாயம் இல்லை என்பது புரிந்தது. ஒன்று 'GAMBLER' — இந்தி. மற்றது 'தாலாட்டு' — தமிழ். முந்தைய யுகத்தைச் சேர்ந்த படங்கள்.

இந்திப் படத்தின் பெரும் பகுதி சூதாட்டத்தினால் ஒருவன் கோடீசுவரன் ஆகி விடுகிறான் என்பதையே விவரிக்கிறது. சூதாட்டம் தவறு என்றோ, தவறு செய்கிறவன் தண்டிக்கப் படுகிறான் என்கிற நியதியோ படத்தில் எங்கேயும் வலியுறுத்தப்படவில்லை.

கோடிக்கணக்கான இல்லங்களில் நேரடியாகப் புகுந்து புறப்படக் கூடிய தொலைக்காட்சி, சினிமாவைவிட ஆற்றல் மிக்கது! அப்ப்டிப்பட்ட நிலையில், இத்தகைய ஒரு அடிப்படை 'மெஸ்ஸேஜ்' கொண்டுள்ள படம் எப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டது?

ரசிகர்களைத் தண்டிக்க வேண்டும் என்பது நீண்ட நாளையத் தி ட் ட ம் போலிருக்கிறது. தேடிப் பிடித்து, 'தாலாட்டு' படத்தை ஒளிபரப்பியிருக்கிறார்கள். ஒரு குருட்டுப் பெண்ணும் குரூபி ஒருவனும் இணைந்து வாழ்க்கை நடத்துகிறார்கள். அவர்களை அமைதியாக வாழவிடாமல் கிராமத்தினர் தொல்லை தருகிறார்கள். முடிவில் அவள் இறந்துபோக, அவன் ஊரை விட்டே போய் விடுகிறான். 'ஆ, என்ன கொடுமை?' என்று 'த்சு' கொட்டுகிறது கதை. கொடுமைப் படுத்தப்பட்டவர்கள் கதாநாயகனும் நாயகியுமல்ல. தொலைக்காட்சியில் படம் பார்த்தவர்கள் தான்.

எதிர்ப்புகள், போராட்டங்கள், உண்ணாவிரதங்கள், தீ விபத்து அத்தனையையும் கடந்து 'திப்புசுல்தான்' தொடரின்



* சஞ்சய்கானின் திப்புசுல்தான்: கனமான தயாரிப்பு

ஒளிபரப்பு தொடங்கிவிட்டது. இப்போது அதன் 'காபிரைட்' உரிமை குறித்து பி. ஆர். சோப்ரா ஒரு பிரச்னையைக் கிளப்பியிருக்கிறார்.

பாத்திரங்களுக்கேற்ற கம்பீரத் தோற்றமுடைய நடிகர்கள். வானளாவும் கோட்டைகள். விஸ்தாரமாக உயர்ந்து நிற்கும் அரண்மனைகள். தூசு பறக்க விரைந்தோடும் குதிரைகள். கண்களைப் பறிக்கும் ஆடையணிகள். சரித்திரகாலத்துக்கே நம்மைக் கொண்டு செல்லும் சண்டைக் காட்சிகள். உள்ளத்தைத் தொடும் வகையில் இந்துப் பூசாரிக்கும் இஸ்லாமிய மௌல்விக்கும் இடையே நிலவும் நட்பு. கனமான தயாரிப்பு.....

வரவேற்கப் படக் கூடிய இரண்டு மறு ஒளிபரப்புகள். ஒன்று ருக்மிணி தேவி பற்றியது — இரண்டாவது சானலில். மற்றது, 'சித்திரை நந்நாள்' — முதல் சானலில். இந்தக் கிராமியக்கலை நிகழ்ச்சியை வழங்கியவர் பேராசிரியை விஜயலட்சுமி நவநீத கிருஷ்ணன்.

பிஎச்.டி. பட்டத்துக்காக இவர் தொட்ட நாட்டுப் புறக்கலைகள் சிக்கென்று இவரைப் பற்றிக் கொள்ள, டீவி தவிர இது வரை இவரது நிகழ்ச்சிகள் நூறு முறை மேடையேறியும் உள்ளனவாம்.

— கிச்சாமி



வெட்டப்படுவாரா வாழப்பாடி?

'மாந்திரீகன் வீட்டுப் பேயும், வைத்தியன் வீட்டு நோயும் போகாது' என்று சொல்வார்கள். இதே போலத்தான் காங்கிரஸ் கட்சியிலுள்ள கோஷ்டிப் பூசலும்! அ. தி. மு. க. ஆதரவுடன் நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸை ஓஹோவென்று உயரச் செய்த வாழப்பாடியை 'நாக் அவுட்' செய்து விடுவது என்று புது பலத்துடன் இறங்கியிருக்கிறார்கள் மூப்பனார் ஆதரவாளர்கள். இப்போது இவர்களுக்குக் கிடைத்திருக்கும் கூடுதல் பலம் வைஜயந்தி மாலா!

எந்த கோஷ்டியிலும் சேராமல் தனித்துச் செயல்பட்டு வந்த வைஜயந்தி மாலாவை எதிரணியில் தள்ளி விட்ட பெருமை வாழப்பாடியைச் சாரும். அங்கே அவரது அரசியல் சாணக்கியம் குறட்டை விட்டு விட்டது!

ரயில் மறியல் போராட்டத்தில் கலந்து கொள்ளாததற்கு, இளைஞர் காங்கிரஸ் காரர்களை அனுப்பி வைஜயந்திமாலா வீட்டின் முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தியதுதான் தகராறுக்கு ஆரம்பக் காரணம். பின்னர் தி. மு. க. வினருடன் சேர்ந்து காவிரி விஷயமாகப் பிரதமரைச் சந்தித்தது, தனியாக உண்ணாவிரதம் இருந்தது என்று பிரச்னை தொடர்கதையானது.

இப்போது ராஜீவிடம் போய் ஒற்றைக் காலில் நின்று, 'வாழப்பாடியை வீட்டுக்கு அனுப்புங்கள்' என்று தவம் இருக்கிறாராம் வைஜயந்தி. "இந்த ஒப்பனை அரசியல் இங்கு எடுபடாது" என்று கூறி வைஜயந்திக்கு மேலும் எரிச்சலூட்டினார் வாழப்பாடி.

'இன்னும் சிறிது காலத்துக்கு நம்மால் ஒன்றும் செய்ய முடியாது' என்று சோர்ந்து போயிருந்த மூப்பனார் ஆதரவாளர்கள், வைஜயந்தியின் போர்க் கோலத்தைப் பார்த்ததும் புது எழுச்சி கொண்டு விட்டார்கள். சந்தடிச் சாக்கில் தங்கள் ஆளான அருணாசலத்தைத் தலைவராக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறார்கள். ஆனால் இவர்களது முயற்சிக்கு மேலிட ஆதரவு பூஜ்யம்! காரணம் இன்று காங்கிரஸ் மேலிடத்தில் மூப்பனாரின் எதிர்ப்பாளர்களான பல்ராம் ஜாக்கரும், ஜாபர் ஷெரிப்பும், பலமாக உட்கார்ந்திருக்கிறார்கள். போதாததற்கு ராஜீவின் உதவியாளர்கள் ஜார்ஜ், பொதேதார், மணி சங்கர் அய்யர் ஆகியோர் மூப்பனாரை எதிர்க்கும் கோஷ்டியில் இருக்கிறார்கள். இதனால்தான் எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் பொறுப்பு மூப்பனாருக்குக் கிடைக்கவில்லை.

மேலும், 'மூப்பனார் என்றாலே அ. தி. மு. க. வின் அடிவருடியாயிற்றே' என்று சொல்கிறார்களாம் டெல்லி காங்கிரஸ்காரர்கள். அந்த அளவுக்கு மூப்பனாரின் செயல்பாட்டைக் குறித்து இருபது பக்க ஆராய்ச்சிக் குறிப்பை, ராஜீவிடம் தந்திருக்கிறார் வாழப்பாடி.

ஆனால், அதில் உள்ளவற்றை ராஜீவ் நம்பாமல், தமக்கு வேண்டிய உத்தரப் பிரதேச காங்கிரஸ் தலைவர் ஒருவரைச் சென்னைக்கு அனுப்பி விசாரித்தார். சட்டசபையில் முக்கியமான பிரச்னைகளில் மூப்பனார் பங்கெடுத்துக் கொள்ளாதது பளிச்சென்று தெரிந்தது. மேலும் தி. மு. க. விற்கு எதிராக அவர் வலுவாகச் செயல்படவில்லை என்ற புகார் வேறு. பார்த்தார், பழைய மந்திரி சிதம்பரம்; எதற்கு வம்பு என்று வாழப்பாடியாரின் அணியில் சேர்ந்து விட்டார்! அதே சமயத்தில் வாழப்பாடியாரின் அணியிலிருந்து கோவை எம். பி. குப்புசாமி எதிரணிக்குத் தாவி விட்டதையும் குறிப்பிட வேண்டும்.

இதற்கிடையில் 'எங்களுக்கு வாழப்பாடியும் வேண்டாம், மூப்பனாரும் வேண்டாம்; குமரி அனந்தனைக் கொண்டு வாருங்கள்' என்று ஒரு குரல் ஒலிக்கிறது. ஆனால் குமரியைத் தலைவராகக் கொண்டு வர மத்திய தலைமை தயங்குவதற்குக் காரணம் அவர் இந்திராவின் படத்தை எரித்தார் என்ற குற்றச்சாட்டுதான். தாம் அவ்வாறு செய்யவில்லை என்பது குமரியின் வாதம். இது தவிர தங்கபாலுவும் கோதாவில் குதித்திருக்கிறார். ராஜீவின் நெருங்கிய வட்டாரம் தங்கபாலுவுக்கு 'நோ அப்ஜெக்ஷன்' சொல்லியுள்ளதாம்.

காங்கிரஸுக்குள் ஆதரவு யார் பக்கம் இருந்தாலும் சரி, தமிழக காங்கிரஸின் தலைவராக யார் வருவது என்று தீர்மானிக்கும் உரிமை அ. இ. அ. தி. மு. க. விடம் தான் இருக்கிறது! மூப்பனாரும், வைஜயந்தியும் டெல்லியில் என்னதான் முட்டி மோதினாலும், ராஜீவ், தினேஷ் சிங்கைச் சென்னைக்கு அனுப்பி ஜெ. கருத்தைக் கேட்பார் என்றே நம்பப்படுகிறது. வாழப்பாடி — ஜெ. உறவு எந்தச் சிக்கலும் இல்லாமல் இருப்பதால், இந்தச் சமயத்தில் தலைவரை மாற்ற ஜெ. சம்மதிப்பாரா என்பது சந்தேகம்.

— கௌசல்யா

வட்டமேஜை

சந்தோஷமளித்த சின்னச் சின்ன காந்திகள்!

அமைச்சர் உபேந்திராவின் பேட்டியில், டெலி விஷனைப் பற்றி ஒரு நம்பிக்கை பிறந்தாலும் நம் முதல்வர் புத்தாண்டு அன்று நடந்து கொண்ட முறையை, தம் தோழமைக் கட்சித் தலைவர் என்பதற்காக மிகச் சாமர்த்தியமாகச் சமாளித்தது, தொலைக் காட்சி பற்றிய நமது நம்பிக்கையை மீண்டும் தளரச் செய்தது!

பொள்ளாச்சி, ஏ. கி. பிரபு.

* தமக்கு எதிரான விமரிசனங்களை எதிர்கொள்ள விரும்பாத கலைஞரின் சமீப கால நடத்தை வியப் பளிக்கிறது. தி. மு. க. சார்பு இதழ்களும் வெளிப் படையாக, தங்களை விமரிசிப்பவர்கள் மேல் (நியாயமான விமரிசனம் என்ற போதிலும்) போட்டி போட்டுக் கொண்டு சேற்றை அள்ளித் தெளிப்பதும் வேதனையைத் தருகிறது.

கலைஞரின் மனமாற்றம் (!?) அவரது கட்சி அபிமானிகளையே வருந்தச் செய்கிறது.

கலைஞர் மனம் திறந்து சிந்திக்கட்டும்.

திருச்சி – 24, கலைஞர் பிரியை.

* தி. மு. க. வையும், அதன் அரசையும் பாராட்டி எழுதினால், கல்கி நல்ல ஏடு, நடுநிலை பத்திரிகை என்று புகழ்ந்து எழுதுவார் கருணாநிதி. குறைகளைச் சுட்டிக்காட்டினால் அவர்களுக்குப் பொறுக்குமா? அடுக்குமா? என்று வசைபாடுவார். இது அவருடைய பிறவிக்குணம்!

பூனாம்பாளையம், என். ஆர். சுப்பிரமணியன்.

* ''நிலம் வாங்குவோர் ஜாக்கிரதை'' டெலிவிஷன் ஊழல் – உபேந்திரா ''லஞ்ச ஆதரவு சுஜாதா கதை'' எனச் சில இருள்கள்.

எனினும் கருப்பூர் கிராமம், 'அனாதைப் பெற்றோருக்குப் பிள்ளையாகி'' எனச் சிறு சிறு வெளிச்சங்கள். இந்தச் சின்னச் சின்ன காந்திகளை வெளிச்சத்துக்கு கொண்டு வரும் கல்கிப் பணி சிறக்கட்டும்.

தஞ்சாவூர், ஆர். விஜயராகவன்.

* விபத்துக்களைத் தடுக்க வேண்டும் என்ற எண்ணம் உண்மையிலேயே அரசுக்கு இருந்திருந்தால் ஒரு சட்டத்தின் மூலம் அனைத்துப் பேருந்துகளுக்கும் (அரசு மற்றும் தனியார்) டைசிகாள் கருவியைப் பொருத்தும் நிலையை ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் அரசுப் பேருந்துகளில் மட்டும் பொருத்திய தால், அரசுப் பேருந்துகளுக்கு வருவாய் குறைந்து தனியார் பேருந்துகளுக்கு வருவாய் அதிகரித்தது – காரணம் பொது மக்கள் வேகமாகச் செல்லும் தனியார் பேருந்துகளில் விரும்பி ஏறினர். இதனால் டிரைவர் கண்டக்டர்களின் பேட்டா குறைந்தது. ஆக மொத்தம் திட்டம் தோல்வியடைந்தது.

சேலம், எஸ். ஸ்ரீ. கேசவ்ராமன்.

* கல்கி 13. 5. 90 தேதியிட்ட இதழில் ''மாதம் ஒரு தொகுதி'' பகுதியில் குழித்துறை நகராட்சியிலுள்ள (மார்த்தாண்டம் நகராட்சி என்பது தவறு) மார்த் தாண்டம் பகுதியில், ஏழு இடங்களில் பேருந்துகள் உதிரி உதிரியாக நிற்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. போக்குவரத்துக் கழகங்களில் லாப நோக்கத்திற்காக அவர்களாகவே இன்றுள்ள நிலைமை ஏற்படுத்தி உள்ளனர். மேலும் மார்த்தாண்டம் பேருந்து நிலையம் காளைச் சந்தையில் வராமல் இருப்பதற்குக் காரணம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் குறிப்பிட்டுள்ளது போல, நகரில் உள்ள வியாபாரிகள் எல்லாம் எனக்கு மிக வேண்டியவர்கள் என்பதல்ல. இரண்டு பேருந்து கள் எதிரெதிராக சென்று வருவதற்கு சாலை அங்கு அகலம் இல்லாததும், சந்தை நாட்களில் சென்று வரும் ஆயிரக்கணக்கான மக்கள் பாதிப்பிற்குள்ளா வார்கள் என்பதும்தான் காரணம். எந்த விருப்பு வெறுப்புமின்றிப் பொது நலத்திற்காகவே பணி ஆற்றி வருகின்றேன்.

குழித்துறை, டி. மணி, குழித்துறை நகராட்சித் தலைவர்.

* கல்கி 13.5.90 இதழில் ''கவிகாரம்'' கதையின் முடிவில், ''என்னோட உடலையும் கடைசியில் மெடிகல் காலேஜுக்குக் கொடுத்துடறதுன்னு முடிவு பண்ணிவிட்டேன்'' என்று உரையாடல் அமைகிறது.

இது தமிழ்நாட்டில் நடக்கக் கூடிய காரியம் அல்ல. ஏனெனில் ''**Anatomy Act** 1951 படி, **Voluntary Donation of Body for Anatomical purpose is not possible.** இது விஷயமாக உயர்நீதி மன்றம், **Anatomy Act** இல் திருத்தம் செய்யும்படி தமிழக அரசுக்குச் சிபாரிசு செய்தும் அரசு கும்பகர்ண னுக்கு அண்ணனாகத் தூங்கிக் கொண்டிருக்கிறது.

திருவண்ணாமலை, சாந்தா குருமூர்த்தி.

* ஒரே நிலம் பலருக்கு விற்கப்படுகிறது என்று பதி வாளருக்குத் தெரிந்தாலும் கூட, உரிய முத்திரைக் கட் டணமும் பதிவுக் கட்டணமும் செலுத்தப்படுமானால், பதிவுச் சட்டத்தின்படி அப்பத்திரத்தைப் பதிந்தே ஆக வேண்டும். பதிவை மறுக்க இயலாது. பாதிக்கப் பட்டவர் நீதிமன்றத்தில்தான் நிவாரணம் பெற வேண்டும். (பதிவை மறுப்பதற்கு (**Refusal for Registration**) வேறு பல காரணங்கள் உண்டு. அவற்றைச் சுருக்கம் கருதி நான் விளக்கவில்லை.) நிலைமை இப் படியிருக்க, பதிவு அலுவலகத்தில் உள்ளவர்கள் உடந்தை என்று கூறுவது பொருத்தமாகாது. ஏமாறு வதற்கு ஆள் இருந்தால் ஏமாற்றுபவர்களுக்குக் கொண்டாட்டம் என்பது அவலம் நிறைந்த உண்மை.

கீழ்பெண்ணாத்தூர், சொ. சேகர்.


* கல்கி 6.5.90 தேதியிட்ட இதழில் எனது பேட்டி ஒன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது. ''கலைஞருக்கு எங்களைக் கலந்து ஆலோசிப்பது கசப் பாக இருக்கிறது'' என்ற தலைப்பு வார்த்தைகள் என்னுடையதல்ல.

இரண்டாவதாக, மேல்சபை வருவது குறித்து ''தி. மு. க. வினர் கொண்டு வந்த தீர்மானம் தோற்று விடாமல் இருக்க, வோட்டெடுப்பு அன்று நாங்கள் சட்டசபைக்குச் செல்லவில்லை'' என்பது சரியல்ல. வெளிநடப்பு செய்ததாகத்தான் குறிப்பிட வேண்டும்.

திருச்சி – 3, பாப்பா உமாநாத்.




IADEUS/PE/L/8-90-TAM
எந்நேரமும் லிம்கா நேரம்
விருந்தினர் வரும் நேரம்
லிம்காவின் இனிப்பும் உப்பும் கலந்த இணையற்ற சுவை விருந்தினர் மனதை கொள்ளை கொள்ளும்.
தாகம் தணிக்கும் நேரம்
லிம்காவில் அடங்கியுள்ள ஐஸோடானிக் உப்பு உங்கள் தாகத்தை தணிக்கிறது.
கொட்டமடிக்கும் நேரம்
உல்லாசமாய் கொட்டமடிக்கும் நேரங்களில் லிம்கா, வாழ்விற்கு மேலும் சுவை கூட்டுகிறது
பயணம் செய்யும் நேரம்
லிம்கா, கிருமிநீக்கம் செய்யப்பட்ட பானமாகையால், பயணிகளுக்கு முற்றிலும் பாதுகாப்பானது.
Limca®
CONTAINS ADDED FLAVOUR. CONTAINS NO FRUIT JUICE / PULP
® THE REGISTERED TRADEMARK OF PARLE (EXPORTS) LTD., BOMBAY.


ராஜினாமா செய்...
ராஜீவ்! ராஜினாமா செய்...
சர்மா உகுத்த கண்ணீர்
மக்களின்
கண்டனம்
இ. காங்கிரஸ்
மலிவான விலையில் மலிவான உற்சாகத்துக்கு கொடைக்கானல் வா ராசா...
அதான் பாக்கெட் சாராயம் மலிவா குடுக்குறியே பத்தாதா...?



கல்கி

1990 ஜூன் 3
மலர் : 48 இதழ் 44
பிரமோதூத வைகாசி 20



ராஜீவ் செய்த நல்ல காரியம்!

சௌதாலாவின் ராஜினாமாவை ஜனநாயக மரபுகளுக்கும் தார்மிக அரசியலுக்கும் வெற்றி என்று கூறலாமேயொழிய, தேவிலால் இந்தச் சம்பவத்தால் படிப்பினை பெற்று விட்டார் என்றோ, இனி வாலைச் சுருட்டிக் கொண்டிருப்பார் என்றோ கருத முடியாது. மாறாக, அடிபட்ட புலியாக தேவிலாலும் அவர் மைந்தர்களும் சீறக்கூடும். பிரதமர் வி. பி. சிங்குக்குத் தலைவலி அதிகரிக்கலாம்.

சென்ற பிப்ரவரியில் இடைத்தேர்தல்களின் போதே மேஹம் தொகுதியில் வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்ததால்தான் மறு தேர்தலுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அப்போதே ஜனநாயக மரபுகளுக்கு ஏற்பச் சௌதாலா தார்மிகப் பொறுப்பேற்று ராஜினாமா செய்திருந்தால் அவர் கௌரவம் உயர்ந்திருக்கும். இப்போது மறுதேர்தலைச் சந்திப்பது அவருக்கு எளிதாகவும் இருந்திருக்கலாம். ஆனால் அதிகார போதை ஆணவப் பிடிவாதத்தை வளர்க்கிறது. முதல்வராக இருந்தபடியே தேர்தலைச் சந்திக்கத் தீர்மானித்தார் சௌதாலா. இதன் நிகர விளைவு மறு தேர்தலில் நின்ற சுயேச்சை வேட்பாளர் அமீர்சிங்கின் படுகொலை.

கொலை செய்தது யார் என்பது புலனாய்வில் பின்னால் தெரிய வரும் என்றாலும் சட்டம் ஒழுங்கு குலைவுக்குத் தார்மிகப் பொறுப்பேற்றுச் சௌதாலா இப்போதாவது ராஜினாமா செய்ய வேண்டியது இன்றியமையாததாகியது. இந்த ஜனநாயக மரபைக் கடைப்பிடிக்க மறுத்தார் சௌதாலா. தேர்தலில் அவரது பிரதான எதிரியான டாங்கி மீது போலீஸ் பாய்ந்தது. அவரைக் குற்றவாளியாக்க முயன்றது. ஜனதாதள அதிருப்தி வேட்பாளரான டாங்கி, தப்பி ஓடி, தலைமறைவாக டில்லியை அடைந்து நீதிமன்றத்தில் பாதுகாப்புக் கோர வேண்டிய நிலை ஏற்பட்டது.

தற்போது சௌதாலா, கட்சி மேலிடத்தின் வற்புறுத்தலுக்கு இணங்க ராஜினாமா செய்தபோதிலும், "ஆட்சியில் நான் இல்லாவிட்டாலும் ஹரியானாவை ஆளப் போவது நான்தானே!" என்று ஆணவத்துடன் பேசுகிறார். அவர் சகோதரர் ரஞ்சித்சிங்கோ, "அண்ணன் இடத்தில் நான்தானே அமர வேண்டும்?" என்ற நோக்கில் தேவிலாலிடம் ஆசி பெற்றார்; என்றாலும் எப்படியோ பேசிச் சமாளித்து, அந்தக் குடும்பத்தை ஒதுக்கி, பனாரசி தாஸை முதல்வராக்கியிருக்கிறது ஜனதாதளத் தலைமை. புதிய முதல்வர் பனாரசி தாஸ், தேவிலாலுக்குக் கடமைப்பட்டவர்தான் என்றாலும், அவர் உறுதியாக இருந்தால், தேவிலால் குடும்பத்தின் செல்வாக்கை எதிர்த்தும், தலையீட்டைத் தவிர்த்தும், நேர்மையுடன் ஆட்சி நடத்த வாய்ப்புண்டு. அதற்கு மத்திய அரசின் ஆதரவும் முழு ஒத்துழைப்பும் அவருக்குக் கிடைக்கும்.

சௌதாலா ராஜினாமாவுக்கு ராஜீவ் காந்தியும் மறைமுகமாக உதவியிருக்கிறார். நேற்று வரை தேவிலாலை ஆதரித்து, அதன் மூலம் வி. பி. சிங்குக்கு ஒரு நெருக்கடியை ஏற்படுத்தி வந்தவர், ஹரியானாவில் அமீர்சிங்கின் படுகொலைக்குப் பிறகு திடுமெனத் திசைமாறி, சௌதாலா அரசை டிஸ்மிஸ் செய்ய வேண்டும், குடியரசுத் தலைவர் ஆட்சியை ஹரியானாவில் கொண்டு வர வேண்டும் என்றெல்லாம் பேச ஆரம்பித்துவிட்டார். இவை அளவு மீறிய கோரிக்கைகள், ஜனநாயக மரபுகளுக்கு முரணானவை என்றாலும், அவரும் அவரது இ. காங்கிரஸ் தோழர்களும் மக்களவையில் அமளி துமளிப் படுத்தியதால், இரு நற்பலன்கள் விளைந்தன. முதலாவது, ஜனதாதளக் கட்சி மெத்தனத்தை உதறி, சௌதாலா பதவியில் நீடிப்பதால் கட்சிக்கு ஏற்படக் கூடிய பேரவமானத்தை உணர்ந்து, செயல்படத் தொடங்கியது. புதிய ஜனதாதளத் தலைவர் பொம்மை, திறம்பட வாதாடி தேவிலாலைப் பணிய வைத்தார். தேவிலாலும் ராஜீவின் ஆதரவு தமக்கு இல்லை என்பதை உணர்ந்ததும் கட்சிக் கட்டளையை வேறு வழியின்றி ஏற்றார்.

உயர்தரமான ஜனநாயகத்துக்குச் சட்டங்கள் எவ்வளவு முக்கியமோ அவ்வளவுக்குத் தார்மிக மரபுகளும் முக்கியம். இதனைத் தலைவர்கள் புரிந்து கொள்ள முடியாமல் அவரவர் சுயநலம் தடுத்து விடுவதுதான் இதுபோன்ற பிரச்னைகள் எழக் காரணம்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

சிம்ரஞ்ஜித்சிங் மான்: மரணத்தின்

அடர்ந்த மூங்கில் காட்டுப் பகுதி. மரத்திலே ஓர் இளைஞர் கட்டப்பட்டு இருக்கிறார். அவருக்கு எதிரே சிறிது தூரத்தில் துப்பாக்கியுடன் ஒரு கான்ஸ்டபிள். சுற்றிலும் சில போலீஸ் உயர் அதிகாரிகள்.

மரத்தில் கட்டப்பட்ட இளைஞனைச் சுடச் சொல்லி கான்ஸ்டபிளுக்கு ஆணை யிடுகிறார் உயர் அதிகாரி! குறி பார்க்கிறார் கான்ஸ்டபிள். அவருக்கு ஏனோ சிறிது தயக்கம். துப்பாக்கியின் குதிரையை விரல் அழுத்த மறுக்கிறது. தயக்கத்தைக் கண்ட அதிகாரி, ''ம்... சுடு...'' என்கிறார். ''இல்லை... நான் இவரைச் சுட மாட்டேன்... ஒரு போலீஸ் அதிகாரியை, எந்த விதமான விசாரணையும் இன்றி, நாய் போல் சுட்டுத் தள்ளுவதற்கு, என் மனச்சாட்சி இடம் தரவில்லை...'' என்று மறுக்கிறார் கான்ஸ்டபிள்.

போலீஸ் உயர் அதிகாரி, ''இல்லை...! அவர் குற்றவாளிதான். நீ சுடத்தான் வேண்டும்; அவர் சாக வேண்டியவர்'' என்று கண்டிப்பான குரலில் கூறியவுடன், கான்ஸ்டபிள், சற்றும் தயங்காமல், ''அதுதான் உங்களுடைய தீர்மானமான கருத்து என்றால், நீங்களாகவே சுட்டுக் கொன்று விடலாமே!'' என்கிறார்.

இந்த பதில், அந்த அதிகாரிகளையே சிந்திக்க வைத்து விட்டது. சித்ரவதைக்குள்ளான போலீஸ் அதிகாரிக்கு விடுதலை கிடைக்கவில்லை என்றாலும் கூட, உயிர்ப் பிச்சை கிடைத்தது. அந்த இளைய, போலீஸ் அதிகாரிதான் சிம்ரஞ்ஜித் சிங்மான். 'சில ஆண்டுகளுக்கு முன் இச் சம்பவம் நடந்தது பீஹார், பூர்னியா மாவட்டம் ஹோஷியாரா என்ற ஊரை ஒட்டிய காடுகளில்...

போலீஸ், சிம்ரஞ்ஜித் சிங் மானுக்குச் செய்த சித்ரவதைகள் கொஞ்ச நஞ்சமில்லை. அமைதியாய் இருந்த மானின் வாழ்க்கையில் புயல் வீச ஆரம்பித்த நாள், அமிர்தசரஸ் பொற்கோவிலினுள், ராணுவம் நுழைந்த தினம்தான். அப்போது மான், மத்திய இண்டஸ்டிரியல் செக்யூரிடி படையின் இயக்குநர் பொறுப்பில் இருந்தார். பொற்கோவிலினுள் ராணுவம் நுழைந்ததைக் கண்டித்து அப்போதைய ஜனாதிபதி ஜெயில்சிங்கிற்கு, ஒரு காரசாரமான கடிதம் எழுதினார். அதோடு நின்று விடாமல், தம் பதவியையும் ராஜினாமா செய்தார்.

ஆனால் மத்திய அரசு, மானின் ராஜினாமாவை ஏற்றுக் கொள்ளுவதற்குப் பதிலாக அவரை டிஸ்மிஸ் செய்தது. பிந்தரன்வாலேவை மதப் பிரசாரகர் என்ற முறையில் மான் பலமுறை சந்தித்ததுண்டு. எனவே தீவிரவாதிகளுடன் தொடர்புடைய போலீஸ் அதிகாரி என்று முத்திரை குத்தப்பட்டார். அரசாங்கம் தன்னைக் கைது செய்யும் என்று எதிர்பார்த்த மான், தலைமறைவாகி விட்டார். மத்திய அரசு, மானைத் தேடிக் கண்டு பிடித்துக் கைது செய்ய உத்தரவிட்டது. இந்திரா காந்தியின் மரணத்துக்குப் பின், ஏறத்தாழ மூன்று ஆண்டுகள் வரை மானின் தலைமறைவு வாழ்க்கை தொடர்ந்தது. ஒரு நாள் இந்திய — நேபாள எல்லையில், இந்தியாவிலிருந்து, தப்ப முயன்ற சிலரைச் சந்தேகத்தின் பேரில் பிடித்த போது, அங்கே மானும் சிக்கிக் கொண்டார்.

மானிடம் திரும்பத் திரும்பக் கேட்கப்பட்ட ஒரே கேள்வி — 'இந்திரா காந்தி கொலையில் 'உங்கள் பங்கு என்ன?' என்பது. 'பங்கு உண்டு' என்று ஒப்புக் கொள்ளும் வரை விட மாட்டோம்! அடிப்போம்!' என்று மிரட்டினார்கள்; அடித்தார்கள். ஆனாலும் மான் சொன்ன ஒரே பதில், ''இந்திராகாந்தி கொலைக்கும், எனக்கும் சம்பந்தமில்லை'' என்பதுதான். போலீஸ் சித்திரவதைகள் தொடர்ந்தன. (அப்போது நடந்தது தான் கட்டுரையின் தொடக்கத்தில் விவரிக்கப்பட்ட சம்பவம்)

பகல்பூர் சிறைக்குச் சிம்ரஞ்ஜித் சிங் மானைக் கொண்டு போன போலீசார், அவரை அங்கே தனிமைச் சிறையில் நிர்வாணமாய் அடைத்து வைத்தனர். பாத இடுக்குகளிலும், மர்ம இடங்களிலும் மின்சார அதிர்ச்சி கொடுத்தனர்.

சிறையில், மானின் தலைமுடியும், தாடியும் கொடூரமாய்ப் பிடுங்கப்பட்டன. அவர் மதச் சடங்குகள் ஆற்ற அனுமதிக்கப்படவில்லை. 'நீ உண்மையை ஒப்புக் கொள்ளாவிட்டால், உன் மனைவியையும், உங்கள் வீட்டுப் பெண்களையும் கற்பழிப்போம்; குடும்பத்தை நிர்மூலமாக்குவோம்!' என்று பயமுறுத்தினார்கள்.

சிறிய கொட்டடியிலே அடைக்கப்பட்ட அவர் அங்கேயே சிறுநீர், மலம் கழித்துக் கொண்டு, அங்கேயே சமைத்தும் சாப்பிட வேண்டும். கொட்டடியின் ஜன்னலைக் கூட இறுக மூடியே வைத்திருப்பார்கள். ரத்த அழுத்த நோய் பாதிப்புக்குள்ளான மான் அதனைக் கட்டுப்படுத்தும் மாத்திரைகள் கேட்ட போது, கொடுக்க மறுத்தார்கள். போலீஸ் சித்ரவதையில் பற்கள் உடைந்து, வாயில் ரத்த காயம் ஏற்பட்டு, சீழ் பிடித்த போது கூட சிகிச்சையளிக்கப்படவில்லை!

பகல்பூர் சிறையிலிருந்து, பைத்தியக்காரர்களை அடைத்து வைக்கும் இடத்துக்கு

பிடியிலிருந்து மக்களவைக்கு...

மாற்றப்பட்டார் மான். நல்ல காலம்! அந்த இடத்தைப் பார்வையிட வந்த ஒரு மாஜிஸ்டிரேட்டிடம் மான் தம்முடைய பரிதாபமான கதையை எடுத்துச் சொல்ல, அவர் மனம் உருகி, மானை அங்கிருந்து உடனடியாய் மாற்ற உத்தரவிட்டார்.

மறுபடியும் மானுக்குத் தனிமைச் சிறை! குடும்பத்தினர், அவரைச் சிறையில் நேரிடையாய்ப் பார்த்துப் பேசத் தடை செய்து, சிறையின் கதவில் உள்ள சிறு சந்து வழியாய்த் தான் பேச வேண்டுமென உத்தரவாகியது. சிறைக் கொடுமைகளைத் தெரிவித்து, ராஜீவ் காந்தியைத் தலையிடக் கோரி அனுப்பிய தந்தி, கவனிக்கப்படவில்லை.

இதில் வேடிக்கையென்னவெனில், ராஜீவ் அரசு, 'பஞ்சாப் பிரச்னைக்குத் தீர்வு காண, உங்கள் ஒத்துழைப்பு தேவை' என்று இடையிடையே மானுக்குத் தூது அனுப்பவும், ஒத்துழைத்தால் பஞ்சாப் முதல்வராக்குவதாய் ஆசை காட்டவும் செய்தது!

இந்தக் கட்டத்தில்தான் பிரபல வழக்கறிஞர் ராம் ஜெத்மலானி சிறையில் மானைச் சந்தித்து ஆறுதல் சொன்னார். ''வன்முறையில் உங்களுக்கு நம்பிக்கை உண்டா?'' என்று மானிடம் ஜெத்மலானி கேட்ட போது, ''என் உடலின் இறுதிச் சொட்டு ரத்தம் இருக்கும்வரை, வன்முறைக்கு எதிராய்க் குரல் கொடுப்பேன்'' என்றார் மான்.

''சிறையில் மான் அனுபவித்த கொடுமைகள் சாத்வீக மனம் கொண்டவரைக் கூட பயங்கரவாதியாய் மாற்றி விடும். ஆனால் மான் இன்னும் காந்திய வழிகளை நம்புவதாய்க் குறிப்பிட்டது மகத்தானது'' என்று ராம் ஜெத்மலானி சென்னையில் ஒரு கூட்டத்தில் பேசும் போது கூறினார்.

மான் சிறையிலிருந்தபடியே நாடாளுமன்றத் தேர்தலில் நின்று வெற்றி பெற, ராஜீவ் காந்தி பதவி விலகு முன், மானைச் சிறையிலிருந்து விடுவித்ததோடு மட்டுமில்லாமல், அவர் மீது இந்திரா காந்தி கொலை தொடர்பாய்ப் போடப்பட்ட வழக்கையும் வாபஸ் பெற்றார்.

விடுதலையான மான், விசேஷ விமானம் மூலமாய் அமிர்தசரஸ் வந்து இறங்கிய போது, சீக்கிய மக்கள் பெருந்திரளாய்க் கூடி அவரை வரவேற்றனர்.

பஞ்சாபியர்கள் மட்டுமின்றி, இந்திய மக்கள் அனைவருமே, சிம்ரஞ்ஜித் சிங் மானை ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக நினைக்க ஆரம்பித்தார்கள். அவரது தலைமையிலும், வழிகாட்டுதலிலும், பஞ்சாபில், தீவிரவாதம் ஒடுங்கும்; அமைதி நிலவும்; ஜனநாயகம் மலரும் என்ற எதிர்பார்ப்பு மக்களிடையே தோன்றியது. 'மான் ஒருவரை வைத்துக் கொண்டே பஞ்சாப் பிரச்னைக்குத் தீர்வு கண்டு விடலாம்' என்று ஜெத்மலானி நம்பிக்கை தெரிவித்தார்.

அதே சமயம், மான் பற்றிய சில சந்தேகங்களும் எழுப்பப்பட்டன. பிந்தரன்வாலேயின் தந்தையிடமிருந்து ஐக்கிய அகாலிக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள மான், எந்த அளவுக்குத் தன்னிச்சையாய்ச் செயல்படுவார்?

ஜெயிலில் இருந்தபடியே மான், அபரிமிதமான ஓட்டு வித்தியாசத்தில் 'தரன் தரன்' தொகுதியில் வெற்றி பெற்றதற்கும், மற்ற தொகுதிகளில் அவரது கட்சியினரும், ஆதரவு பெற்றவர்களும் வெற்றி பெற்றதற்கும், முக்கிய காரணம் அனைத்திந்திய சீக்கிய மாணவர்கள் அமைப்பு அளித்த பேராதரவுதான்.

சீக்கிய மாணவர் அமைப்பிற்கும், காலிஸ்தான் தீவிரவாதிகளுக்கும் நெருக்கமான உறவு உண்டு என்பது ஊரறிந்த ரகசியம்.



• மான்

சொல்லப் போனால், சீக்கிய மாணவர்கள் அமைப்பு, தீவிரவாதிகளின் வழிகாட்டுதல் படியே செயல்பட்டு வருகிறது. எனவே, மான், இந்திய அரசியல் சட்டத்துக்கு உட்பட்டே, பஞ்சாப் பிரச்சினையைப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று கூறினாலும், அவரது இந்த லட்சிய நோக்கை எப்படி நிறைவேற்றிக் கொள்வார் என்று அரசியல் ஆய்வாளர்கள் சந்தேகம் எழுப்பினார்கள்.

இவ்வாறு எழுப்பப்பட்டச் சந்தேகங்கள் மெய்யாகும் வகையில் சில சம்பவங்களும் நடந்து விட்டன:

ஒரு பத்திரிகையாளர்கள் கூட்டத்தில், மானிடம், 'காலிஸ்தான் பற்றி உங்கள் கருத்து என்ன?' என்று கேள்வி கேட்ட போது, மான் பதில் சொல்ல வாய் திறந்தார். அப்போது பக்கத்திலிருந்த தீவிரவாதிகள், அவரைப் பதில் சொல்ல விடாமல் தடுத்து விட்டார்கள்.

பதவி ஏற்ற சில நாட்களுக்குள் பிரதமர் வி. பி. சிங்கும், மற்ற அமைச்சர்களும் பொற்கோவிலுக்கு விஜயம் செய்தார்களல்லவா? அதற்கு முந்தைய தினம், மாலையில் நிருபர்களைச் சந்தித்த போது, 'உள்ளூர் எம். பி. என்கிற முறையில், நான் விமான நிலையத்துக்குச் சென்று பிரதமரை வரவேற்பேன்!' என்று கூறினாலும், மறுநாள் பிரதமரை வரவேற்க மான் போகவில்லை. அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவும் இல்லை. இதற்குக் காரணம், தீவிரவாதிகள் விதித்த தடைதான் என்று நம்பப்படுகிறது.

கிர்பான் இல்லாமல் மக்களவைக்குள் நுழைய மாட்டேன் என்ற பிடிவாதம் ஒரு பக்கமும் 'ஐ. நா. சபையின் மேற்பார்வையில் பஞ்சாபில் தேர்தல் நடத்த வேண்டும்' என்ற அவரது கூற்றும் பஞ்சாப் விஷயத்தில் ஏற்பட்ட நன்நம்பிக்கைகளைக் கரைத்து வருகின்றன. ஓர் உள்நாட்டுத் தேர்தலில் ஐ. நா. வை ஈடுபடுத்த வேண்டும் என்று சொல்வதே பிரிவினைவாதமாகக் கொள்ளப்படுகிறது.



* பொற்கோவிலுக்குப் பிரதமர் விஜயம்

மானைச் சிறையில் சந்தித்து, உதவிகள் பல புரிந்த வழக்கறிஞர் ராம் ஜெத்மலானியும் கூட சமீப காலமாய் மானின் போக்கு மாறி விட்டது குறித்து பகிரங்கமாய் வருத்தப்பட்டு இருக்கிறார். இன்னும் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ளாமல் தேசிய முன்னணி அரசுக்கு தனது ஆதரவை வாபஸ் பெறுவதாய் மான் அறிவித்திருப்பது, பஞ்சாப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கையைக் கொஞ்சம் கொஞ்சமாய்த் தகர்த்துக் கொண்டிருக்கிறது.

சில நாட்களுக்கு முன், ஐக்கிய அகாலி தளத்தின் சார்பாய்த் தேர்தலில் வென்ற சீக்கிய எம். பி. குடியான், படுகொலை செய்யப்பட்டு, சடலம் வாய்க்காலில் தூக்கி எறியப்பட்ட செய்தி நினைவிருக்கலாம். அது, தீவிரவாதிகள், மிதவாதத் தலைவர்களுக்கு விட்ட எச்சரிக்கை என்று சொல்லப்படுகிறது.


தீவிரவாதிகளின் மிரட்டலுக்குப் பணியாமல் சிம்ரஞ்ஜித் சிங்மான் தமது ஆரம்ப கால அமைதிக் கொள்கையில் உறுதியாய் இருந்து வி. பி. சிங்குடன் ஒத்துழைத்தால், நிச்சயமாய்ப் பஞ்சாப் பிரச்னைக்குத் தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கை பஞ்சாப் பிரச்னையை நுணுகி ஆராய்ந்த பலரிடம் உள்ளது.

அத்தகைய நம்பிக்கையைத் தெரிவித்து, பிரபல பஞ்சாபி எழுத்தாளர் கே. எஸ். துக்கல் மானுக்கு ஒரு பகிரங்கக் கடிதம் எழுதியுள்ளார். இதில் பஞ்சாப் பிரச்னையின் சரித்திரத்தையே சுருக்கமாக வரைந்து விட்டு மானுக்குப் பின்வருமாறு வேண்டுகோள் விடுக்கிறார்:

பஞ்சாப் மக்கள், மத்தியிலும் மாநிலத்திலும் நடந்த அரசியல் நாடகங்களையும் அரசியல்வாதிகளின் அதிகார வேட்கையையும் கண்டு சலித்துப் போயிருந்தார்கள். அந்த வேளையில்தான் ஒரு தேவ தூதரைப் போல் தாங்கள் பஞ்சாப் அரசியல் வானில் பிரவேசித்தீர்கள். ஓர் உயர் போலீஸ் அதிகாரிக்கே உரிய நல்லொழுக்கமும் கட்டுப்பாடும் படைத்த நீங்கள், பகல்பூர் சிறையில் அனுபவித்தத் துன்பத் தீயில் புடம் போடப்பட்டு வெளி வந்திருந்தீர்கள். இதனால் பஞ்சாப் மக்களின் துன்பமும் துயரமும் வேறு யாரையும் விட உங்களுக்கே அதிகம் புரியும் என்று நம்பினோம். அத் துன்பத்தைப் போக்க வழி, வன்முறையல்ல என்பதையும் தாங்கள் அனுபவபூர்வமாக உணர்ந்திருப்பீர்கள் என்று கருதினோம்.

ஆனால் வெகு சீக்கிரத்திலேயே எங்களுக்கு ஏமாற்றத்தை அளித்து விட்டீர்கள். போகட்டும்; நம்பிக்கை முற்றிலும் அழியு

ஒரு போஸ்ட் கார்டு போதும்!...



ஒரு போஸ்ட் கார்டு உங்களது வாழ்க்கையில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தப் போகிறது என்று நாங்கள் சொன்னால் உங்களுக்கு வியப்பாகத் தோன்றலாம். ஆனால் உண்மை அது தான்!.

★ ஆங்கிலத்தில் பேசினால் ஏதாவது தவறாகப் பேசி விடுவோமோ என்ற தயக்கமின்றி சரளமாகப் பேச...

★ இலக்கணப் பிழை ஏற்பட்டுவிடுமோ என்ற பயமின்றி ஆங்கிலத்தில் கடிதங்கள், கட்டுரைகள் எழுதும் ஆற்றல் பெற...

தமிழகத்தின் தலைசிறந்த கல்வி நிலையம் என்ற தனிப்புகழ் பெற்ற விவேகானந்தா கல்வி நிலையத்தினர் மிகச் சிறந்த முறையில் பயிற்சியளித்து வருகிறார்கள்.

வீட்டிலிருந்தபடியே ஓய்வு நேரத்தில் தமிழில் தபால் மூலம் நீங்களும் இப்பயிற்சியை மேற்கொள்ளலாம்.

"நேர்முகப் பயிற்சியும் உண்டு"

மேலும் தகவல் அறிய ஒரு போஸ்ட் கார்டில் உங்களது விருப்பத்தை எழுதி எங்களுக்கு அனுப்பினால் போதும்!

பயிற்சி பற்றிய தகவல் புத்தகத்தையும், விண்ணப்ப மனுவையும் உடனே உங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்.

உங்களது முன்னேற்றத்தின் முதல் முயற்சி இன்றே துவங்கட்டும்!

நீங்கள் கடிதம் எழுத வேண்டிய முகவரி:

விவேகானந்தா கல்வி நிலையம்

தபால் பெட்டி எண்: 4986, 9, மேட்லி ரோடு, தி.நகர், சென்னை-17.

முன் பஞ்சாபைக் காப்பாற்றிக் கறை சேர்க்க முடியுமா என்று பாருங்கள். பழைய சம்பவங்களை மன்னித்து மறந்து விடுங்கள். அமைதிக்கு ஒரு வாய்ப்புக் கொடுங்கள். வலிமையானவர்களுக்கு மேலும் வலிமை சேர்ப்பது அஹிம்சையே. சீக்கியர் அஹிம்சையைக் கையாண்டு அற்புதமான விளைவுகளை ஏற்படுத்திய காலம் உண்டு. கையில் நிரந்தரமாக கிர்பான் வைத்திருந்தாலும் அவர்கள் அதனை உறையிலிருந்து உருவியதில்லை. இதுவே அவர்களின் பலம்.

வன்முறையாளராகத் திகழ்ந்த சுதந்திரப் போராட்ட வீரர் பகத் சிங் கூட தமது இறுதிக் காலத்தில் மாறி விட்டார். "நான் வன்முறையாளனாக இருந்தது உண்மை. ஆனால் நான் இனி பயங்கரவாதத்தை விட்டொழிப்பேன். இப்போது நான் புரட்சியாளன்... துப்பாக்கியும் வெடி குண்டும் கொண்டு பிரச்னைகளைத் தீர்க்க முடியாது என்று உணர்ந்து நம்புகிற புரட்சியாளன்" என்று கூறினார்.

அன்புள்ள சர்தார் மான்! இப்போதும் ஒன்றும் கெட்டு விடவில்லை. உங்களுக்குப் பஞ்சாப் மக்களின் பேராதரவு இருக்கிறது. பஞ்சாபி இல்லங்களில் துயரமும் துக்கமும் ஏற்படுத்தியுள்ள வன்முறைப் பாதையிலிருந்து இளைஞர்களை விலக்கி, வசப்படுத்தி, நேர்வழிப்படுத்த உங்களால் மட்டுமே முடியும்.

எனது கவிதை ஒன்றை எழுதி இக் கடிதத்தை முடிக்கிறேன்.

நாம் போர் செய்தது போதும்,
அன்புக்கு ஒரு வாய்ப்பளிப்போம்,
வேறொரு கீதம் இசைப்போம்,
மற்றொரு மெட்டில் முயல்வோம்.

— நமது நிருபர்களின் தொகுப்பு.

மேலட்டை வண்ணப்படம்:
தில்லி ராஜு.



ஆசைகள்!

பனிதூறும் வைகறையில் நடக்கப் பிடிக்கும்
  படிமீது குளக்கரையில் அமரும் போழ்தில்
கனிவான தேவாரம் காதில் மேவ
  கண்மூடிச் சிலநேரம் இருக்கப் பிடிக்கும்
இனிதாகத் தென்றலுடன் கைகள் கோத்து
  இதமாகத் தோப்புகளில் உலவப் பிடிக்கும்
தனியாகச் சாய்ந்தபடி கஜலின் இசையில்
  தவழ்கின்ற உணர்வுகளைப் பருகப் பிடிக்கும்.

உற்றதொரு தோழிமுகம் சன்னல் பக்கம்
  ஓர்முறுவல் பூக்கின்ற நேரம் பிடிக்கும்.
முற்றத்தில் கிப்ரானின் வரிகள் தம்மை
  முறுக்காக மதியத்தில் கொரிக்கப் பிடிக்கும்.
பெற்றவளைக் கால்பிடித்துத் தூங்கச் செய்து
  பிறகேநான் படுக்கைக்குச் செல்லப் பிடிக்கும்.
கற்றவரை விடமழைத்து கனிகள் தந்து
  காலத்தின் கருப்பொருளைப் பேசப் பிடிக்கும்.

சின்னதொரு என்குடிசை கொல்லைப் பக்கம்
  சந்தமுடன் சிந்துகளைச் செய்யப் பிடிக்கும்.
மின்னுகிற விண்மீன்கள் சூழும் நிலவில்
  மெல்லவரும் கீர்த்தனைகள் கேட்கப் பிடிக்கும்.
புன்னைவனக் குயில்பாட நாளை மண்ணில்
  புதுவிடியல் மலருமென ஏங்கப் பிடிக்கும்.
என்னைதினம் சிந்தனையில் தனிமைத் தவத்தில்
  ஏற்றமுழு மானுடனாய் செதுக்கப் பிடிக்கும்!

— "அடியார்க்கு நல்லான்"



* மகானுபாவர்!

அரியக்குடி என்றொரு மகானுபாவர்!

இறைவனைத் தாமே வணங்கித் துதித்ததுடன் நில்லாமல், இறைவனை வணங்கியவர்களையும் வணங்கித் துதித்தார் எளிமையே உருவான தியாகராஜர்.

''எத்தனை மகானுபாவர்கள் உள்ளனரோ அத்தனை பேரையும் வணங்குகிறேன்'' என்றார். மகானுபாவர்களின் இயல்புகள் என்னென்ன என்பதை அந்தப் பாடலில் பட்டியலிடுகிறார். அவற்றுள் ஒன்று:

''எளியவரைக் காக்கும் பரமாத்மாவாகிய உன்னைக் குறித்துப் பரமானந்தத்தை அளிக்கும் உண்மையான பக்திமார்க்கத்துடன் இசை பாடி, அளவளாவி, ஸ்வரம், லயம், ராகம் முதலியவற்றை அறிந்தவர்கள்.''

இத்தகைய மகானுபாவர்தான் அரியக்குடி ஸ்ரீ ராமானுஜ அய்யங்கார்.

எனவேதான் அவரது நூற்றாண்டு விழாவில் கச்சேரி செய்த ஸ்ரீமதி எம். எஸ்., எடுத்த எடுப்பிலேயே ''எந்தரோ மஹானுபாவுலு'' என்ற ஸ்ரீராகக் கீர்த்தனையைப் பாட ஆரம்பித்தார். கேட்டவர்கள் உடனே அந்தப் பொருத்தத்தை உணர்ந்து மெய் சிலிர்க்க, அப்புறம் மேலே மேலே பாடப்பெற்ற பாடல்கள் எல்லாம் ஆத்மானந்த அனுபவத்தை முழுமையாக ரசிகர்களுக்கு வழங்கின.

இப்படி ரசிகர்களின் உள்ளங்களைப் புரிந்து கொண்டு அவர்களுக்கு ஏற்பப் பாடும் ஆற்றல் அரியக்குடிக்கும் இருந்தது. இந்த ஆற்றலை அவர் எவ்வாறு பெற்றார் என்றால், அவரே ஒரு ரசிகராக இருந்ததனால்தான் பெற்றார்! ரசிகனுக்குத்தானே ரசிகனின் தேவை புரியும்? அதுதான் அரியக்குடியின் தனிச்சிறப்பு. அவர் வெற்றியின் அடிப்படையும் இதுவே.

'அவர் கச்சேரி எதுவும் சோடை போகாது' என்பார்கள். 'கச்சேரி பந்தாவை அமைத்துத் தந்ததே அவர்தான்' என்பார்கள். 'ஏராள தமிழ்க் கீர்த்தனைகளைப் பாடினார்' என்பார்கள். 'பக்கவாத்தியக்காரர்களைச் சோதிக்க மாட்டார்' என்பார்கள். 'கன ராகங்களைத் தேர்ந்தெடுப்பார், துல்லியமாக வடிவம் தெரியப் பாடுவார், சுவரப் பிரஸ்தாரங்களை அளவுக்கதிகமாகக் கையாள மாட்டார்' என்பார்கள். எல்லாவற்றுக்கும் அடிப்படை அவரது ரசிக உள்ளம்.


அகில இந்திய ரேடியோ சார்பில், ''க்ஷேத்ரக்ஞர் பதங்களைப் பாட வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார், டி. சங்கரன். ''எத்தனை நேரம் பாட வேண்டும்? என்றைக்கு?'' என்று கேட்டார் அரியக்குடி. ''ஒரு மாதம் அவகாசம் இருக்கிறது; ஒரு மணி நேரம் பாடணும்'' என்றார் சங்கரன்.

''மன்னிக்கணும்'' என்றார் அரியக்குடி. ''ஒரு மணி நேரம் என்றால், எட்டுப் பாட்டாவது பாடணும். நான் இப்போது பாடிக் கொண்டிருப்பதையெல்லாம் ஒதுக்கி விட்டு, மத்தியம காலத்திலிருந்து விளம்ப காலத்துக்கு மாறி சாதகம் பண்ணணும். ஒரு மாத அவகாசம் போதாது!''

இந்தப் பதிலில் கலைஞன் மட்டுமா இருக்கிறான்? ரசிகனுக்கு நியாயம் வழங்க வேண்டிய கடமை தனக்கு இருப்பதைப் புரிந்து கொண்ட ரசிக உள்ளம் அல்லவா பேசியிருக்கிறது! கலை உள்ளம் மட்டுமென்றால் ''பாடுகிறேன்'' என்றல்லவா பதில் கூறியிருக்கும்!

ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆண்டாள் சந்நிதியில் இரண்டு நாள் முழு திருப்பாவைக்

* மதுரை என். கிருஷ்ணன்



* பி. ராஜம் அய்யர்



* கே. வி. நாராயணசாமி



கச்சேரி செய்ய ஒப்புக் கொண்டிருந்தார் அரியக்குடி. இரண்டாம் நிகழ்ச்சியின் போது ஒரு ரசிகர் எழுந்து, "காம்போதியில் ஸ்ரீ சுப்பிரமண்யாய பாட வேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார். "இங்கே முழுக்க முழுக்க ஆண்டாள் பாசுரங்கள் பாடுவதாக ஏற்பாடு..." என்று சொல்லிப் பார்த்தார் அரியக்குடி. ரசிகரோ, "ரொம்ப ஆசையாய் இருக்கிறது" என்றார். உடனே ஸ்ரீ சுப்ரமண்யாய ஆரம்பித்து விட்டார் ரசிகஉள்ளம்கொண்ட கலைஞர் அரியக்குடி. நிகழ்ச்சி ஏற்பாடு செய்தவர்களைப் பின்னால் சமாதானப்படுத்துவது அவருக்குச் சிரமமாக இல்லை.


அரியக்குடிக்கு மிகச் சிறப்பான விழா அவர் வாழ்நாளிலேயே 73வது வயதில் நடைபெற்றது. ராஜாஜி, மைசூர் மகாராஜா, பிரதம நீதிபதி பி. வி. ராஜமன்னார், ஸி. பி. ராமசுவாமி அய்யர் என்று விழா அமைப்பாளர் குழுவில் ஏகப்பட்ட பெரும்புள்ளிகள் அங்கம் வகித்து, யானையை விட்டு மாலை போட்டு வரவேற்கச் செய்து... ஏக தடபுடல்!

இப்போது நூற்றாண்டு விழாவில் முக்கியத்துவம் என்னவென்றால் அவருடைய சீடர்கள் மூவர் பி. ராஜம் அய்யர், கே. வி. நாராயணசாமி, மதுரை என். கிருஷ்ணன் ஆகியோர் முன்னின்று இதர நிறுவனங்கள் துணையுடன் நடத்துவது தான். "ஆண்டு முழுவதும் பலவாறு விழாக்கள் நடக்கட்டும்; ஆனால் விழாவை விட முக்கியம், அரியக்குடி பாணியில் பாட பல சீடர்களை இந்த அரியக்குடி சீடர்கள் உருவாக்குவதுதான்" என்று செம்மங்குடி அன்று விழா மேடையில் சொன்னார்.

நூற்றாண்டு விழாவில் கூறப்பட்ட நூற்றில் ஒரு வார்த்தை!

தொகுப்பு: **திருபர்கள்.**

ஆச்சர்யம் அளிக்கும் அமைச்சர்!



* தூக்கம் கெட்டது!

●● இந்தியாவுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி, சுமுகமாகப் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ளும்படி பாகிஸ்தானுக்குச் சீனா அறிவுரை வழங்கியதற்குக் காரணம் யார் தெரியுமா? சாட்சாத் தேவிலால்தான்! தேவிலால் சீனாவுக்குப் போன போது, சீனத் தலைவர்களுடன் பேசி இதைச் சாதித்தாராம். 'தாவ்'வின் ஆதரவாளர்கள் பரப்பி வரும் செய்தி இது!

●● வெகு எளிமையான வாழ்க்கை முறைகள் அமைத்துக் கொண்டுள்ளவர் நிதி அமைச்சர் மது தண்டவதே. தில்லியில் இரண்டு நாட்கள் ஆசிய அபிவிருத்தி வங்கிக் கூட்டம் நடந்த போது, ஐந்து நட்சத்திர ஓட்டலில் தங்க வேண்டி வந்தது. சரியாகத் தூங்க முடியாமல் தவித்தாராம். இது முடிந்த கையோடு, வாஷிங்டனில் இன்டர்நேஷனல் மானிடரி ஃபண்ட் கூட்டத்துக்குப் போனால், அங்கேயும் ஐந்து நட்சத்திர ஓட்டல் வாசம்! தந்தவதேக்குப் பெரிய வதையாகப் போய் விட்டதாம். நிதியமைச்சரின் வீடு ரொம்பவும் சாதாரணமானது: பெரிய சோபா செட்டுக்கள் கிடையாது: டிவி கூட கறுப்பு — வெள்ளைதான்.

●● புதிய அமைச்சர், அரங்கில் ஸ்ரீதரனின் எளிமையான போக்கு, எல்லோருக்கும் வியப்பாக இருக்கிறது. தொட்டதற்கெல்லாம் துள்ளிக் குதிக்காமல், அருண் நேருவின் வர்த்தக அமைச்சகத்தில் இவர் அமைதியாகப் பணியாற்றுவது, அங்குள்ள அதிகாரிகளுக்கு நிம்மதியாக இருக்கிறதாம்.

தொகுப்பு: **சித்தார்த்.**



* சீனத் தலைவர்கள் மீது செல்வாக்கு!

டிங்டாங் டில்லி!



மணல்வெளி மான்கள் 21

ஒவ்வொருவராக வந்து பார்த்து விட்டுப் போனார்கள். பாவடி வீதி, சன்னிதித் தெரு, பஜார் வீதி.... இங்கிருந்து சைக்கிள்களும் மொபெட்களும் ஆஸ்பத்திரி மைதானத்தில் வந்து வந்து நின்றன. ஓரிரண்டு பெண்கள்தான் வந்தார்கள். வெயில் தணிந்து மாலை வந்ததும் பெண்கள் கூட்டம் வரும்.

கௌதமுக்கு நலம் சொல்லிச் சொல்லி அலுத்துவிட்டது. நடு முதுகிலும் அடிவயிற்றிலும் இம்சையான வலி. இன்னும் ஒரு நாள் பெட்ரெஸ்ட் தேவையாம். டாக்டர் நிர்ப்பந்தித்தார். இல்லையென்றால் இப்படி காட்சிப் பொருளாக, ஏன் அனுதாபத்திற்குரிய உருவமாகக் கட்டிலில் படுத்திருக்க வேண்டாம்.

காலையில் முதல் ட்ரிப் எடுக்கும் முன்பு புல்மேட்டுப் பஸ் டிரைவர் சின்னக் கண்ணு வந்து பார்த்து விட்டுப் போனான்.

''வண்டி ஸ்டேஷன்லதானே இருக்கு?'' என்று கேட்டான் கௌதம்.

உன்னை இட்டாந்து ஆஸ்பத்திரிலே சேத்ததுதான் லாஸ்ட் சிங்கிள். அப்பறமா வண்டியை எடுத்துனு போயி ஷெட்டிலே விட்டுட்டு நமக்குத் தெரிஞ்சவர் மோட்டார் சைக்கிள்ளே வந்து ராத்திரியே இங்கேயே தங்கிட்டேன்.''


கௌதம் அவனை நெகிழ்ச்சியோடு பார்த்தான்.

''இந்த ஊர் விரோதம்லாம் ஒனக்கு இன்னாத்துக்கு? நாம இன்னா பொறம் போக்கா....? கண்ட கயிலாத்துக்குங்ககிட்டே ஒதை துண்ணுட்டு நடுரோட்ல வியுந்து கெடக்கற குடும்பத்திலயா பொறந்திருக்கோம்?''

சின்னக்கண்ணு சொந்த ஊர் உரிமையில் பேசிக் கொண்டே சூடானான்.

''இவனுங்களுக்கு நாம யாருன்னு காட்டிடணும். எவெவன் ஒம் மேலே கையை வச்சானுங்களோ ஒவ்வொர்த்தனுக்கும் புல்மேட்டுக்காரன்னா யாருன்னு தண்ணி காட்டிடணும்! முட்டிக்கு முட்டி பேத்துடணும்!''

கௌதம் சின்னக்கண்ணுவின் புல்



மேட்டு ரத்தம் கொந்தளிப்பதை வேடிக்கை பார்த்தான்.

''நான் இன்ஸ்பெக்டர்கைல விலாவரியா ரிப்போட் குடுத்திருக்கேன். போலீஸ் எதுனா ஆக்ஷன் எடுக்குதுன்னா பாப்பம். ரெண்டுநாள் டயம்... இல்லே நடக்கறதே வேற!''

என்ன நடக்கும் என்று கௌதம் கேட்கவில்லை. தெரியும். புல் மேட்டில் சின்னக்கண்ணு உசுப்பிவிட்டால் பத்துப் பதினைந்து பேர் அரிவாளும் மூங்கிலுமாக பஸ் ஏறி விடுவார்கள்.

விஷயத்திற்கு உருவம் மாறிவிடும்.

உள்ளூர் வெளியூர் என்ற பேதம் முளைக்கும். வலுப்படும். பழைய காயம் மறக்கும். புதிய காயத்திற்கு முக்கியத்துவம் பிறந்து விடும்.

சின்னக்கண்ணு போய் விட்டான்,

பழிக்குப்பழி வாங்கிவிடுவதல்ல. புல் மேட்டுப் பெருமையை நிலை நாட்டுவது தான் துடிப்பு.

உடம்பின் ஒவ்வொரு அங்கமும், விழுந்த அடிகளில் இன்னும் வலித்தது. தன்னால் இவ்வளவு தாங்க முடியுமா? அவனுக்கே வியப்பாக இருந்தது.

இதுவரை பள்ளி ஆசிரியர்கள்... சிறு வயதில் சில பள்ளி நண்பர்கள் தவிர வேறு எவராலும் தான் அடிக்கப்பட்டதில்லை என்பதை நினைத்துப் பார்த்தான்.

அந்த அடிகள் மறக்க முடியாதவைதான். எனினும் இந்த இம்சை அதில் இல்லை. இந்த காரணமற்ற விரோதம், மிருகப்பாய்ச்சல் அதில் இல்லை.

நினைவு எப்படித் தப்பியது? பின்னந் தலையில் விழுந்த பலமான உதைக்குப் பின் தான் நடந்திருக்க வேண்டும். அதற்குப்பின் தான் என்ன நடந்தது என்று தெரியாத சூன்யம்.

நினைவிழந்திருக்கக் கூடாது. இப்படி பஸ்ஸில் கொண்டு வந்து ஆஸ்பத்திரியில் போடுகிற நிலை வந்திருக்கக் கூடாது.

நடந்தது நடந்து விட்டது.

இந்த ஆஸ்பத்திரிப்படுக்கை... வாங்கிய அடிகள். இவை கூட புதிய அனுபவங்கள் தான். தனது உறுதிக்கு உரைகல் இது.

தாக்குவதில் உள்ள வீர்யத்தை விட தாக்கப் படும்போது அசையாத உறுதியோடு தாங்கிக் கொள்வதில் உள்ள வீரியம் என்னவென்று புலப்பட்டது.

இந்த வலியை, அதைத் தொடரும் அவமானத்தை வெகு எளிதில் பண்டமாற்று செய்து விடலாம். அதைச் செய், அதைச் செய் என்றுதான் காலம் நிர்ப்பந்திக்கிறது. சின்னக்கண்ணு காலத்தின் பிரதிநிதி. அவனும் அதையே சிபாரிசு செய்கிறான்.

சுற்றிலும் தீக்கொழுந்து விட்டெறியும் வன்முறை,காலக்காற்றில் எங்கும் பரவி விட்டிருக்கிறது. எந்த சாக்கு வைத்தாவது, எந்தப் பேரிலாவது தன் நிலை நிற்பிற்கு வன்முறை போராடுகிறது.

தனக்குப் பிடிக்காததை, தனது எதிரியென்று கருதுவதை, வன்முறை பஸ்மீகரித்து விடப் பார்க்கிறது. பதைபதைக்கிறது.

பாவம் துளசிங்கம்! அவன் பதற்றத்துக்கு என்ன பரிதாபமான அர்த்தம்! தானே குற்றவாளி என்பதை எவ்வளவு பலவீனமாக வெளிப்படுத்திவிட்டான்.

ஒரு கோணத்தில், வன்முறை தான் தனித்திருப்பதைக்கண்டு மருள்கிறது தெரிகிறது. தான் களைத்து விடுவோம் என்றோ தான் அகற்றப்பட்டுவிடுவோம் என்றோ அது பீதியோடு போராடுகிறது. துளசிங்கம் மாதிரி.

சின்னக்கண்ணுவின் கொதிப்பு வன்முறை விரும்பிக் கேட்கிற எதிரொலி. அப்படி ஒன்று நடந்தால் துளசிங்கத்திற்குத் தான் அதிக மகிழ்ச்சியென்று கௌதமுக்குத் தோன்றியது.

விஷயம் புல் மேட்டுக்குப் போகாமல் இருக்க முடியாது. இன்றோ நாளையோ அப்பா புறப்பட்டு வருவார்.

''ஜாக்கிரதையா இரு'' என்று முத்துமாரி சுனையருகில் அவர் சொன்னது நினைவு வந்தது.

தன் ஜாக்கிரதையைப் பரிசோதிக்கும் நேரம் இதுதான்.

''நான் என்னை இழந்துவிட முடியாது.''

அப்பா போலீஸ்காரர். அடி உதைகளைச் சந்தித்தவர். வாழ்நாளில் எத்தனை பேரை அவர் அடித்து நொறுக்கியிருப்பார் என்பதற்குக் கணக்கு சொல்ல முடியாது. அவருக்கு இது என்னவென்று தெரியும்.

சின்னக்கண்ணு பேச்சுக்கு அவர் மதிப்பளிக்க மாட்டார்.

இந்த விட்டலாபுரத்தின் பாலாற்று நீரில் அவருக்கும் பந்தமிருக்கிறது. அன்னவாசலில் வருஷத்துக்கு ஒரு தரம் மொத்தமாக வாங்கிப் போட்ட நெல்லில், பழைய ரத்த பந்தம் இன்னும் மிச்சமிருக்கும்.

அவரும் விட்டலாபுரத்தை நேசித்தவர். அன்னவாசலை நேசித்தவர். எனவே தான் நேசிப்பதை அவரால் புரிந்து கொள்ள முடிகிறது.

வந்து வந்து பார்த்துவிட்டுப் போகும் இந்த ஜனங்களுக்கு தான் என்ன கொடுத்து விட்டோம்! அன்பும், பிரியமும், புன்னகையும் தவிர கொடுப்பதற்குத் தன்னிடம் என்ன

எழுத்தாளர்: நம்ம தெரு போஸ்ட் மேனுக்கு வாய் ஜாஸ்தி.
மனைவி: ஏன்?
எழுத்தாளர்: இன்னிக்கு ரிட்டன் ஏதும் இல்லையே? முந்தாநாள் நீங்க ஏதும் கதை அனுப்பலையா'ன்னு கேட்கிறான்....

— ஆர். வசந்தகுமார்.

இருந்திருக்கிறது? அதைப் பெரிது படுத்தி விட்டுப் போகிறார்களே.... இதற்கு நான் பந்தப்பட்டு விடவில்லையா?

எட்டு மணிக்கு இன்ஸ்பெக்டர் இருதயராஜ் வந்தார்.

''ஹவ் ஆர் யூ?''

''பரவால்லே சார். நடுமுதுகிலேயும் அடிவயித்திலயும் தான் வலி இருக்கு. தாங்க்யூ..''

அவர் அவன் சொன்ன நன்றியைக் கவனிக்க வில்லை.

''தாங்க்யூ ஃபார் த காஃபி'' என்று காலையில் அவர் அனுப்பிய காப்பியை நினைவு கூர்ந்தான்.

''இட்ஸ் ஆல்ரைட். ஒரு கான்ஸ்டபிளை அனுப்பறேன். ஸ்டேட்மெண்ட் ஒண்ணு தர வேண்டி இருக்கும்.''

''எதுக்கு சார்?''

''நடந்த அஸால்ட்டுக்கு.''

''ஐம் ஸாரி சார்!''

இன்ஸ்பெக்டர் நிமிர்ந்து அவனைப் பார்த்தார்.

''நான் புகார் குடுக்க விரும்பலே.''

''இது போலீஸ் கேஸ்! உன்னை நான் கம்ப்ளெய்ண்ட் சொல்லச் சொல்லிக் கேக்கலே. நடு ரோட்ல ஒன்னை அடிச்சுப் போட்டுட்டு ஓடியிருக்காங்க. ரூட் பஸ்ல ஒன்னையும் ஒன் சைக்கிளையும் டிரைவர் தூக்கிப் போட்டுட்டு வந்திருக்காரு. அஸால்ட் நடந்தது என் ஜுரிஸ்டிக்ஷன். ஐ யாம் ஆன்ஸரபிள்.''

''இருட்டுலே நடந்தது. யார் அடிச்சாங்கன்னு என்னாலே சொல்ல முடியாது.''

''யாரோ அடிச்சாங்க... அந்த அளவு போதும். விட்டலாபுரத்துக்காரங்களா, அன்னவாசல்காரங்களா யார் மேல ஒனக்குச் சந்தேகம்?''

''எனக்கு குறிப்பா யார் மேலயும் சந்தேகம் இல்லே சார்!''

''ஆர் யூ ட்ரையிங் டு பி மாக்னானிமஸ்?''

''இல்லே சார்!''

''பயப்படறியா?''

''எதுக்குப் பயப்படணும்?'' கௌதம் எதிர்க் கேள்வி போட்டான்.

இன்ஸ்பெக்டர் ஒன்றும் சொல்லவில்லை. யோசிக்கிற மாதிரி அவனைப் பார்த்தார்.

''எனிஹவ் கான்ஸ்டபிள் வருவாரு. ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுக்கணும்.''

''என்னன்னு?''

''நடந்ததைப் பத்தி.''

கௌதம் ஏதோ சொல்ல வாயெடுத்தான். அதற்குள் இன்ஸ்பெக்டர் புறப்பட்டுவிட்டார்.

எங்கிருந்து ஆரம்பிப்பது? கிணற்றுக்காரனிடமிருந்தா.... கிணற்றில் பைப் வருகிறவரை காத்திருந்த போது ரஞ்சிதத்தின் கோழி வந்ததிலிருந்தா.... மகமாயி கோயிலுக்குப் பம்ப் ஷெட் போடக்கிணறு பார்க்கப் போனதிலிருந்தா....

தாக்கியவர்கள் பூந்துறை டீக்கடையில் உட்கார்ந்திருந்த இளைஞர்களா? இருக்க முடியாது. அவ்வளவு வெறுப்பு அவர்களுக்கு வர நியாயமில்லை. வேறு ஆட்கள்... அடியாட்கள். துளசிங்கத்தின் தூரத்து நமுட்டுச் சிரிப்பு தெரிகிறது.

எய்த கையை விட்டுவிட்டு அம்புகளை லாக்கப்பில் அடைத்துச் சித்திரவதை செய்வார்கள். யார் ஆள் வைத்து அவனைத் தாக்கியிருப்பார்கள் என்று போலீஸுக்குத் தெரியாதா என்ன? இதென்ன சர்வதேசக் குற்ற மர்மமா?

தெரியும்! எல்லோருக்கும் எல்லாம் தெரியும். குற்றவாளி யாரென்று தெரியாதது இங்கு பிரச்னை அல்ல. குற்றங்களின் மூல வேரை வெட்டி எறிய இங்கே எவரும் விரும்பவில்லை. அதனால் முளைக்கும் புதிய பிரச்னைகளுக்கு இவர்கள் அஞ்சுகிறார்கள்.

ஒரு சங்கிலி மற்றொரு சங்கிலியில் கோர்த்து வாங்கிக் கொண்டு போய் அரசியலில் முடிந்து விடும். இன்ஸ்பெக்டர் இருதயராஜ் கூட வெறும் அதிகாரிதானே!

என்னை ஆள் வைத்துத் துளசிங்கம் தாக்கியிருப்பான் என்று என்வாயால் நான் சொன்ன பிறகு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று போலீஸ் காத்திருக்கிறதா?

கௌதம் கட்டில் விளிம்புக்கு மேல் தலை உயர்த்தி வைத்தான்.

அப்படியே ஒரு புகார் கொடுத்தால் கூட விசாரித்துவிட்டு ஆதாரமற்றது என்று குப்பையில் காகிதத்தை எறிவது போல் குறிப்பு எழுதிவிடும். தேவையில்லை! அப்படி ஒரு புகார் தருவதில் அர்த்தமுமில்லை.

நான் ஏன் தாக்கப்பட்டேன் என்று ஊருக்குத் தெரியும். இது போதும். அடுத்து என்ன செய்வான் என்று ஊரும் தாக்கியவனும் காத்திருப்பார்கள்.

காத்திருக்கட்டும். பிரச்னை நான் அல்ல. நான் தாக்கப்பட்டதல்ல. வன்முறையின் பிரச்னை வன்முறையே தான். அதன் விளைவுக்கு அது காத்திருக்கட்டும். நான் இரை போடப் போவதில்லை; இரையாகவும் போவதில்லை.

மாலையில் சில பெண்கள் வந்தனர். மங்கலட்சுமி வந்து கண்ணீர் விட்டுக் கை கூப்பி விடை பெற்றாள். அவளுக்குக் கூட

அந்த தாக்குதலுக்கு அர்த்தம் புரிந்திருக்கிறது.

எல்லோரும் போனபின் நித்யா வந்தாள். அந்தத் துணிச்சல் அவனை அசரவைத்தது.

''நீ ஏன் வந்தே?'' என்று கேட்டான்.

அவள் முகம் ஜிவுஜிவென்று சிவந்திருந்தது. மூக்கு துடித்தது. கண்களில் ஏறக்குறைய கண்ணீர்.

''என் இஷ்டம். நான் வந்தேன்.''

''வர்ற வெள்ளிக் கிழமை...''

''அந்தக் கதையை விடு. போலீஸ்ல ரிப்போர்ட் குடுக்க மாட்டேன்னு சொல்லிட்டியாமே?''

''அந்தக் கதை இருக்கட்டும். என் கேள்விக்குப் பதில் சொல்லு... வர்ற வெள்ளிக் கிழமை உன்னைப் பெண் பார்க்க வரப் போறாங்க இல்லே. இப்படி பப்ளிக்கா என்னை ஆஸ்பத்திரிலே பாக்க வந்திருக்கிறே!''

''வெள்ளிக்கிழமை வரும். பொண்ணு பார்க்க எவனும் வரப்போறதில்லே.''

''ஏன்?''

''வெண்டைக்கா! எவனும் வரமாட்டான். விடு ஒன் கேள்விக்குப் பதில் சொல்லியாச்சு. இப்ப எனக்கு நீ சொல்லு.... ஏன் போலீஸ்ல ரிப்போர்ட் தரமாட்டேண்ணே?''

''ரிப்போர்ட் குடுத்தவுடனே பாஞ்சு போலீஸ் புடிச்சுடுமோ?''

''புடிக்குதோ இல்லியோ நீ குடுக்க வேண்டியது தானே.''

''என்னன்னு குடுக்கச் சொல்றே?''

''இவங்கதான் நான் தாக்கப்பட்டதுக்குக் காரணம்னு.''

''பிரயோஜனமில்லே. நானில்லேன்னு சாட்சி காட்டிடுவாங்க. எத்தினி வேணும்? பத்து சாட்சி போதுமா....''

நித்யா மௌனமானாள்.

''அடி உதை எனக்கு விழுந்ததுன்னா நெனக்கிறே?''

நித்யா அவன் முகத்தையே பார்த்தாள்.

''ஏவினவன் என் மூலமா எல்லாரையும் மெரட்டறான்... உனக்குப் புரியலே?''

''புரியுது!''

அவள் முகம் மேலும் சிவந்தது. பார்வை தீர்க்க மாயிற்று.

''ஒண்ணு சொல்லட்டா?'' என்றான் கௌதம்.

''என்ன?''

''அவனுங்க தாக்கப் போறானுங்கன்னு எனக்கு நல்லாத் தெரியும். நான் தப்பிச்சு ஓடறதா இருந்தா புல்மேட்டு ரோட்ல ஓடியிருக்கலாம். ஆனா ஓடலே.''

அதிகம் பேசியதால் அடிவயிறு வலித்தது. முகத்தைக் சுளித்தான். கை வயிற்றைப் பிடித்தது.

''என்ன கௌதம்?'' அவள் பதறினாள்.

''ஒண்ணுமில்லே... லேசா வலி.''

''டாக்டரைக் கூப்பிடட்டா?''

''ம்ஹூம்ஹூம்.... வேண்டாம்.'' அவன் சுதாரித்து உட்கார்ந்தான்.

அவள் நெருங்கி வந்து நின்றாள்.

''தூர நில்லு... எல்லாரும் பார்த்துட்டிருக்காங்க.''

''பாக்கட்டும்.''

''நீ வந்திருக்க வேண்டாம் நித்யா.''

''சும்மா பூச்சாண்டி காட்டாதே! தேங்கா ஒடைக்கிற மாதிரி வெளிப்படையா வீட்டிலே ஒடைச்சுச் சொல்லிட்டேன்.''

''எதை?''

''எல்லாத்தையும்.''

''அவன் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

''என்ன சொல்றே நித்யா?''

''ஏன் ஒம் மொகம் இப்படி வெளுத்துப் போச்சு?''

''அதை விடு... நீ என்ன சொன்னே வீட்டிலே?''

''அதான் மெரண்டுட்டியா? தோ பார் கௌதம், இந்தக் கண்ணா மூச்சியெல்லாம் எதுக்கு? நம்ம கேஸ் ஸீரியஸ் தானே?''

''இங்கிலீஷ் பேசறே!''

''போர்ச்சுகீஸ்னா கூட இருக்கட்டும். நாம ஸீரியஸ் டைப் தானே?''

''எதுல சொல்றே?''

''மண்ணாங்கட்டி! எதுலசொல்லணுமோ அதில.''

''நான் எப்ப இல்லேன்னேன்....''

''இது சும்மா கண்ணுக்குட்டி... நாய்க்குட்டி விவகாரம் இல்லியே?''

அவள் முகத்தில் சுடர் விட்ட நேர்மையின் ஜ்வலிப்பை ரசித்தான் கௌதம்.

''உன் ரசனையை அப்பறமா வச்சிக்கோ. பதில் சொல்லு.''

''இதுக்கெல்லாம் பதில் கேக்கறமாதிரி இன்னிக்கு ஒனக்கு என்னமோ ஆயிருக்கு.''

''நேத்து ஒனக்கு என்னவோ ஆச்சு இல்லே?''


அவனுக்கு முதுகு துடித்தது.

''அது காதுல விழுந்ததுமே எனக்கும் என்னவோ ஆய்ப்போச்சு. ஒளிவு மறைவு தேவையில்லேன்னு தோணிட்டது.''


கனவின் மிதவையிலிருந்து, கைவசத்தின் இட்டவட்டமான பரிமாணகளுக்கு, அதன் பிரச்னைகளோடு — அதன் பந்தத்தோடு — இன்னும் சரியாய்ச் சொன்னால் — அதன் சங்கிலிகளோடு நித்யாவுக்கும் அவனுக்குமான உறவு வடிவ பூர்த்தி பெற்றதாக உணர்ந்தான் கௌதம்.

அதற்கு இன்னும் தான் மனசளவில் தயாராகவில்லை என்று அவனுக்குத் தோன்றியது. மற்றொரு பக்கம் மனசு விம்மிற்று.

(தொடரும்)







இருட்டில் இருந்தவள்

வனஜாவும் வந்திருந்தாள்.

இந்தச் சோகத்திலும் இவள் என்ன அழகு! என்ற எண்ணம்தான் அவளை அடையாளம் கண்டு கொண்டதன் முதல் அறிகுறியாக எழுந்தது ஹேமாவின் மனத்தில். உடனேயே: அம்மா பார்க்காமலிருக்க வேண்டுமே!'

அம்மா இங்கே ஹாலில் இல்லை. தனியாக நேற்றிரவு ஒருவேளை அப்பாவின் பக்கத்தில் அழுது புரண்டிருப்பாள். இப்போது குனிந்த தலையுடன் உள் அறையில் உட்கார்ந்திருப்பவள் யார் வந்தார்கள், யார் போனார்கள் என்று கவனித்துக் கூட இருக்க மாட்டாள். துக்கம் கேட்க வந்த மற்றவர்களைப் போல் வனஜா உள்ளே வந்து அம்மாவிடம் அனுதாபம் தெரிவிக்கத்தான் முடியுமா? அம்மாவின் கழுத்தில் தாலி இருக்கிறது, அகற்ற. வனஜாவின் கழுத்தில் இல்லை. அந்த வேற்றுமையைத் தவிர இருவர் துக்கமும் ஒன்றுதான். யாருக்கு யார் அனுதாபம் தெரிவிப்பது? மேலும், வனஜா உள்ளே வருவதை யார் அனுமதிப்பார்கள் — இப்போது அதிர்ச்சி கலந்த சுவாரஸ்யத்துடன் அவளைப் பார்ப்பவர்கள் உட்பட?

இருவர் துக்கமும் ஒன்றுதானா என்ற கேள்வி ஹேமாவிடம் எழுந்தது. அங்கீகரிக்கப்பட்ட துக்கம் அம்மாவுடையது. இப்போது கூட அவள் ஹாலுக்கு வந்து கணவனின் சடலத்தின் மேல் விழுந்து கதறியழலாம். வந்திருக்கும் கூட்டம் ஆமோதிக்கும், அனுதாபம் காட்டும், தொட்டுத் தேற்றும். வனஜா அப்படிச் செய்ய முடியாது. அவளுக்கும் அப்பாவுக்குமிடை இருந்த உறவு ஊரறிந்த ரகசியம்தான் என்றாலும், ஊரறிந்த ரகசியம் என்ற நிலைக்கு மேல் இம்மியளவு கூட அது தாண்டி வரமுடியாது.

ஹேமாவுக்கு ஓடிச் சென்று அவளிடம் ஆறுதலாய் ஏதாவது சொல்லிவிட்டு வர வேண்டும் போல் இருந்தது.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன் ஹேமா பதினைந்து வயதுச் சிறுமியாக இருந்த போது வனஜாவை இருமுறை சந்தித்திருக்கிறாள். பிறகு ஒருதரம் இருபதாம் வயதில், தன் திருமணத்தின் போது. இப்போது இந்த முப்பது வயதுக்காரியை வனஜாவுக்கு ஒருவேளை அடையாளம் தெரியாவிட்டாலும் 'நான்தான் ஹேமா' என்று சொல்லிக் கொள்ளத் தயங்க வேண்டியதில்லை. அவர்களுக்கு ஒருவரையொருவர் சட்டென்று பிடித்துப் போயிருந்தது அந்தப் பழைய சந்திப்புகளில். ''உங்க மகள் உங்க மாதிரியே அழகு'' என்று வனஜா அப்பாவிடம் பாராட்டினாள் முதல் சந்திப்பில். ஒரு நாள் மாலை ஹேமா ஒரு பள்ளித்தோழியைப் பார்த்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருக்கையில் எதிரே அப்பா அவளுக்குப் பரிச்சயமில்லாத ஒரு மங்கையுடன் நடந்து வந்த போதுதான் நிகழ்ந்திருந்தது அந்த முதல் சந்திப்பு. அப்பா ''ஹாய் ஹேமா, என்ன, சிநேகிதி வீட்டுக்குப் போய்ட்டு வரியா?'' என்று சகஜமாய் விசாரித்தபோது அந்தப் புதியவளின் முகம் கலவரமடைந்தது. ஆனால் அப்பாவோ தொடர்ந்து, ''என்ன பயந்துட்டே வனஜா? இந்த ஹேமா என் மகள்தான். ரொம்ப முற்போக்கான மனம். உன்னை நிச்சயம் ஏத்துப்பா. ஹேமுக்குட்டி, திஸ் இஸ் வனஜா. என் சிநேகிதி'' என்று சிரித்தார்.

அந்த மாலை நேரப் பொற் கதிரவனின் ஒரு ரேகை இறங்கி வந்து பெண்ணாய் நிற்பது போல் ஒளி மயமாகத் திகழ்ந்தவளை நோக்கி ஹேமா பிரமித்து நிற்கையில்தான் அந்த வனஜாவே கலவரம் தளர்ந்து, புன்னகையுடன் ''உங்க மகள் உங்க மாதிரியே அழகு'' என்று அப்பாவிடம் சொன்னாள். ஹேமா பெருமையில் மிதந்தாள். அழகுக்காகப் புகழப்படுவது — அதுவும் சினிமா நட்சத்திரம் போன்ற ஒரு பேரழகியால்! பதினைந்து வயதில் அது ஒரு போதையாய் இருந்தது. அப்பா ஹேமாவின் தோளை அணைத்து ''மகள்னு சொல்றது கூடச் சரியில்லே. மகன். ஷி இஸ் மை ஸன்'' என்று கூற, வனஜா ''சரியான அப்பாச் செல்லம் போலிருக்கு!'' என்று பூவாய்ச் சிரிக்க, ஹேமாவுக்கு அவ்விருவரையும் சேர்த்துத் தன்னுடன் அணைத்துக் கொள்ளத் தோன்றியது. அம்மாவும் அவளை 'அப்பாச் செல்லம்' என்று சொல்வதுண்டு. ஆனால் புகழ்ச்சியாய் அல்ல. ''அவர் செல்லம் கொடுத்துக் கொடுத்து நீ குட்டிச் சுவராய்ப் போய்க்கிட்டிருக்கே. வீட்டில் எதையும் கவனிக்கிறதில்லை. என் பேச்சைக் கேட்கிறதில்லை'' என்று கடிந்து கூறுவாள். அது எங்கே, இந்தப் பெருமை எங்கே!

இரண்டாம் முறை அவள் வனஜாவைச் சந்தித்தது அப்பாவே ஏற்படுத்திய சந்தர்ப்

ஆர். சூடாமணி

பம். மகளை அழைத்துக் கொண்டு ஒரு நாலு நட்சத்திர ஓட்டலுக்கு அவர் சென்ற போது அங்கு வனஜா இவர்களுக்காகக் காத்திருப்பதை ஹேமா கண்டாள். அப்பா இருவரையும் 'குடும்ப அறை'க்கு அழைத்துச் சென்றார். சுவையான பம்பாய் உணவு. அதற்கு மேல் சுவையான கலைப் பேச்சு. அப்பா ஒரு தனியார் நிறுவன உத்தியோகஸ்தர் என்பதைவிட ஓர் அமெச்சூர் ஓவியர் என்பது தான் அவரைப் பொறுத்தவரை முக்கிய விஷயம். சில கண்காட்சிகள் நடத்தியிருந்தார். சென்னையின் சிறந்த கலைஞர்கள் பட்டியலில் மெள்ள மெள்ள இடம் பெற்றுக் கொண்டிருந்தார். வனஜா ஒரு பள்ளியில் ஓவிய ஆசிரியை. ஒருகால் அவர்கள் அறிமுகம் அந்த வகையில் தொடங்கியிருக்கலாம் என்று பின்னால் ஹேமா நினைத்துக் கொண்டதுண்டு.

கண்களில் ஆர்வ ஒளி மின்ன அவ்விருவரும் இந்தியக் கலை, மேனாட்டுக் கலை, மரபு உத்திகள், தற்காலப் போக்குகள் என்று விதவிதமாய்க் கலையின் உயிர் நாடியை ஆராய்ந்து கொண்டிருந்ததை ஒரு பக்திப் பரவசத்துடன் மௌனமாய்ச் செவியுற்றவாறு அமர்ந்திருந்த ஹேமா, 'அடடா, இப்படிப்பட்ட ஒருத்தியையல்லவா அப்பா மணந்திருக்க வேண்டும்!' என்று எண்ணிக் கொண்டாள். ஒத்த ருசிகளில் மட்டுமல்ல. அழகில், அறிவில், அனைத்திலுமே இவர்கள் தான் பொருத்தமான ஜோடி. அம்மாவும் இருக்கிறாளே — மாநிறமாய், சாதாரணத் தோற்றமாய், சமையலறையைத் தவிர வேறொன்றும் தெரியாதவளாய்!.... 'வனஜா என் தாயாக இருந்தால்!' என்ற ஏக்கம் அந்தப் பதினைந்தாம் வயதில் மிகத் தீவிரமாய் உறைத்தது.

ஒரு வேகத்தில் ஹாலை விட்டுச் சென்று வாசல் வெளி 'கேட்'டிடை வனஜாவை எட்டினாள். எதிரே நின்றாள். பேச முடியவில்லை. பிறகு ஒரு பிரயாசையில், குரல் தாழ, "நான்... ஹேமா" என்றாள்.

மூன்றாம் முறை இவளைச் சந்தித்தது தன் கல்யாணத்தின் போது. அவளை மணக் கோலத்தில் பார்க்க வனஜா விரும்பினாளாம். அந்தச் சந்தர்ப்பத்தில் தன் பெற்றோரிடையே நடந்த வாக்குவாதம் ஹேமாவுக்கு இன்னும் நினைவிருந்தது.

திருமண நாளன்று அம்மாவின் கண்கள் சிவந்திருந்தன. அது அவள் முகத்தைப் பின்னும் விகாரமாக்குவதாய்த் தோன்ற, ஹேமா கல்யாணக் கூட்டத்தில் தொலைவிலிருந்து தன்னைப் புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்த பேரழகியைக் கண்டு பதிலுக்குப் புன்னகை செய்தாள்.

இப்போது வனஜாவிடம் புன்னகை இல்லை. அவள் கண்கள் அழுது சிவந்திருந்தன. ஆனால் அம்மாவைப் போலன்றி இந்தக் கண் சிவப்பும் இவளுக்கு அழகாகவே இருந்தது. இவளுக்கு ஏறத்தாழ அம்மாவின் வயது இருக்கும். ஆனால் அம்மா கிழவி போல் ஆகிவிட்டிருக்க, இவளிடம் இளமை குன்றவில்லை. பத்தாண்டுகளுக்கு முன் தன் திருமணத்தின் போது பார்த்திருந்த வடிவத்தில் அதிக மாற்றமில்லை.

"ஹேமா — எனக்குத் தெரியுமே! எப்படி இருக்கே?"

"நல்லாத்தானிருக்கேன்..." பதிலுக்கு நீங்கள் நலமா என்று கேட்பதா? இந்தச் சந்தர்ப்பத்திலா?

"இப்ப டில்லியிலிருக்கே, இல்ல? குழந்தைக்கு ஆறு வயசு இருக்குமா? பையன் தானே?"

"ஆமாம்."

எப்படித் தெரியும் என்று வியக்கத் தேவையில்லை. அப்பா சொல்லியிருப்பார்.

"எப்ப வந்தே?"

"மூந்தாநாள் காலைல. அப்பாவுக்கு டயபெடீஸ் ரொம்ப முத்திப் போய் கோமாவில் விழுந்ததுமே அம்மா தந்தி கொடுத்துட்டாங்க."

வனஜா பேசவில்லை. தலை கவிழ்ந்து நின்றிருந்தாள். ஹேமா சங்கடப்பட்டாள். என்ன பேசுவது? என்னவென்று ஆறுதல் சொல்வது? இவளோடு பேச ஓடி வந்திருக்கவே வேண்டாம். அர்த்தமற்ற செயல். தன் துயரத்தோடு இவளைத் தனியே போக விட்டிருக்கலாம்.

வனஜா நிமிர்ந்தாள். அழுகையா புன்னகையா என்று புரியாத ஓர் உதட்டசைவோடு ஹேமாவைப் பார்த்துத் தலை அசைத்துவிட்டு விரைந்து நடந்து சென்றாள்.

வீட்டுக்குள் திரும்ப ஹேமா தலை திருப்பிய போது மாடி ஜன்னலில் அம்மாவின் முகம் தெரிந்தது. வனஜாவோடு தான் பேசிக் கொண்டிருந்ததை அவள் பார்த்திருக்க வேண்டும். வெறுமை நிறைந்த அம்முகம் உணர்ச்சிகளை மறைக்க நல்லதொரு திரை.

ஆண் வாரிசு இன்றி இறந்து போனவருக்கு ஒரு தாயாதிப் பையன் இறுதிச் சடங்குகள் நடத்த, அப்பாவின் காரியம் முடிந்தது.

வீட்டில் தங்கியிருந்த உறவினர்கள் அனைவரும் உறங்கிய பிறகும் இரவு ஹேமாவுக்குத் தூக்கம் வரவில்லை. புரண்டு புரண்டு படுத்தவள் எழுந்து உட்கார்ந்தாள். அறைக்கு வெளியே இருட்டில் 'பால்கனி'யில் சாய்வு நாற்காலியில் அம்மா உட்கார்ந்திருப்பது நிழலாய்த் தெரிந்தது. எழுந்து அங்கு சென்றாள்.

"படுத்துக்கலையாம்மா?"

"ஆகட்டும். படுக்கறேன்."

ஜலதோஷம் பிடித்தாற்போல் கனத்து

ஒலித்த குரலிலிருந்து அம்மா அழுதிருக்கிறாள் என்று தெரிந்தது. தொட்டுச் சமாதானப்படுத்தலாமா? ஆனால் அம்மாவிடம் அதுபோன்ற நெருக்கம் அவளுக்கு என்றுமே இருந்ததில்லை. கையைப் பிடித்துக் கொள்வது, முழங்கால் மேல் தலையைச் சாய்த்துக் கொள்வது, கொஞ்சுவது, எல்லாம் அப்பாவிடம்தான்... அப்பா என்ற நினைப்பில் உள்ளே வெடித்த விம்மலை அடக்கிக் கொண்டாள்.

''இருட்டில் உட்கார்ந்திருக்கியேம்மா. விளக்குப் போடட்டா?''

''வேண்டாம்.''

தாயின் அருகில் தரையில் உட்கார்ந்தாள். சிறிது நேரம் கடந்தபின்:

''போய்ப் படுத்துக்க ஹேமா.''

''தூக்கம் வரல்லே.''

''உண்மைதான். அப்பாவும் நீயும் ரொம்ப நெருக்கமில்லையா? இந்தத் துக்கம் ஆற உனக்கு நாளாகும்.''

''உனக்கு மட்டும் என்னவாம்?''

''என் விஷயம் வேறு.''

''சும்மா சொல்லாதேம்மா. உன் குரலே காட்டிக் கொடுத்துடுத்து. நீ இங்கே இருட்டில் அழுதுக்கிட்டுத்தானே இருந்தே?''

அம்மா பேசவில்லை.

''நிஜத்தைச் சொல்லும்மா!''

''ஆமாம்.''


''பின்னே?''

''ஆனால் நான் உன் அப்பாவுக்காக அழல்லே.''

''என்னம்மா சொல்றே! இதை நான் நம்புவேன்னு நினைக்கிறாயா?''

''ஏன் அழணும், உன் அப்பாவுக்காக? அவருக்கு என்ன குறை? வாழ்ந்த வரையில் சந்தோஷமாய் வாழ்ந்தார். எல்லா ஆசைகளையும் நிறைவேத்திக்கிட்டார். யாருக்காகவும் எதையும் விடல்லே. நேரம் வந்த போது போனார். அவருக்காக நான் துக்கப்பட என்ன இருக்கு?''

ஹேமா மௌனமானாள். தாயின் முகத்தை ஏறிட்டாள். விளக்கு ஏற்றாவிட்டாலும் நிலவொளி இருந்தது. அம்மாவின் சாதாரண முகத்தையும் அதில் படிந்து இறுகியிருந்த விரக்தியையும் தெளிவாய்க் காட்டியது.



இந்த அம்மா ஒரு மனைவி. கணவன் – மனைவி உறவு முறையானது, மரபு சார்ந்தது. எனவே அதில் கவர்ச்சி இல்லை. 'ரொமான்ஸ்' இல்லை. எப்போதுமே உலகின் கவனம்காதலியின்மீதுதான். அவளைக் கண்டனம் செய்யும் போது கூட முக்கியத்துவம் அவளுக்குத்தான். காதலியின் அன்பு, அழகு, சமூக அங்கீகாரம்இன்றியேதன்னைத் தரும் செயலில் உலகம் காணும் தியாகம், சமுதாயத்தின் ஓரத்தில் ஒதுங்கி நிற்கும் அவள் தனிமை – இவைதானே பெரிதாய் வெளிச்சம் போட்டுக் காட்டப்படுபவை? இவைதானே காவியச் சரக்கு ஆகின்றவை?

தானும்தானே சிறுமிப் பருவத்தில் வனஜாவிடம் இரக்கம் கொண்டு, அவளும் அப்பாவும் நல்ல ஜோடி என்று பாராட்டி...

மரபு மீறலின் இந்தக் கவர்ச்சி, கிளர்ச்சி இவற்றின் மினுமினுப்பு ஏதுமின்றி மறைவினுள் புழுங்கும் ஒரு துரோகிக்கப்பட்ட உள்ளம் – அதைப் பற்றிய பிரக்ஞையே அந்த முற்றாத கனவுலகப் பருவத்தில் அவளுக்கு வரவில்லை. பிறகு வந்தது – மெல்ல மெல்ல, வயதாக ஆக, காவியமில்லாத கண்ணீர் புரியப் புரிய.

டில்லியில் ஒரு சமயம் சிநேகிதி ஒருத்தி, ''அடி ஹேமா, உன் வீட்டுக்காரரை நேத்து சாயங்காலம்ஒருசினிமாதியேட்டர்வாசலில் வேறொரு பெண்ணோடு பார்த்தேன்'' என்று சொல்ல, பின்னால் அவள் கணவன் தான் ஒரு நண்பனையும் அவன் மனைவியையும் தன் காரில் சினிமாவுக்கு அழைத்துப் போய் இறக்கி விட்டதாகவும் நண்பன் டிக்கெட் வாங்கச் சென்றிருந்தபோது அவன் வரும்வரை அவன் மனைவிக்குத் துணையாய்ப் பேசிக் கொண்டு நின்றிருந்ததாகவும் விளக்கிக் கூறியதும் மனக்குமுறல் அடங்கி நிம்மதியுற்ற தினம், அம்மாவை நினைத்து அவள் வெகுநேரம் அழுதிருந்தாள்.

மறுபடியும் ஹேமா தாயின் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். அது வேறு பக்கமாய்த் திரும்பியிருந்தது. அம்மா தனியாயிருக்க விரும்புகிறாளா? 'நீ அப்பா பெண்தானே? என்னைப் பற்றி உனக்கென்ன வந்தது?' என்கிறாளா?

ஹேமா மெல்ல எழுந்தாள். ''அப்போ நான் போய்ப் படுக்கறேம்மா.'' இரண்டடி எடுத்து வைத்தாள். தயங்கினாள். இருளில், தனிமையில், அமர்ந்திருந்த நிழலுருவை நோக்கினாள். மனசுக்குள் ஒரு கனம் அழுத்தியது. என்றுமில்லாத வழக்கமாய்க் கையை நீட்டி அந்த உருவத்தின் தோளை மென்மையாய்த் தொட்டாள்.

'எனக்குப் புரிகிறது' என்ற அந்த மௌனச் செய்தியில் ஒரு பாலத்தை உணர்ந்தவள் போல் அம்மா முகத்தைத் திருப்பாமலே, தன் தோளைத் தொட்ட கையைக் கணநேரம் தன் கையால் பற்றி மூடிக் கொண்டாள்.



பொன்னியின் செல்வன்

அத்தியாயம் 80

நிலமகள் காதலன்

இளவரசிகள் வீற்றிருந்த பல்லக்கைப் பொன்னியின் செல்வரின் குதிரை நெருங்கியது.

சற்றுப் பின்னால் குதிரையை நிறுத்திய வந்தியத்தேவன், "ஜாக்கிரதை! இளவரசிகளின் அந்தப் பொல்லாத பல்லக்கு நம் சாதுக் குதிரையை மோதி விடப் போகிறது!" என்றான்.

கிட்டத்தட்ட அதே இடத்தில் முன்னொரு தடவை நந்தினியின் மூடுபல்லக்கின் மீது அவன் குதிரையைக் கொண்டு போய் மோதி விட்டுக் "குதிரையைப் பல்லக்கு மோதுகிறது!" என்று கூக்குரலிட்டது அவனுக்கு நினைவு வந்தது. அச் சம்பவம் நடந்து ஆறு மாதம் கூட முழுமையாக ஆகவில்லை. ஆனால் இந்தச் சிறிய காலத்துக்குள் எத்தனை எத்தனை முக்கியமான நிகழ்ச்சிகள் நடந்தேறி விட்டன!

குந்தவை வந்தியத்தேவனுடைய வார்த்தைகளினால் ஏற்பட்ட பூரிப்பை அடக்கிக் கொண்டு, "தம்பி! உங்களைப் பார்த்தால் ஏதோ குதூகலமான விஷயத்தைப் பற்றிப் பேசிக் கொண்டு வருவதாகத் தோன்றுகிறதே! உங்களுடைய திருமுகங்கள் அவ்வளவு மலர்ச்சியுடன் விளங்குகின்றன!" என்றாள்.

"ஆம், அக்கா! குதூகலமான விஷயம் பற்றித்தான் பேசிக் கொண்டு வந்தோம். ஆனால் அது உன் தோழி வானதிக்கு அவ்வளவு குதூகலம் தராது - என்னுடைய திருமண நாள் நெருங்கி வந்து கொண்டிருக்கிறதல்லவா? நான் காதல் கொண்டு மணந்து கொள்ளப் போகும் மங்கையைப் பார்த்து மகிழ்ந்தோம். அவளுடைய ரூப லாவண்யங்களைப் பற்றிப் பேசிக் கொண்டு வருகிறோம்!" என்றார் பொன்னியின் செல்வர்.

சற்று முன் பிரகாசமாக விளங்கிய அந்த இரு பெண்களின் முகங்களும் உடனே வாட்டமுற்றன. வானதி தலையைக் குனிந்து கொண்டாள். குந்தவையின் முகத்தில் கோபம், வியப்பு, ஐயம், ஆத்திரம் முதலிய வெவ்வேறு பாவங்கள் தோன்றி மறைந்தன.

"இது என்ன வெட்கமற்ற பேச்சு? இந்தப் பெண்ணின் மனத்தை வருத்தப்படுத்துவதில் உனக்கு என்ன சந்தோஷம்?" என்றாள்.

வானதி குனிந்த தலையை நிமிர்த்திக் குந்தவையைப் பார்த்து, "அக்கா! இது என்ன வார்த்தை? எனக்கு எதற்காக வருத்தம்?" என்றாள்.

ஒன்றுக்கும் மறுமொழி சொல்லாமல் பொன்னியின் செல்வர் புன்னகை பூத்த முகத்துடன் நிற்பதைக் கண்ட இளைய பிராட்டி "கொள்ளிடக் கரைக்கல்லவா போய்த் திரும்புகிறீர்கள்? அங்கே எந்தப் பெண்ணைப் பார்த்தீர்கள்? எந்த ஊர்? என்ன பேர்? என்ன குலம்?" என்று கேட்

அமரர் கல்கி

டுக் கொண்டே போனாள்.

இப்போது வந்தியத்தேவன் குறுக்கிட்டு, ''தேவி! இளவரசர் மணக்கப் போகும் குலமகள் யாரையும் நாங்கள் பார்த்து விட்டு வரவில்லை. இந்தப் பஞ்சநதி தீரத்தில் பொலிந்து விளங்கும் நிலமாமகளைத்தான் நெடுகிலும் பார்த்து வியந்து கொண்டு வந்தோம். சோழவள நாட்டின் இயற்கை அழகுகளைப் பற்றிப் பேசிக் கொண்டு வந்தோம். இளவரசர் இந்த அழகிய நாட்டின் சக்கரவர்த்தியாக முடிசூட்டிக் கொள்ளும் நாள் நெருங்கி வருகிறதல்லவா? இவர் இந்த இருநிலமடந்தையின் பேரில் கொண்ட காதலைப் பற்றித்தான் குறிப்பிட்டார்!'' என்றான்.

''ஆகா! என் சகோதரனுக்கு இப்படியெல்லாம் விகடமாகப் பேச முன்னெல்லாம் தெரிந்திருக்கவில்லை. அவனுக்குத் தாங்கள் கற்றுக் கொடுத்திருக்கிறீர்கள் போலிருக்கிறது!'' என்றாள்.

அருள்மொழிவர்மர் சிரித்து விட்டு, ''நண்பரே! தங்களுக்கு நன்றாக வேண்டும்! தங்களுடைய சிநேகத்துக்குப் பிறகு எனக்குத் தந்திர மந்திரமெல்லாம் வந்திருக்கிறது என்று முன்னமே நான் சொல்லவில்லையா? என் தமக்கையாருக்கும் அவ்விதமே தோன்றியிருக்கிறது, பாருங்கள்!'' என்றார்.

''இது என்ன வீண் பழி! தமக்கையும் தம்பியும் ஒத்துப் பேசிக் கொண்டது போல் ஒரே மாதிரி என்பேரில் குற்றம் சுமத்துகிறீர்களே?'' என்றான் வந்தியத்தேவன்.


''இன்னும் தங்கள் பேரில் பல குற்றங்கள் இருக்கின்றன. என் தம்பி சொல்லியிருக்க முடியாத குற்றங்களும் இருக்கின்றன. அவற்றையெல்லாம் நடுச்சாலையில் நின்று சொல்ல முடியாது!'' என்றாள் குந்தவை.

வந்தியத்தேவன், ''நான் சந்தேகித்தது சரியாய்ப் போய் விட்டது!'' என்றான்.

''என்ன சந்தேகித்தீர்கள்?''

''என்னை ஈழநாட்டுப் படைக்குச் சேநாதிபதியாக்கி அனுப்புவது என் குற்றங்களுக்காக எனக்குத் தீவாந்தர சிட்சை விதிப்பதேயாகும் என்று சந்தேகித்தேன்.''

''பார்த்தீர்களா, அக்கா! சோழகுலத்



தாரின் நன்றியறிதலில் இவருக்கு எவ்வளவு நம்பிக்கை இருக்கிறது என்று தெரிகிறது அல்லவா?''

''நமக்கு இவரிடம் நன்றி சிறிதும் இல்லை என்பது உண்மைதான்!''

''இது என்ன, நீங்களும் இப்படிச் சொல்லுகிறீர்களே?''

''அன்னியர்கள் செய்யும் உதவிக்கு நன்றி செலுத்தலாம். நண்பர்களுக்குள் நன்றி எப்படி ஏற்படும்? திருவள்ளுவர் சொல்லியிருப்பது ஞாபகமில்லையா? 'உடுக்கை இழந்தவன் கைபோல் இடுக்கண் களைவதாம் நட்பு!' நழுவிய உடையை எடுத்துக் கட்டி விட்டதற்காக இடை கைக்கு நன்றி செலுத்த வேணுமா?'' என்றாள் குந்தவை.

''தேவி! நன்றி செலுத்த வேண்டியதேயில்லை. தண்டனை விதிக்காமலிருந்தால், அதுவே பெரிய நன்றியாகும்!''

''தம்பி! நீயும் சரி, இவரும் சரி, ஒன்று நினைவு வைத்துக்கொள்ளுங்கள். இவரை எனக்கு உதவியாயிருக்கும்படியாக நம் தமையன், வீர சொர்க்கம் எய்திய கரிகாலன், அனுப்பி வைத்தான். அந்தக் கடமையிலிருந்து இவரை நான் இன்னும் விடுதலை செய்து விடவில்லை!'' என்றாள் குந்தவை.

''இவருக்கு விடுதலை தரவே வேண்டாம், அக்கா! ஆயுள் தண்டனையாகவே அளித்தாலும் எனக்குச் சம்மதந்தான்!'' என்றார் இளவரசர்.





''இலங்கையில் இவரால் எனக்கு ஆக வேண்டிய காரியங்கள் சில இருக்கின்றன'' என்றாள் குந்தவை.

''போவதற்கு முன்னால் தங்களிடம் விடைபெற்றுச் செல்வேன், தேவி!'' என்றான் வந்தியத்தேவன்.

''அப்படியானால், பழையாறைக்குத் தாங்கள் வந்து என்னிடம் விடைபெறும்படி இருக்கும்'' என்றாள் குந்தவைப்பிராட்டி.

''அக்கா! இப்போது எங்கே புறப்பட்டீர்கள்?'' என்று அருள்மொழிவர்மர் சிறிது வியப்புடன் கேட்டார்.

''திருவையாற்றுக்குப் போகிறோம். இன்று மார்கழித் திருவாதிரைத் திருநாள் அல்லவா? செம்பியன்மாதேவியும் மதுராந்தகரும் பூங்குழலியும் காலையிலேயே சென்றார்கள். நீங்களும் வருகிறீர்களா?'' என்றாள் குந்தவை.

''இல்லை; நாங்கள் இப்போது வரவில்லை. திருவையாறு நகருக்குள் போகக் கூடாதென்றுதான் ஆற்றங்கரையோடு மேற்கே சென்று திரும்பி வந்தோம்.''

''அப்பர் பெருமான் திருவையாற்றில் கைலாசத்தையே கண்டு பரவசமடைந்தார். உங்களுக்கு அங்கே போகவே பிடிக்கவில்லை போலிருக்கிறது. ஒருவேளை நீங்களும் வீர வைஷ்ணவர்கள் ஆகி விட்டீர்களா, என்ன?''

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. திருவையாறு சென்றால், அப்பர் பெருமானைப் போல் அங்கே போக வேண்டுமென்பது என் எண்ணம்.''

''அப்பர் எப்படிச் சென்றார்?''

''அவருடைய பாடலிலேயே சொல்லியிருக்கிறாரே! 'யாதும் சுவடுபடாமல்' சென்றார். ஆடம்பரம் எதுவுமில்லாமல், தாம் திருநாவுக்கரசர் என்பதைக் காட்டிக் கொள்ளாமல், பூஜைக்காகப் புஷ்பமும் நீரும் கொண்டு சென்ற அடியார் கூட்டத்தின் பின்னால் சென்றார். அதனால்

திருவையாற்றில் கைலாசத்தையே அவர் காண முடிந்தது. நாம் அங்கே இந்த இராஜ ரீக ஆடம்பரங்களுடன் சென்றால், நாமும் இறைவனைத் தரிசிக்க முடியாது; ஜனங் களும் சுவாமி தரிசனத்தை மறந்து விட்டு நம்மைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டு நிற்பார் கள்!....."

"ஆமாம், ஆமாம்! உன்னுடைய ஜாதக விசேஷம் அப்படி! உன்னைக் கண்டதும் மக்கள் சூழ்ந்து கொண்டு 'மன்னர் மன்ன ருக்கு ஜே! பொன்னியின் செல்வருக்கு ஜே!' என்று கோஷமிடத் தொடங்குவார்கள். ஆனால் எங்களுக்கு அவ்வளவு அபாயம் இல்லை. மேலும் நாங்கள் ஜனக் கூட்டத் துக்கு மத்தியில் போகவும் மாட்டோம். திருவாதிரைத் திருநாளுக்காகச் சுவாமி எழுந்தருளல் நடக்கும் போது, திருவையாற் றிலுள்ள நம் அரண்மனை மேல் மாடத்தி லிருந்தே ஐயாறுடை இறைவனைத் தரி சித்துக் கொள்வோம்."

"அக்கா! ஒரு பழம் பாடல் நினைவு இருக் கிறதா? அண்ட சராசரங்களையும், அகில புவனங்களையும், ஆகாச வெளியிலுள்ள எல்லா நட்சத்திரங்களையும் படைத்தவர் இறைவன். அவரை 'ஆதிரையான்' என்றும், 'திருவாதிரை நட்சத்திரத்துக்கு மட்டும் உரியவன்' என்றும் மக்கள் கருதுவது என்ன பேதைமை? — இப்படிப்பட்ட கருத்துள்ள அந்தப் பாடல் தங்களுக்கு நினைவு இருக் கிறதா?"

"நினைவிருக்கிறது, தம்பி! ஆனால் எல்லா நட்சத்திரங்களுக்கும் உரியவன் திருவாதிரைக்கும் உரியவன்தானே?"

"சரி, நீங்கள் போய் வாருங்கள்! எப் போது தஞ்சைக்குத் திரும்பி வருவீர்கள்?"

"தஞ்சைக்கு இப்போது நாங்கள் திரும் பப் போவதில்லை. திருவையாற்றிலிருந்து பழையாறை போகிறோம்."

"என்ன, என்ன? என்னுடைய மகுடாபி ஷேகத்துக்கு இல்லாமலா போகிறீர்கள்?" என்றார் இளவரசர்.

"ஆம், ஆம்! உன்னுடைய மகுடாபிஷேக வைபவத்தில் எனக்கும் வானதிக்கும் என்ன வேலை?"

"அக்கா! தாங்கள் இல்லாமல் என்னு டைய பட்டாபிஷேகம் நடைபெறாது!"

"எல்லாம் நடைபெறும். ஏன் நடை பெறாது? பட்டாபிஷேகத்துக்கு நாள் வைத் துக் கொடுத்தவர் யார்? இராமருடைய பட்டாபிஷேகத்துக்கு நாள் பார்த்துச் சொன்னவரின் சந்ததியில் வந்தவர் அல் லவே?"

"எனக்கு நாள் நட்சத்திரம், சோதிடம் — ஆருடம் எதிலும் நம்பிக்கை இல்லை, அக்கா! நம் கடமையைச் செய்யும் எல்லா நாளும் நல்ல நாள்தான்; சோம்பியிருக்கும் நாட்களே கெட்ட நாட்கள்!" என்றார் பொன்னியின் செல்வர்.

"உன்னுடைய வாழ் நாட்கள் எல்லாம் அத்தகைய நல்ல நாட்களாகவே இருக்கட் டும், தம்பி! நாங்கள் சென்று ஐயாறப்பரிட மும் அறம் வளர்த்த நாயகியிடமும் உனக் காகப் பிரார்த்தனை செய்கிறோம்!" என் றாள் குந்தவை.

"எனக்காக என்ன பிரார்த்தனை செய் யப் போகிறீர்கள்?"

"நிலமகள் மேல் நீ கொண்டிருக்கும் காதல் பூர்த்தியாகட்டும்; உன் மகுடாபிஷே கம் விக்னமின்றி நடைபெறட்டும் என்று ஐயாறுடைய இறைவரிடம் பிரார்த்திக்கி றோம். உன் உள்ளம் சோழர் தொல்குடிக்கு உரிய அறவழியிலிருந்து விலகாமலிருக்கட் டும் என்று அறம் வளர்த்த நாயகியின் சந்நிதியில் பிரார்த்தித்துக் கொள்கிறோம்."

"அப்படியானால், நீங்கள் எனது பட்டாபிஷேகத்துக்கு நிச்சயமாக இருக்கப் போவதில்லையா?"

"பழையாறையிலிருந்து அகக் கண்ணால் கண்டு மகிழ்கிறோம்."

"அக்கா! தாங்கள் இந்தக் கொடும் பாளூர்க் கோமகளின் பிடிவாதத்துக்குச் சப்பைக் கட்டுக் கட்டுகிறீர்கள். இவள் என்னுடன் சோழ சிங்காதனம் ஏறுவதற்கு மறுத்தால், உலகமே அஸ்தமித்து விடும் என்று எண்ணுகிறாள். இவளுடைய வீண் பிடிவாதம் விபரீதத்தில் முடியப் போகிறது. இவளுக்குப் பதிலாகச் சோழரின் சிங்கா தனத்தில் வேறொரு பெண் அமர்ந்து விடப் போகிறாள்! அப்புறம் என்பேரில் குற்றம் சொல்லிப் பயன் ஒன்றுமில்லை" என்றார் இளவரசர் பொன்னியின் செல்வர்.

"நான் இவர் மீது என்றும் குற்றம் சொன்னதில்லை; இனிமேலும் குற்றம் சொல்லப் போவதில்லை, அக்கா!" என் றாள் கொடும்பாளூர் இளவரசி.

"நீ சொன்னாலும் பயனில்லை, வானதி! மண்ணாசை கொண்டவர்களின் காதில் வேறு எதுவும் ஏறாது!" என்றாள் இளைய பிராட்டி குந்தவை.

"இந்த மண்ணாசையை என் மனத்தில் உண்டாக்கியவர் தாங்கள்தான் என்பதை மறந்துவிட வேண்டாம். பெண்ணாய்ப் பிறந்த தாங்களே இந்த அழகிய சோழ நாட்டை விட்டுப் போக மனம்வரவில்லை யென்றும், அதற்காகவே கலியாணம் செய்து கொள்ளப் போவதில்லையென்றும் பலமுறை என்னிடம் சொன்னதில்லையா?" என்றார் அருள்மொழி.

"அப்போதெல்லாம் என் வார்த்தைகள் உன் காதில் ஏறவே இல்லை. உலகத்தில் இன்னும் எத்தனையோ அழகிய நாடுகள் இருக்கின்றன என்று சொல்லி வந்தாய்!

இந்த வாணர் குலத்து வீரரின் போதனைதான் உன்னை இப்படி நிலமடந்தையின் காதலன் ஆக்கி விட்டது!'' என்றாள் குந்தவைப் பிராட்டி.

''தெய்வமே! அந்தப் பழியும் என் பேரிலேதானா வந்து விழ வேண்டும்?'' என்றான் வந்தியத் தேவன்.

''எவ்வளவோ பெரிய பயங்கரமான பழியைச் சுமந்தீர்களே? இந்தச் சிறிய பழிகளுக்கா பயந்துவிடப் போகிறீர்கள்? தம்பி! வெகு நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டோம்! சுவாமி எழுந்தருளும் நேரம் நெருங்கி விட்டது! போகிறோம்!'' என்று கூறிக் குந்தவை தேவி சிவிகையாளருக்குச் சமிக்ஞை செய்தாள்.

பல்லக்கு மேலே சென்றது.

சிறிது நேரம் அங்கேயே நின்று பார்த்துக் கொண்டிருந்து விட்டுப் பொன்னியின் செல்வரும் தஞ்சையை நோக்கிக் குதிரையைச் செலுத்தினார்.

சற்றுத் தூரம் சென்றதும் பக்கத்தில் நெருங்கி வந்து கொண்டிருந்த வந்தியத் தேவனை நோக்கி, ''நண்பரே! இந்தப் பெண்மணிகள் உண்மையில் சுவாமி தரிசனத்துக்குப் போகிறதாக எனக்குத் தோன்றவில்லை. குடந்தை சோதிடர் இப்போது திருவையாற்றுக்கு அருகில் குடி வந்து விட்டாராம்! அவரைப் பார்த்துச் சோதிடம் கேட்பதற்காகவே போகிறார்கள்!'' என்றார்.

''ஐயா! குடந்தை சோதிடரை விடத் தாங்களே பெரிய சோதிடராயிருக்கிறீர்களே!'' என்றான் வந்தியத் தேவன்

அத்தியாயம் 81

பூனையும் கிளியும்

பொன்னியின் செல்வர் ஊகித்து ஆருடம் கூறிய வண்ணமே நடந்தது.

குந்தவை தேவியும் வானதியும் திருவையாற்றிலிருந்த சோழ மாளிகை போய்ச் சேர்ந்ததும், அங்கேயே பல்லக்கையும் பரிவாரங்களையும் நிறுத்தினார்கள். செம்பியன்மாதேவியும் அவருடைய மகனும் மருமகளும் கோயிலுக்குச் சென்றிருப்பதைத் தெரிந்து கொண்டார்கள். தாங்களும் காவலர்களிடம் சொல்லி விட்டு, ஒரே ஒரு வீரனை மட்டும் துணைக்கு அழைத்துக் கொண்டு சோதிடர் வீட்டைத் தேடிச் சென்றார்கள்.

ஆம்; குடந்தை சோதிடர் அங்கே வெள்ளத்தில் தமது வீடு அடித்துக் கொண்டு போகப்பட்ட பிறகு திருவையாற்றுக்கு வந்து விட்டார். நகரின் கிழக்கு ஓரத்தில் காவேரிக் கரையில் சிறிய வீடு ஒன்று கட்டிக் கொண்டு அங்கே குடியிருக்கத் தொடங்கினார்.

இனிமேல் பழையாறை நகரைக் காட்டிலும் தஞ்சாவூர் அதிக முக்கியத்துவம் பெறலாம் என்று அவர் ஜோசியத்தின் மூலம் அறிந்து கொண்டதும், ஒரு வேளை அவர் திருவையாற்றுக்கு வந்து குடியேறியதற்குக் காரணமாயிருக்கலாம்.

ஜோசியர் வீட்டின் வாசற்படியில் அவர்கள் பிரவேசிக்கும் போது, உள்ளேயிருந்து மிக இனிய மழலைக் குரலில், ''வாருங்கள், ஆடலரசிகளே வாருங்கள்! நடன ராணிகளே, வாருங்கள்!'' என்று யாரோ வரவேற்றதைக் கேட்டுத் தேவிமார்கள் இருவரும் வியப்படைந்தார்கள். முன்னே ஒரு முரட்டுச் சீடனைக் காவற்காரனாக வைத்திருந்தவர் இப்போது இப்படிப் பரிந்து உபசரித்து அழைப்பதற்கு யாரை அமர்த்தியிருக்கிறார் என்ற எண்ணத்துடன் உள்ளே பிரவேசித்தார்கள்.

கூரையிலிருந்து தொங்கிய கூண்டில் அழகிய பச்சைக் கிளி ஒன்றைக் கண்டதும் அவர்களுடைய வியப்பு நீங்கியது. அந்தப் பச்சைக் கிளியும் தலையை இப்படியும் அப்படியும் அசைத்து, குன்றுமணி போன்ற அதன் சிறிய கண்களால் அவர்களை உற்றுப் பார்த்துவிட்டு, மறுபடியும், ''வாருங்கள், ஆடல் அரசிகளே, வாருங்கள்!'' என்றது.

கிளியின் குரலையும் பெண்மணிகளின் பாதச் சிலம்பின் ஒலியையும் கேட்டு விட்டுச் சோதிடரும் உள்ளேயிருந்து கூடத்துக்கு வந்தார்.

தேவிமார்களைப் பார்த்துத் திடுக்கிட்டவராய், ''வாருங்கள்! தேவிமார்களே! வாருங்கள்! இந்தக் குடிசை இன்றைக்குத் தான் பாக்கியம் செய்தது!'' என்றார்.

பச்சைக் கிளியும் தன் பவள வாயைத் திறந்து, ''இந்தக் குடிசை இன்றைக்குத்தான் பாக்கியம் செய்தது!'' என்றது.

சோதிடர் அதைப் பார்த்து ''சீச்சீ! சற்று நேரம் சும்மா இரு! வாயை மூடிக் கொள்!'' என்றார்.

''ஐயா! அதை ஏன் கோபித்துக் கொள்கிறீர்கள்? வருகிறவர்களுக்கு நல்ல முறையில் தான் வரவேற்பு அளிக்கிறது! தினந்தினம் இங்கு பலர் வந்து இந்தக் குடிசையை 'இன்-

லக்ஷ்மி அளிக்கும்

உங்கள் அழகான
தோற்றத்திற்கு ஏற்ற மாற்றம்



துவங்கும் புதிய பள்ளி ஆண்டிற்கு மாறுபட்ட, சிறந்த சீருடைகளை அணியுங்கள். உங்கள் தோற்றத்திற்கு ஏற்றம் தரும். அவை உங்களுக்கு ஒரு முக்கியத்துவத்தை அளிக்கும். நீங்கள் தனித் தன்மையோடு இருக்க உதவுகின்றன லக்ஷ்மியின் சீருடைத் துணிகள்.

லக்ஷ்மி நிறுவனத்தாரிடமிருந்து


1910 – 1990
80
LAKSHMI MILLS
லக்ஷ்மி மில்ஸ். கோயமுத்தூர்.

றைக்குத்தான் பாக்கியம் செய்த குடிசை யாகச் செய்வார்கள் போலிருக்கிறது!" என்றாள் இளையபிராட்டி குந்தவை.

"வாருங்கள்! நடன ராணிகளே! வாருங்கள்!" என்றது கிளி.

ஜோசியர் மறுபடியும் அதை அதட்டி விட்டு, "தேவிமார்களே! மன்னிக்க வேண்டும்! திருஞான சம்பந்தப் பெருமான் இந்தத் திருவையாற்றுக்கு வந்திருந்த போது வீதி தோறும் ஆடல் அரங்குகளைக் கண்டார். அவற்றில் மங்கைமார்கள் நடனம் பயிலும் போது பாதச் சலங்கைகள் கலீர் கலீர் என்று ஒலிப்பதையும் கேட்டார். அவருடைய தெய்வீகப் பாசுரங்களிலும் பாடியிருக்கிறார். அந்த நாளில் போலவே இன்றைக்கும் இந்தத் திருவையாற்றில்நடனக் கலைபயிலும்நங்கைமார்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவர்கள் அடிக்கடி ஜோதிடம் கேட்க இந்தக் குடிசையைத் தேடி வருகிறார்கள்! அவர்களுக்கு உகப்பாக இருக்கட்டும் என்று இந்தக் கிளிக்கு இவ்வாறு சொல்லப் பழக்கி வைத்தேன்! தயவு செய்து மன்னிக்க வேண்டும்!" என்றார்.

"இன்றைக்கு அந்த ஆடல் அரசிகள், நடன ராணிகள் யாரையும் இங்கே காணவில்லையே?" என்றாள் குந்தவை.

"தேவி! இன்றைக்குத் திருவாதிரைத் திருநாள். ஆகையால் ஆடலரசிகளும் நடன ராணிகளும் ஐயாற்று இறைவன் சந்நிதியில் சேவை செய்யப் போயிருப்பார்கள். ஆனால் உண்மை அரசிகளாகிய நீங்களே வந்து விட்டீர்கள். இந்தக் குடிசை பாக்கியம் செய்தது; நான் பாக்கியம் செய்தவன்!" என்று பரவசமாகக் கூறினார் சோதிடர்.

பிறகு, "தயவு செய்து அமருங்கள்! இந்த ஏழையிடம் என்ன கேட்க வந்தீர்களோ, அதைக் கேளுங்கள்! தெரிந்த வரையில் சொல்லுகிறேன்!" என்றார்.

இளவரசிகள் இருவரும் உட்கார்ந்தார்கள். குந்தவை ஒரு முறை பெருமூச்சு விட்டு, "சோதிடரே! எனத்தைக் கேட்பது? இந்தச் சோதிட சாஸ்திரத்தில் ஏதேனும் உண்மை இருக்கிறதா? — என்ற கேள்வியைத்தான் முதலில் கேட்கத் தோன்றுகிறது!" என்றாள்.

"தேவி! தாங்கள் இப்படிக் கேட்டால், நான் என்ன சொல்லட்டும்? நம்பிக்கை உள்ளவர்களுக்குச் சோதிட சாஸ்திரம் உண்மை; நம்பிக்கை இல்லாதவர்களுக்கு அது பொய்தான்!" என்று சொன்னார் சோதிடர்.

"நான் ஜோதிட சாஸ்திரத்தில் பூரண நம்பிக்கை வைத்துத்தான் இருந்தேன். ஆனால் அந்தச் சாஸ்திரம்தான் என்னைக் கைவிட்டு விட்டதே!"

"எந்த விதத்தில் தங்களைக் கைவிட்டு விட்டது, அம்மணி?"

"தாங்கள் சோதிடம் பார்த்துச் சொன்னபடி எது நடந்திருக்கிறது? என் தமையன் இப்படி அகால மரணம் அடைவான் என்று நீர் எப்போதாவது என்னிடம் சொன்னீரா?"

"நான் சொல்லலாமா, தேவி! தெரிந்திருந்தாலும் என் வாயைத் திறந்து சொல்லலாமா? சொல்லியிருந்தால், என்னையும் பாண்டிய நாட்டு ஆபத்து உதவிகளுடனே சேர்த்திருக்க மாட்டார்களா? இராஜ குடும்பங்களையும் இராஜாங்கக் காரியங்களையும் பற்றி ஏதோ பொதுப்படையாகத்தான் சொல்லலாம். 'கண்டம் இருக்கிறது' 'இடையூறு இருக்கிறது' 'கெட்டக்கிரஹம் பார்க்கிறது' என்று சொல்வதே ஆபத்தானது. மேலும் ஆதித்த கரிகாலரின் ஜாதகம் என்னிடம் இல்லவும் இல்லை; அதை நான் பார்த்ததும் இல்லை!" என்றார் சோதிடர்.

"நீங்கள் பார்த்திருந்தாலும் சொல்லியிருக்க மாட்டீர்கள்; சொல்லியிருந்தாலும் அந்த விபத்தைத் தடுத்திருக்க முடியாது அல்லவா?"

"அது எப்படி முடியும், தாயே! நான் என்ன பிரம்மாவா? எழுதின எழுத்தைப் பிரம்மாவினாலேதான் அழித்து எழுத முடியுமா?"

"அப்படியென்றால், சோதிடம் பார்ப்பதில் என்ன பயன், சோதிடரே!"

"தாயே! இது என்ன இப்படிக் கேட்கிறீர்கள்? தங்களைப் போன்றவர்கள் சோதிடம் பார்க்கா விட்டால், என்னைப் போன்றவர்கள் பிழைப்பது எப்படி? இந்த ஏழையின் குடிசையில் இராஜகுமாரிகளின் பாதங்கள் படுவதுதான் எப்படி?" என்றார் சோதிடர்.

இதைக் கேட்டுக் குந்தவை கலகலவென்று சிரித்து விட்டாள். வானதியின் முகத்திலும் புன்னகை அரும்பியது.

"சோதிடரே! இங்கே சோதிடம் கேட்க வருகிறவர்கள் எல்லாரிடமும் இப்படித்தான் சொல்லுவீர்களா?" என்று இளையபிராட்டி கேட்டாள்.

"எல்லாரிடமும் இப்படிச் சொல்லுவேனா? கலைமகளும் திருமகளும் ஓர் உருக்கொண்டு அவதரித்திருப்பதாகத் தங்களைப் பற்றி உலகமெல்லாம் புகழ் பரவியிருக்கிறது. அத்தகைய தங்களிடம் விவாதம் செய்து என்னால் சமாளிக்க முடியுமா? அதனாலே அவ்வாறு சொன்னேன். ஆனாலும், தாயே! நான் சோதிடம் பார்த்துச் சொல்லாததை வைத்துக் கொண்டு சோதிட சாஸ்திரத்தின் உண்மையைத் தாங்கள் முடிவு கட்டலாமா? சொன்னதை வைத்துக் கொண்டு

அல்லவா முடிவு கட்ட வேண்டும்? பொன்னியின் செல்வரின் அதிர்ஷ்ட ஜாதகத்தைப் பற்றிச் சொன்னேன். இடையில் என்னென்னமோ நேர்ந்து, கடைசியில் அவர் இந்தப் பூ மண்டலத்தின் சக்கரவர்த்தியாகும் கட்டம் நெருங்கி விட்டதல்லவா? பட்டாபிஷேகத்துக்குக் கூட நாள் வைத்தாகி விட்டதாமே?'' என்றார் சோதிடர்.

''ஐயா! பொன்னியின் செல்வரின் பட்டாபிஷேகத்துக்கு நாள் பார்ப்பதற்குத் தங்களிடம் யாரும் வரவில்லையா?''

''இல்லை, தேவி! அதற்கு அரண்மனைப் புரோகிதர்கள் இருக்கிறார்களே! முதன் மந்திரி அநிருத்தரே சோதிட சாஸ்திரத்தில் வல்லவர் ஆயிற்றே!''

''ஆமாம்; தை மாதம் ஏழாம் தேதி நாள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது நல்ல நாள் தானா, ஜோசியரே!''

''ரொம்ப நல்ல நாள், அம்மா! மிக நன்றாக ஆலோசித்துப் பார்த்துத்தான் குறிப்பிட்டிருக்கிறார்கள்.''

''பட்டாபிஷேகத்துக்கு உகந்த நல்ல நாளாக இருக்கலாம். ஆனால் பட்டாபிஷேகம் அன்று நிச்சயம் நடக்குமா என்று பார்த்துச் சொல்லுங்கள்!''

''இது என்ன கேள்வி, தேவி! ஏன் நடக்காமற் போக வேண்டும்?''

''ஸ்ரீ ராமருடைய பட்டாபிஷேகத்துக்கு நல்ல நாளாகத்தான் பார்த்துக் குறிப்பிட்டார்கள். ஆனால் அன்று அவருக்குப் பட்டாபிஷேகம் நடக்காமற் போய்விடவில்லையா?''

''தேவி! வெறும் பட்டாபிஷேகம் செய்து கொள்வதைக் காட்டிலும் கோடி மடங்கு பெருமை அன்று ஸ்ரீ ராமருக்கு ஏற்பட்டது. அதனாலேயே இராமாயணம் பிறந்தது! அது போகட்டும்! அம்மாதிரி சந்தேகம் தங்களுக்கு ஏன் இப்போது ஏற்பட வேண்டும்? தாங்களே பட்டாபிஷேகம் அன்று நடைபெறக் கூடாது என்று விரும்புவதாகக் காண்கிறதே!''

''தங்கள் ஊகம் உண்மைதான்!''

''பொன்னியின் செல்வர் சிங்காதனம் ஏறுவதில் தங்களைக் காட்டிலும் ஆனந்தமடையக் கூடியவர் வேறு யாருமில்லை என்று அல்லவா உலகம் கருதுகிறது?''

''நியாயமாக நான் அத்தகைய ஆனந்தம் அடைய வேண்டியவள்தான். ஆனால் இந்தக் கொடும்பாளூர்ப் பெண்ணின் மூடப் பிடிவாதம் எனக்கு அதில் சந்தோஷம் இல்லாமற் செய்து விட்டது. குடந்தையில் தங்கள் வீட்டில் இவள் செய்த சபதம் நினைவிருக்கிறதா?''

''சபதமா? அன்று பல விபரீத சம்பவங்கள் நிகழ்ந்தன. ஒன்றும் சரியாக நினைவில் இல்லை!'' என்றார் சோதிடர்.

''இவளிடம் அசூயை கொண்ட ஓடக்காரப் பெண் பூங்குழலி ஏதோ சொன்



அருள்வாக்கு

திருவலஞ்சுழியில் ஒரு விசேஷம், ச்வேத விநாயகர் தும்பிக்கையை வலது பக்கம் சுழித்துக் கொண்டிருப்பது போலவே இங்கே காவிரியும் திரும்பி வலது பக்கமாகச் சுழித்து ஓடுகிறது.

காவேரிக்கும் விக்நேச்வரருக்கும் கிட்டின சம்பந்தமுண்டு. குடகு தேசத்தில், ஸஹ்ய பர்வதத்தில் அகஸ்தியர் கமண்டலுவுக்குள் பொத்திப் பொத்தி வைத்துக் கொண்டிருந்த காவேரியைப் பிள்ளையார்தான் காக்காய் ரூபத்தில் வந்து கவிழ்த்துவிட்டு, லோகோபகாரமான புண்ணிய நதியாக ஓட வைத்தார். நம் தமிழ்நாட்டின் உடம்பு, உள்ளம் இரண்டையும் வளர்க்கிற காவேரியைக் கொடுத்தவர் என்பதற்காகப் பிள்ளையாரிடம் நாம் விசேஷமாகப் பக்தி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

குடகிலிருந்து கர்நாடக தேசத்தைத் தாண்டித் தமிழ்நாட்டில் பாய்ந்த காவேரி, கும்பகோணம் தாண்டினதும் ஒரு பிலத்துக்குள் மறைந்து விட்டாளாம். அப்போது ஹேரண்டர் என்ற மஹரிஷி பரம கருணையோடு தம்மையே பலி கொடுத்துக் கொண்டாராம். உடனே காவேரி பிலத்துக்குள்ளேயிருந்து பொங்கிக் கொண்டு வெளியிலே வந்து இந்தப் பிள்ளையார் க்ஷேத்ரத்தைப் பிரதக்ஷிணமாக, வலப்பக்கம் சுழித்துக் கொண்டு மேலே ஓடினாளாம்.

தலைக்காவேரியில் கன்னங்கரேலென்று காக்காயாக வந்தவர் இங்கே வெள்ளை வெளேரென்று காட்சி தருகிறார்.

''ப்ரணவ ஸ்வரூப வக்ர துண்டம்'' என்கிறபடி மூர்த்தியும் வலம்புரியாக இருக்க, தீர்த்தமும் வலப்பக்கமாக ஓடுகிற பெருமை திருவலஞ்சுழிக்கு இருக்கிறது.

வலம்புரி விநாயகரை — அவர் இடம் புரியாகக் கோயில் கொண்டிருக்கிற இடங்களிலும் ப்ரணவ ஸ்வரூபி என்றே புரிந்து கொண்டு — நாம் வலம் வந்து வணங்கி எல்லா நலமும் பெறுவோமாக.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.



"மன்னர் ஏன் இப்போதெல்லாம் போருக்குச் செல்வதில்லை?"

"வயசாகி விட்டதால் முன்னே மாதிரி புறமுதுகிட்டு ஓடிவர முடிவதில்லையாம்!"

— இளை. அ. கதிர்வேல்.

ளாள் என்பதற்காக இவள் ஒரு சபதம் செய்தாள். தன் உயிர் உள்ள வரையில் சிங்காதனம் ஏறுவதில்லையென்று கூறினாள்! உயிர் போன பிறகு சிங்காதனம் ஏற முடியுமா, சோதிடரே!"

"முடியாதுதான்!"

"அத்தகைய விபரீதமான சபதத்தைக் கேட்டு விட்டுத்தான் காவேரித் தாய் கோபங் கொண்டு பொங்கி வந்து இவளை வெள்ளத்தோடு அடித்துக் கொண்டு போகப் பார்த்தாள்!"

"ஆமாம்; எனக்குக் கூட நினைவு வருகிறது. அந்தச் சபதம் ஏதோ விளையாட்டு என்றல்லவா நினைத்தேன்?"

"அதுதான் இப்போது வினையாக முடிந்திருக்கிறது! இவள் சிங்காதனம் ஏற மாட்டாளாம் என் சகோதரனுடன் சிங்காதனம் ஏறிப் பட்டமகிஷியாக விளங்குவதற்கு வேறு யாரையாவது கலியாணம் செய்து கொள்ள வேண்டுமாம். இவள் அவனுடைய அரண்மனையில் தாதிகளோடு தாதியாக இருந்து தொண்டு செய்து வருவாளாம்! இதையெல்லாம் கேட்பதற்கே எனக்குச் சகிக்கவில்லை. சோதிடரே! தாங்கள் இந்தப் பெண்ணைப் பற்றிக் கூறியதெல்லாம் நினைவிருக்கிறதா?"

சோதிடர் முகமலர்ச்சியுடன் "நன்றாக நினைவிருக்கிறது. தேவி! நான் சேர்த்து வைத்திருந்த சோதிட நூல்களுடன் பற்பல தேசங்களின் இராஜ குமாரர்கள் — ராஜ குமாரிகளின் ஜாதகங்களையும் காவேரித் தாய் கொண்டு போய் விட்டாள். ஆனால் இந்தப் பெண்ணரசியின் ஜாதகம் மட்டும் என் மனச் சுவடியில் படிந்திருக்கிறது. இவருடைய கையில் உள்ள ரேகைகள் என் கண் முன்னாலேயே நிற்கின்றன. அம்மணி! நான் கூறிய சோதிடத்தில் வேறு எது பலித்தாலும் பலிக்கா விட்டாலும் இவரைப் பற்றி நான் கூறியது பலிக்காமற் போகாது!"

"இந்தப் பெண்ணைப் பற்றி என்ன சொன்னீர்கள் என்பது தங்களுக்கு இப்போது நினைவிருக்கிறதா?"

"நன்றாக நினைவிருக்கிறது. இவரை மணந்து கொள்ளும் பாக்கியசாலி திருமடந்தையையும் நிலமடந்தையையும் ஒருருவத்தில் மணந்து கொண்டவனவான் என்று சொன்னேன். இந்த மாதரசியைப் பார்க்கும் பாக்கியத்துக்காகத் தேச தேசாந்தரங்களில் உள்ள பேரரசிமார்கள் தவங் கிடப்பார்கள் என்று கூறினேன். இவருடைய திருவயிற்றில் உதிக்கப் போகும் புதல்வன் பிறக்கும்போதே ஜயக் கொடி நாட்டிக் கொண்டு பிறப்பான். அவன் போகுமிடமெல்லாம், அவன் பார்க்குமிடமெல்லாம் வெற்றி என்று சொன்னேன்...."

"ஐயா! நீங்கள் இப்படியெல்லாம் சொல்லச் சொல்ல என்னுடைய கவலைதான் அதிகமாகிறது!"

சோதிடர் சட்டென்று நிமிர்ந்து உட்கார்ந்து, "தேவி! கவலையா? எதற்குக் கவலை? சோழ சாம்ராஜ்யத்துக்கும் சோழர் குலத்துக்கும் கவலைப்பட வேண்டிய காலமெல்லாம் போய் விட்டது. இன்றைக்கு ஒரு விசேஷ நாள் என்பது நினைவிருக்கிறதா?"

"ஆம்; இன்றைக்கு மார்கழித் திருவாதிரை நாள்! சிவனுக்கு உகந்த திருநாள்!"

"இது சோழர் குலத்துக்கும் உகந்த நாள்; தெய்வத் தமிழகத்துக்கும் உகந்த நாள். தேவி! கேளுங்கள்! இதே மார்கழித் திருவாதிரையில் வருகிற ஆண்டுகளிலே ஒன்றில் ஓர் அற்புதம் நடக்கப் போகிறது! சங்கு சக்கரம் கையில் ஏந்தாமலே திருமாலின் பூரண அம்சமான குழந்தை ஒன்று உதிக்கப் போகிறது! அந்தக் குழந்தையின் மூலம் இந்தச் சோழ நாடு இதற்கு முன் என்றும் கண்டிராத மகோந்நதத்தை அடையப் போகிறது! ஆகா! என்னென்ன அதிசயங்கள் நடக்கப் போகின்றன? அவற்றைப் பார்க்க நான் ஒரு வேளை உயிரோடு இருக்க மாட்டேன்; தாங்கள் பார்த்து மகிழ்வதற்கு நீண்ட காலம் வாழ்வீர்கள்!"

இப்படிச் சோதிடர் ஆவேசம் வந்தவர் போல் பேசி வருகையில் குந்தவையும் மெய் மறந்து கேட்டுக் கொண்டிருந்தாள்.

திடீரென்று ஏதோ சப்தம் கேட்டு இருவரும் திரும்பிப் பார்த்தார்கள்.

கூண்டிலிருந்த கிளி சடசடவென்று சிறகுகளை அடித்துக் கொண்டிருந்தது. அதன் மேல் தாவ முயன்று கொண்டிருந்த பூனையின் மீது வானதி ஓர் ஓலைச் சுவடியை எடுத்து எறிந்தாள்!

எறிந்து விட்டு, "அக்கா! சோதிட சாஸ்திரம் பயனுள்ளதுதான். சோதிடச் சுவடியைக் கொண்டுதான் இந்த அழகான இனிய வார்த்தை பேசும் கிளியைக் காப்பாற்ற முடிந்தது! இல்லாவிட்டால் அதன் சிறகுகளைப் பூனை இத்தனை நேரம் பிய்த்துப் போட்டிருக்கும்!" என்றாள்.

(தொடரும்)

பரோபகாரி

சங்கரன் மெல்லத் தலையை உயர்த்திப் பார்த்தான். நிறையப் பேர் வந்து கூடி விட்டார்கள். எல்லாம் எங்கோ எப்போதோ பார்த்துப் பரிச்சயமான முகங்கள் — நிலம் குத்தகைக்குப் பார்த்தவர்கள். தாசில்தார் ஆபீஸ் மாஜி குமாஸ்தாக்கள். உள்ளூர்க்காரர்கள் என்று எல்லாமே அப்பாவுக்கு வேண்டியவர்கள். எப்படியோ செய்தி எட்டி விட்டது. வெளியூர் நண்பர்களுக்கும் உறவுக்காரர்களுக்கும்தான் சொல்லி விட வேண்டும். சங்கரனுக்கு அந்த க்ஷணம் எதுவும் ஓடவில்லை. இத்தனை சமீபத்தில் அப்பாவின் மரணத்தை எதிர்பார்க்கவேயில்லை. திடுமெனத் திரியை இழுத்து எண்ணெய்க்குள் போட்டது மாதிரி அணைந்து போவார் என்று எதிர்பார்க்கவில்லை. ரேழி தாண்டினதும் நடை வாசலில் அப்பாவைப் படுக்க வைத்திருந்தார்கள். அவரைப் பார்த்த மாத்திரத்தில் குபுக்கென்று பொங்கிவிட்டது. சுவரில் மோதிக் குலுங்கி அழுதான். சங்கரன் அழுவதைப் பார்த்ததும் தம்பி கண்ணனும் செல்வாவும் அழுது விட்டார்கள்.

பெரியவர் ஒருவர் வந்து சங்கரனை நெஞ்சில் சரித்துக் கொண்டு மெல்ல வாசலுக்கு அழைத்து வந்தார். காலை வெயில் முகத்தில் கூர்மையாகப் பாய்ந்தது.

"பந்தல் காரனுக்குச் சொல்லி அனுப்புங்க..."

"மேளக்காரனுக்கும் சொல்லணும். வெட்டியான் எல்லாம் எங்கே போயிட்டானுங்களோ? தேடிக் கொண்டாரணுமே! ஆள் அனுப்பினாத்தான் உண்டு. முன்ன மாதிரி அவனுங்களாத் தேடி வர மாட்டானுவ."

"அவசரப்படாதீங்கப்பா."

"வெயில் ஏறிட்டே போகுதேய்யா."

திசைக்கொரு குரல் எழும்பிற்று. மூர்த்தி எங்கிருந்தோ வேர்த்துப் போய் வந்தான். இந்த மாதிரித் துக்க காரியமோ நல்ல காரியமோ மூர்த்தி கூப்பிடாமலே வந்து விடுவான். சகலத்தையும் வாரித் தலையில் போட்டுக் கொள்வான்.

"எங்கே போனே மூர்த்தி? நீ இல்லாம ஒரு காரியமும் ஓடலை. சட்டுப் புட்டுனு வேலையைப் பார்."

மூர்த்தி இலேசாகச் சிரித்துக் கொண்டான். நேராகச் சங்கரனிடம் வந்தான். தோளில் கை போட்டுக் கொண்டு சங்கரனைத் தனியாகப் பிரித்துக் கொண்டு போனான்.

"அழுவாதே பிரதர். உன்னைப் பார்த்துத் தம்பிங்களும் அழுவுது பார். வெளியூருக்குச் சொல்லி விடணும்மா சிலதுக்குத் தந்தி கொடுத்திடலாம். ரொம்ப முக்கியமான ஆளுங்களுக்குச் சொல்லி அனுப்புவோம்."

"சீரங்கம், சிதம்பரம்... தேனி இதுக்கு மட்டும் ஆள் அனுப்பினாப் போதும்."

"செய்திடுவோம் பிரதர். கையில பணம் இருக்கா? பாவம் எதிர்பார்த்திருக்கவே மாட்டீங்க. திடீர்ச் செலவு. பந்தல்காரனை வரச் சொல்லிட்டேன். வெட்டியானுக்குக் கொய்யாத் தோப்புக்கு ஆள் அனுப்பிச்சுட்டேன். சவினிங் ஏதாவது பண்ணணுமே? சமையல்காரனுக்குச் சொல்லி விடணும். அவன் முதல்லேயே அட்வான்ஸ் கொடும்பான்..."

"எவ்வளவு வேணும் மூர்த்தி?"

"நாப்பது பக்க நோட்டு வாங்கியாந்து அப்பப்ப செலவு ஆகிறதை எழுதிடுவோம். எவ்வளவு செலவு ஆகும்னு நமக்கு எப்படித் தெரியும்? ஐயா ஜே... ஜேன்னு வாழ்ந்த மனுஷன். சிறப்பாக் கொண்டு போய்ச் சேர்க்காட்டி ஊர்லே நாலு விதமாப் பேசிடுவானுங்க..."

"சரி. எவ்வளவு தேவைப்படும்?"

"எப்படியும் அஞ்சு நோட்டுல கொண்டு போய் விட்டுடும்."

சங்கரனுக்குத் திக்கென்றது. கண்களை இருட்டு அழுத்திற்று. ஐந்தாயிரத்திற்கு எங்கே போவது என்று பிசைந்தது. அப்பாவின் வைத்தியச் செலவுக்கே தண்ணீராய் ஓடிற்று! ஆபீஸில் அத்தனை லோன்களையும் உருட்டித் திரட்டி எடுத்தாயிற்று! தம்பி பணம் வைத்திருப்பானா? அவனிடம் எப்படிக் கேட்க முடியும்? தொட்டதுக்கெல்லாம் என் முகம் பார்க்கின்றார்களே!

"என்ன பிரதர் யோசிக்கிறீங்க?"

"ஒண்ணுமில்லை மூர்த்தி. முதல்ல பந்தல் போடுறதுக்கு ஏற்பாடு பண்ணு."

"வந்துட்டான். எப்படான்னுதானே காத்துட்டிருக்கான். தெருவை அடைச்சு நீளமாப் போடச் சொல்லியிருக்கேன். அட்வான்ஸ் ஒரு நூறு ரூபா கொடுத்தனுப்புங்க..."

"முதல்ல பதினெட்டு நாள் பந்தல் வாடகை எத்தனைன்னு பேசிக்கலாம் மூர்த்தி. பிற்பாடு அட்வான்ஸ் பார்க்கலாம்." பந்தல்காரன் குறுக்கே நின்றான். மூர்த்தி அவனுடன் உரக்க விவாதித்தான். அவன் நூற்றி ஐம்பது ரூபாயை உள்ளங்கையில் அழுத்தி விட்டு வேலையைக் கவனி என்றான். மூர்த்தியின் பரபரப்பும் கோபமும் சங்கரனுக்கு வியப்பூட்டின. எதிராளியை மடக்குகின்ற திறுகும் அவன் பேச்சும் எல்லோருக்கும் வியப்பாயிருந்தது. துக்க வீடு முழுக்க ஊதுபத்திப் புகை மாதிரி

பாரதிபாலன்

மூர்த்தி சுழன்றான்

"பிரதர்! வெட்டியான் வந்துட்டான். காப்பிச் செலவுக்குக் கொடுத்து விடுங்க. போய் ஜோலியைப் பார்க்கட்டும். எரு, விறகு எல்லாம் அவனே ரெடி பண்ணிடு வான்."

சங்கரன் ஆயிரம் ரூபாயை எடுத்து மூர்த்தியிடம் கொடுத்தான்.

"என்ன பிரதர்!"

"நீயே செலவு பண்ணு மூர்த்தி. எது தேவையோ அதுக்குச் செலவு பண்ணிக்க. பொழுதுக்கும் என்கிட்டே வராதே! என் னாலே ஒண்ணும் முடியலே மயக்கமா வர்றது..."

மூர்த்தி சட்டென்று மண் தரையில் சங்கரனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான். அவன் புஜத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டான். "என்னா செய்யுது பிரதர்? முடிய லைன்னா கொஞ்சம் படுத்துக்கயேன். ஜூஸ் எதுனா வாங்கியாந்து தரட்டுமா?" மிகவும் வருடலாய்ப் பேசினான். மூர்த்தி யின் உபசரிப்பு சங்கரனுக்கு அந்த இடத்தில் என்னவோ போல் இருந்தது. "இந்தா மூர்த்தி. இதுல ஆயிரம் ரூபாய் இருக்கு" என்று பணத்தைக் கொடுத்துவிட்டு, சங்கரன் தலையைக் கவிழ்ந்து உட்கார்ந்து கொண்டான்.

"எருவுக்கும் விறகுக்கும் எவ்வளவு ஆகும்?" மூர்த்தி பணத்தை எண்ணிக் கொண்டே வெட்டியானிடம் கேட்டான்.

"கொடு சாமி! இது என்னா புதுசாக் கேக்குற... உனக்குத் தெரியாதா?"

"ஐம்பது தர்றேன். சுத்தமா வேலையை முடிச்சுடுங்க."

"ஐம்பது போதாது சாமி. ரெண்டாள் வேலை. ராவு முழுக்க முழிச்சுக் கெடக்க ணும்."

"சரி எவ்வளவு கேக்குற?"

"என்னத்த சாமி உன்கிட்டப் போய்க் கேக்கிறது. இருநூறு கொடுத்துடுங்க. ஐயா பேரைச் சொல்லி ரெண்டு நாள் சாப்பிட் டுக்கிறோம். மற்றபடி கோடி வேஷ்டி துண்டெல்லாம் தனி அதையெல்லாம் சொல்லணுமா?"

"புத்தியைக் காட்டிட்டியேப்பா! பட்டுனு இருநூறு கொடுன்றயே. வெறும் இருபது ரூபாய்க்கு ஓடியாந்தவன். இப்ப சம்பாதிச்சுக் கிட்டாத்தான்னு பாக்குறியா?"

"கடவுளே! அப்படியெல்லாம் பேசா தேய்யா. வயித்துக்குத்தானே கேட்கிறேன்."

"நூறு ரூபா தர்றேன். ஒழிஞ்சு போ. வேலை சுத்தமா இருக்கணும்.."

"எங்க ரெண்டு பேருக்கும் தலைக்கு நூறாக் கொடுத்துடு சாமி" என்றான் வெட்டியான் உதவியாளனைச் சுட்டிக்



காட்டி.

"இதா பாரு என் கூட வம்பு பண்ணாதே: நம்மள விட்டா இந்தக் காரியத்தை யார் செய்வான்னு ஏறிக்கிறானுங்க. பாத்தியா நெத்தியில அடிச்ச மாதிரி இருநூறு கொடுன்றான்! அதான் அப்பவே நம்மூர் பிரஸிடெண்ட்டுட்டச் சொன்னேன். பேசாமல் ஊர் வரிப் பணத்துல ஒரு பிணம் எரிக்கிற மிஷின் வாங்கிடணும்னு..''

"அதுக்கும் மிஷின் வந்தாச்சா?'' யாரோ ஒருவன் மூர்த்தியிடம் ஆர்வமாகக் கேட்டான்.

"எப்பவோ வந்தாச்சு! அது ஒண்ணு செலவானாலும் பரவாயில்லைன்னு வாங்கிப் போட்டுட்டா, இந்தப் பயலுங்களைத் தொங்க வேண்டியதில்லை பாருங்க. அவசரம்னு கூப்பிட்டா ஏறிக்கிறானுங்களே..!''

"அப்ப நம்மூர் பஞ்சாயத்துலே முதல் வேலையா ஒரு பொணம் எரிக்கிற மிஷின் வாங்கிப் போடணும். மத்த ஊர்க்காரன் செய்யறதுக்குள்ள நாம முந்திடணும் மூர்த்தி.

"செய்திடலாம் பிரதர்.''

வெட்டியான் கண்களை மலர்த்தி மூர்த்தியையும் சுற்றியிருந்தவர்களையும் வியப்பாய்ப் பார்த்தான். அவன் கண்கள் நலும்பின. இப்படித்தானே தெருக் குப்பை அள்ளிக் கொண்டிருந்த ஒற்றை மாட்டு வண்டியைத் திடுமென ஒருநாள் நிறுத்திவிட்டுக் குப்பை அள்ளுவதற்கு டிராக்டர் வாங்கி விட்டார்கள் என்ற பயம். இப்படி எப்போதோ ஓர் அசுப காரியம் நடக்கின்ற போதுதானே கையில் பணம் கூடுகின்றது? இனி இதிலும் மண் விழுவா போகிறது! முகத்தில் இருள் படர்ந்தது.

"வேண்டாம்யா! பொணம் எரிக்கிற மிஷினெல்லாம் கொண்டாந்திடாதீங்க. தப்பிதமா நான் நடந்திருந்தா செருப்பைக் கழற்றி அடிச்சுடுங்க. அந்த மிஷினெல்லாம் வேண்டாம்!''—அவசரமாகச் சொன்னான் வெட்டியான். மூர்த்திக்குச் சிரிப்பு வந்தது. சிரிக்க முடியவில்லை. "சரி, போ, நூற்றி ஐம்பது தர்றேன்'' என்று பேச்சை முடித்தான்.

"வேண்டாம்யா! எனக்குப் பைசா துட்டு வேண்டாம். காப்பித் தண்ணி மட்டும் வாங்கிக் கொடுங்க. ஐயா சொன்ன வேலையைச் சுத்தமாச் செய்திடறேன்'' என்றதும் மூர்த்திக்கு வியப்பாயிற்று. ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டு சுவைத்தான். தெருக்கடையில் வெட்டியானுக்குக் காப்பி வாங்கிக் கொடுத்தான்.

"எதுவும் பேசுவதற்கு அவகாசமில்லை. போய் வேலையைக் கவனி. பிற்பாடு பேசுவோம்'' என்றான்.

"மிஷின் கொண்டாந்திட மாட்டீங்களே!''

"மாட்டேன்!''



"கடையிலே போய்ப் பத்து சாமான்கள் வாங்கிட்டு வரச் சொன்னேன்; ஒன்பதுதான் வாங்கிட்டு வந்திருக்கான்...''

"யாரு?''

"என் ஒன்றுவிட்ட தம்பி!''

— கவிட்ரவி.

சமையல் பாத்திரங்கள் வாடகை வண்டியில் வந்து இறங்கின. மூர்த்தி நடு வெயிலில் நின்று கொண்டு பாத்திரங்களைச் சரிபார்த்துக் கொண்டிருந்தான். உடம்பெல்லாம் வியர்த்து ஊற்றியது. சங்கரன் மூர்த்தியைப் பிரமிப்பாய்ப் பார்த்தான். இப்படி வந்து நமக்காக உழைக்கிறானே என்ற பிரமிப்பு - இந்தத் தேசத்தில் பலனை எதிர்பார்க்காது பாடுபடவும் ஆள் இருக்கிறதே என்ற பிரமிப்பு - மூர்த்தி சங்கரனின் மனத்தில் பால் மாதிரி பொங்கினான்.

"வேலைக்குப் போவலையா?''

சட்டென்று மூர்த்தி நிமிர்ந்து பார்த்தான். அவன் மனைவி வந்து நின்று கொண்டிருந்தான்.

"நீ எதுக்கும இங்கே வந்து தொந்தரவு பண்றே? வூட்டுக்குப் போ!''

"வேலைக்குப் போகாம இப்படி வந்து புழுக்கை வேலை செய்யுறீங்களே! வூட்டுலே இன்னும் அடுப்பு மூட்டலை! பிள்ளைங்க எல்லாம் திங்க ஆலாப் பறக்குதுங்க. வேலைக்குப் போனாலாவது முப்பது ரூபா கிடைக்குமே...?''

"வூட்டுக்குப் போ! நான் வர்றேன்.''

"வூட்டுலே இருக்க முடியலை. பிள்ளைங்க எல்லாம் பறக்குதுங்க. ஏன் இப்படி அடுத்த வீட்டுல வந்து எடுபிடி வேலை செய்வானேன்?''

"போடி! மிதிச்சுடுவேன்!''

"ப்தூ! சம்பாதிக்கத் துப்புக் கிடையாது!''

மூர்த்திக்குத் திடீரென்று வெறிக்குணம் பிறந்தது. கையில் வைத்திருந்த பையிலிருந்து இரண்டு நூறு ரூபாய்த் தாள்களைத் தூக்கி அவள் மீது வீசினான். அவள் பூதமாய்ப் பார்த்தாள்.

மூர்த்தி நாற்பது பக்க நோட்டைப் பிரித்து, 'வெட்டியானுக்குக் கொடுத்த வகையில் இருநூறு' என்று எழுதினான்.

பார்த்துக் கொண்டிருந்த சங்கரனின் மனசு கத்திரித்துப் போட்டது மாதிரி துடிதுடிக்க ஆரம்பித்தது!

அதிர்ஷ்ட

ரங்கனால் விரைவாக நடக்க முடிய வில்லை. மனம் அலறியது. தனக்குப் பைத்தி யம் பிடித்துக் கொண்டு வருவதாக அவன் தனக்குத்தானே கூறிக் கொண்டான். எந்த வழியில் சென்றால் வீட்டை அடையலாம் என்ற பிரக்ஞை கூட அற்றுப் போய் விட்டது. ஆழ்வார்ப்பேட்டை சதுக்கத்தை அடைந்தவன் திசை தெரியாமல் விழித்தான். நெஞ்சை ரமணி இன்னும் பிழிந்து கொண் டிருந்தான். நம்பிக்கை துரோகம் பற்றி அவன் கேள்விப்பட்டிருக்கிறான். இப் போது அனுபவ ரீதியாக உணர்ந்த போது முதலில் தீராத கோபமும் அதன் பின்னர் அடங்காத துயரமும் உண்டாயின. மோபரீஸ் சாலை வழியாக நடக்காமல், மனத்தின் கொந்தளிப்பில், கால்கள் எல்டாம்ஸ் சாலையில் பிரவேசித்தன. நீண்ட தூரம் நடந்த பிறகுதான் புத்தி வந்தது. இனித் திரும்பிச் செல்வது, நடக்க வேண்டிய தூரத்தை அதிகரிக்கும் என்ற எண்ணம் பிறக்கவில்லை. திரும்பினான். எல்டாம்ஸ் சாலையின் எல்லை வந்து விட்டால், வலது புறமாக அண்ணா சாலையை அடைந்து நடக்கலாம் என்று தோன்றவில்லை.



மீண்டும் ஆழ்வார்ப்பேட்டை.

இப்போது திடீரென்று ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது. ரமணியின் தாயார் எந்த ஊர் என்று சொல்லவில்லை. 'வெளியூர்' என்று தான் கூறினாள். பஸ்ஸா, ரெயிலா, விமானமா என்றும் குறிப்பிட வில்லை.

என்ன முட்டாள் அவன்?

ரமணியின் வீட்டை நோக்கி நடந்தான். இப்போது கோபம் இல்லை. துயரமும் சற்றே விலகியிருந்தது. ரமணி நிச்சயமாக பரிசுச் சீட்டுடன் ஓடியிருக்க மாட்டான் என்ற நம்பிக்கை அரும்பாக முளைத்தது. அவனை ஆளாக்கியவன் ரமணி. அவனுக்கு வழி காட்டியாக இருந்தவன் ரமணி. அவனு டைய மனம் துயரப்பட்ட போதும், பலவீனம் அடைந்த போதும் ஆறுதல் அளித்து, தைரியம் கொடுத்தவன் ரமணி. அவனுடைய பணத்தைப் பத்திரப்படுத்தி வைத்திருப்பது போல, பரிசுச் சீட்டையும் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறான். பரிசு பெற்றுள்ள செய்தியே ரமணிக்குத் தெரிந் திருக்காது. ரமணி எங்கே, மாலையில் வெளியாகும் தமிழ் தினசரிகளைப் படிக் கிறான்? நிச்சயமாக, வேறு ஏதோ அவசர வேலையாகத்தான் வெளியூர் சென்றிருக்க வேண்டும். ஆனால் வீட்டில் அவன் ஒப்படைத்த பரிசுச் சீட்டுகள் இல்லையே? ரமணியின் தாயார் தேடினாளே. ஒருவேளை வீட்டிலுள்ளவர்களுக்கும் தெரி யாமல் எங்காவது ஒளித்து வைத்திருப் பானோ? ஊஹூம். இருக்க முடியாது. ரங்கன் மாதா மாதம் பணத்தைப் பரிசுச் சீட்டுகளில் விரயமாக்குவதைக் கண்டிக்கிற வன், ரமணி. புதையலைப் பத்திரப்படுத்து வது போல அவன் கொடுத்து வைத்த சீட்டு களை ஒளித்து வைக்க வேண்டிய எண்ணமே ரமணிக்கு வந்திருக்காது.

8

பரிசுச் சீட்டு எங்கே?

ஒருவேளை ஆபீசிலேயே மேஜை டிராயரில் வைத்திருப்பானோ? பாங்க் புத்தகத்தை அங்கேதானே வைக்கிறான்?

அபிராமபுரம் வரை சென்றவன், ரமணியின் வீட்டை மறந்தான். இப்போது மண்டையில் ஒரு தெளிவு பிறந்தது. பரிசுச் சீட்டு ஆபீசில்தான் இருக்கிறது என்று மனம் உறுதி அளித்தது.

நடக்கலானான்.

என்ன மணி என்று தெரியவில்லை. மோபரீஸ் சாலை கேட்பாரற்று நீண்டது. ராயப்பேட்டையை அடைந்ததும், ஒளிப் பிழம்புடன் காட்சி அளித்த ஒரு ஓட்டலைக் கண்டான். வாயிலில் நின்று உள்ளே எட்டிப் பார்த்தான். தேடிய சுவர்க் கடிகாரம் கண்ணில் பட்டது. பன்னிரண்டரை.

மணியைத் தெரிந்து கொண்டு என்ன லாபம்? இந்த ஞானம் தாமதமாக, அதைத் தெரிந்து கொண்ட பிறகு பிறந்தது.

நடந்தான். நடந்தான். கால் வலிக்கவில்லை. இருபத்தைந்து லட்சம் ரூபாய் நிச்சயமாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கை ஊற்றெடுத்தது. சீட்டு நிச்சயமாக ரமணியின் மேஜையில்தான் இருக்கிறது; சந்தேகமே இல்லை! அவன் நாளைக்கு பெரிய பணக்காரனாக ஆகி விடுவான்.

போதை ஏற ஏற ரங்கன், பதினாறு வயது வாலிபனைப் போல ஓடினான். கால் வலி தெரியவில்லை. மன வலி மறைந்து விட்டது.

கட்டட வாசலில் கூர்க்கா இன்னொரு கூர்க்காவுடன் பேசிக் கொண்டிருந்தான். அவனுக்கு ஏற்கெனவே ரங்கனைத் தெரியும். மடக்கவில்லை, கேள்வி கேட்கவில்லை.

ஆபீஸ் கதவு உள் பக்கமாகப் பூட்டப் பட்டிருந்தது.

தட்டினான். திறக்கப்படவில்லை.

"மயிலு... மயிலு... கதவைத் தொற... ரங்கன் வந்திருக்கேன்."

பதில் இல்லை.

கதவின் மீது காதை வைத்துப் பார்த்தான். பயங்கரமான குறட்டைதான் கேட்டது.

ரங்கனுடைய சோனிக் கைகளும் சோனிக் கால்களும், மயில்சாமியின் குறட்டையை உடைக்காமற் போகவே, ஒரு யோசனை தோன்றியது.

ஆபீஸ் வாயிலுக்கு வெளியே, இரண்டு மூன்று மரக்கட்டைகள் இருந்தன. ஒன்றை எடுத்தான். தூக்க முடியாமல் தூக்கினான். கதவை பலம் கொண்ட மட்டும் இடித்தான்.

"யார்டா அது சோமாறி!"

மயில்சாமி அரைத் தூக்கத்தில் கத்தினான்.

மீண்டும் ஒரு இடி.

"கஸ்மாலம், இந்த வேளையிலே எவன்டா இடிக்கிறான்... கய்தே, யார்டா அது?"

"மயிலு... மயிலு.. நான்தான் ரங்கன்... ரங்கன்!" அவன் கத்தினான்.

கதவு திறந்தது.

"யோவ், இன்னா நீ...? என் பொண்ணைத் தனியா வுட்டுட்டு இங்கே வந்து நிக்கறே? அவ ஒன்னை அடிச்சாளா?"

"இல்லே மயிலு. நான் மயிலாப்பூர்லேந்து ஓடி வர்றேன்."

"அங்கே எங்கே போனே? இப்ப மணி ரெண்டு."

"ரமணி சார் மேஜையைத் தொறக்கணும். மயிலு."

"இன்னா சொன்னே? ரமணி சார் மேஜையைத் தொறக்கணுமா?"

"ஆமாம் மயிலு."

"எங் கையிலே ஏது சாவி? அது அந்த ஆள்ட்டதான் இருக்கு."

"அப்ப உடைச்சுடு..."

"யோவ், நீ என் மருமகப் புள்ளைதான். ஆனா அதுக்காக என் டூட்டியிலே கை வைக்க மாட்டேன்."

"விவரமெல்லாம் அப்பாலே சொல்றேன்... மேஜையை உடைச்சுடு. மயிலு."

"முடியாது. வெளியே போ... இல்லாட்டி, உன் வேலை பூடும்."

"ஐயோ கடவுளே!"

ரங்கன் வெளியே புலம்பினாலும் உள்ளே ஒரு விவேகம் பிறந்திருந்தது. தனக்கு இருபத்தைந்து லட்சம் ரூபாய் பரிசு விழுந்திருக்கிறது என்று மயில்சாமியிடம் சொல்லி விட்டால் அவ்வளவுதான். பரிசுச் சீட்டைப் பறித்துக் கொண்டதோடு நிற்காமல், அவனை அங்கேயே தீர்த்துக் கட்டி, ஒரு கோணியில் போட்டுத் தைத்து சமுத்திரத்தில் எறிந்து விடுவான்.

என்ன செய்ய?

உண்மையைச் சொன்னால் நிச்சயமாக, பரிசுச் சீட்டு, அது மேஜையினுள் இருந்தாலும், அவனுடைய கைக்கு வராது.

"போய்யா வூட்டுக்கு... ஆபீஸ் தொறந்ததும் வா... எந்த மேசையை வோணும்னாலும் ஒடை" என்றான் மயில்சாமி.

சூதுவாது தெரியாத ரங்கனுக்கு ஒரு நம்பக்கூடிய பொய்யை உதிர்க்க வரவில்லை. எந்த ஒரு மிருகத்திடமும் இயல்பாய் வரக்கூடிய பயமும் முன்ஜாக்கிரதை

பி.வி.ஆர்.

உணர்வும் அவனிடமும் தோன்றின.

அவன் மெதுவாக நகர்ந்தான்.

''யோவ், ரங்கா!''

''என்ன மயிலு?''

''இந்த நேரத்தில வந்து மேசையை ஒடைன்னியே அதுக்கு இன்னா அர்த்தம். அதுக்குள்ளாற இன்னா இருக்கு? ஹங்.. சொல்லுய்யா?''

ரங்கன் பதில் சொல்லாமல் அவசர அவசரமாக வெளியேறி, மாடிப்படியை அடைந்தான்.

வீட்டை அடைந்து அவன் கதவைத் தட்டிய போது, ''யாருய்யா அது?'' என்ற குரல் அதட்டியது.

''தனம், நான்தான்.''

''டிக்கட்டு கிடைச்சுதாய்யா?''

கதவைத் திறக்கையிலேயே கேட்டாள்.

''இல்லே, தனம்.''

''இன்னாய்யா சொல்றே. டிக்கட்டு கெடைக்கலியா? யோவ், எங் கைகியிலே பொய் சொன்னே, ஒன்னைக் கிளிச்சுடுவேன்.''

முதன் முறையாகத் தனத்தைக் கண்டு ரங்கனுடைய நெஞ்சம் அலறியது. அப்பனைப் போலத்தானோ பெண்ணும்? ஒரு ஆவேச வெறியில், அவன் தனக்கு லாட்டரியில் பரிசு கிடைத்திருப்பதை மனைவி என்ற உறவின் காரணமாக அவளிடம் சொல்லி விட்டான். இது அவனுக்கே ஆபத்தாகப் போகிறதா?

''சத்தியமாச் சொல்றேன், தனம். ரமணி சார் விட்டுக்குப் போனேன். அவரு வெளியூர் போயிருக்காராம்.''

''பூட்டானா? ஒன் இருபத்தஞ்சு லட்சத்தை எடுத்துக்கிட்டு ஓடிட்டானா...''

''இப்படிப் பேசாதே. தனம்... ரமணி சார் நல்லவர்... ஏமாத்த மாட்டார்.''

''யோவ், சும்மாக் கிடய்யா... அந்த ஆளு உன்னை ஏமாத்திட்டான்.''

''இல்லே, தனம்... டிக்கட்டை ஆபீஸ் மேஜைக்குள்ளேதான் அவரு வைச்சிருப்பாரு.

''அப்ப அங்கே போய் பாக்கறது.''

''போனேன்... உன் அப்பா மேஜையை உடைக்க முடியாதுன்னு என்னை விரட்டிட்டார்.''

''என் அப்பன் கைகியிலே இன்னா சங்கதின்னு சொன்னியா?''

''இல்லே...''

''ஒனக்குக் கூட அறிவு இருக்குதய்யா. அந்த ஆளு பொல்லாத ஆளு.. பொண்டாட்டி கழுத்திலேந்து செயினைத் திருடின ஆளு.''

''மயில்சாமி உன் அப்பா.''

''அப்பன்காரனா இருந்தா என்னய்யா? ஏமாத்த மாட்டானா?''

''அப்ப அவர்ட்ட சொல்ல வேண்டாம்னு சொல்றியா தனம்?''

''டிக்கட்டு கைக்கு வரட்டும். அப்பாலே டமாரம் அடிப்போம்.''

''சரி.''

''யோவ்!''

''என்ன தனம்?''

''பணம் கெடைச்சதும் வளையலு, கம்மலு அல்லாம் வாங்கணும்.''

''வாங்கலாம்.''

''எனிக்கு நம்பிக்கை இல்லை. அந்த ரமணி, நான்தான் டிக்கட் வாங்கினேன்னு சாதிப்பான். ஒலகம் அவனைத்தான் நம்பும்.''

''இல்லே தனம். நீ நினைக்கிறது தப்பு. என் டயரியிலே நம்பர் எழுதியிருக்கும்.''

''யார் எழுதினாங்க?''

''ரமணி சார்தான்.''

''டயரியும் என் டயரிம்பான். நீ அதைத் திருடிட்டேம்பான்.''

அவளை எப்படி நம்ப வைப்பது என்று ரங்கனுக்குத் தெரியவில்லை.

''யோவ்!''

''என்ன தனம்?''

''பணம் கைக்கு வந்ததும் புச்சா ஒரு ஊடு வாங்கணும்.''

''வாங்கலாம்.''

''காரு வாங்கணும்.''

''வாங்கலாம், தனம்.''

''நான் பட்டுப் பொடவைதான் கட்டிப்பேன்... வைரக் கம்மல் போட்டுப்பேன்.''

''இப்பத் தூங்கு தனம்.''

''யோவ், பணம் ஒன் கைக்கு வந்தப்புறம் என்னை விட்டு ஓடினே, நான் இன்னா செய்வேன் தெரியுமா?''

ரங்கன் பதில் கூறவில்லை.

''என்னைக் கைவுட மாட்டியே?''

''மாட்டேன்.''

''சத்தியமா? என் தலையிலே அடிச்சுச் சொல்லு... கப்பூரம் ஏத்திச் சொல்லு.''

''சத்தியமா, உன்னைக் கைவிட மாட்டேன், தனம். உன் மேல் ஆணையா!''

அவனுடைய தலையை வலது கையால் தொட்டான்.

''யோவ்!''


''என்ன தனம்?''

''எதிர் வீட்டு ராமு சுத்த அல்பம்டா.''

''எப்படிச் சொல்றே?''

''சட்டையை 'அயர்ன்' பண்ணக் கொடுக்கிறதுக்கு முந்தி நல்லாக் கசக்கிட்டுத்தான் கொடுக்கிறான்னா பாரேன்!''

— வி. ரேவதி.



பெண்ணின் அப்பா: பொண்ணு நன்னா பாடுவா, மாப்பிள்ளைக்கு ரேடியோ கேக்கற பழக்கமுண்டா...?

பிள்ளையின் அப்பா: "அதெல்லாம் இந்தக் காலத்திலே எவன் கேக்கறான்... நகை, பணம், ஸ்கூட்டர், ஃபிரிட்ஜ், வி.சி.ஆர், டி.வி., இதைக் கேக்கறதோட சரி..."

— காஞ்சி எஸ். ஃபைசுதீன்.



"ஒரு மாசம் பல்லைக் கடிச்சுக்கிட்டுப் பொறுத்துக்க... அப்புறம் நீ என்கிட்ட ஆசைப்பட்டதையெல்லாம் நான் தரேன்."

ரங்கனுடைய மனம் இப்போது அவனுடைய உடலில் லயிக்கவில்லை. அது சுற்றிச் சுற்றி இருபத்தைந்து லட்சத்திலேயே ஓடிக் கொண்டிருந்தது.

"சரி" என்றான் இயந்திரமாக.

விடிந்தது.

"நானும் ஆபீசுக்கு வரப் போறேன்" என்றாள் தனம்.

"எதுக்கு?"

"அந்த ஆள் கையிலே நீ கேக்கறப்ப நானும் கூட இருக்கணும்."

"ரமணி சார்தான் வெளியூர் போயிருக்காரே. என்னிக்கு வர்றார்னு தெரியாதே!"

"அப்ப உன் முதலாளி கையில விசயத்தைச் சொல்லிடலாம்."

"இப்ப யாருக்கும் தெரிய வேண்டாம், தனம்."

"அதுவும் சர்தான். ஆனா அந்த ஆள் வந்ததும் என் கையிலே சொல்லு."

"சொல்றேன்."

"ஆனா அந்த ஆள் வருவான்னு எனக்குத் தோணல."

"ரமணி சார் நல்லவரு. ஏமாத்த மாட்டாரு. நிச்சயமா வந்துடுவாரு."

தனத்துக்கு ஆத்திரம் பீறிட்டது.

"யோவ், அந்த ஆள் நல்லவருன்னு என் கையில இன்னொருவாட்டி சொல்லாதே. ஹங்ஹாங்... அந்த ஆளு முழியே சரியில்லே!"

பதில் கூறாமல் ரங்கன் வெளியேறினான்.

ஒவ்வொருவராக ஆபீசுக்கு வந்தார்கள். சுகந்தியின் டைப்ரைட்டர் மீது கிடந்த தூசியைத் தட்டிக் கொண்டே, மயில்சாமி அவளுடன் தாழ்ந்த குரலில் பேசிக்கொண்டிருந்தான். சுகந்தியை ஒரு தனிப்பட்ட முறையில் மயில்சாமி கவனித்துக்கொள்ளுவது ஆபீஸ் முழுதும் அறிந்ததுதான். ஆனால் இன்று அவன் தாழ்ந்த குரலில் பேசியது ரங்கனுக்குச் சங்கடமாக இருந்தது.

பத்து மணிக்கு மாலு வந்தாள்.

"வணக்கம், மாலு அம்மா."

"என்ன ரங்கா, என்னிக்கும் இல்லாம, நான் வந்ததுமே என்கிட்ட வர்றே?"

"ரமணி சார் என்னிக்கு வராரு?"

"என்ன கேட்டே? ரமணி சார் என்னிக்கு வர்றாரா? ஆமாம் அவர் எங்கே போயிருக்கார்?"

"வெளியூர்னு விட்ல சொன்னாங்க. உங்ககிட்ட சொல்லாம இருக்க மாட்டாரேன்னு கேட்டேன்."

"எனக்குத் தெரியாது."

"ஆபீஸ் விசயமா வெளியூர் போயிருப்பாரோ?"

"என்னைக் கேட்டா?"

"முதலாளியைக் கேட்கலாமா?"

"கேளேன்."

"பயமாயிருக்கு."

"அப்ப ஒண்ணு செய்."

"என்ன, மாலு அம்மா?"

"கேட்காதே."

காற்று இழந்த பலூனைப் போல ரங்கனுடைய முகம் சுருங்கியது.

நகர்ந்தான்.

"ரங்கா?"

சுகந்தியின் குரல்.

சென்றான்.

"என்ன ரங்கா எப்படி இருக்கே?"

"இருக்கேன்."

"என்ன உன் முகம் எப்படியோ இருக்கு. கண் ரெண்டும் சிகப்பா, பொங்கிக்கிடக்கு. ராத்திரி முழுக்கத் தூங்கலையா?"

ரங்கன் மந்தனாக இருந்தாலும் கேள்வியின் அர்த்தம் புரிந்து விட்டது. மயில்சாமி முந்தின இரவு நடந்ததைச் சுகந்தியிடம் கூறியிருக்கிறான். அவள்தானே அவனுக்கு அவ்வப்போது, ஐந்தும் பத்தும் கைமாற்று கொடுக்கிறாள்?

"அதோ பாரு ரங்கா, மாலு டெலிபோன்ல சிரிச்சுச் சிரிச்சுப் பேசறா! நிச்சயமா ரமணியாகத்தான் இருக்கும்."

மறுகணம் ரங்கன் ரமணியின் மேஜை அருகே, டெலிபோன் மூலமாக உறவாடிக் கொண்டிருக்கும் மாலுவிடம் ஓடினான்.

அவன் அவளை அடைவதற்கும், மாலு டெலிபோனை வைப்பதற்கும் சரியாக இருந்தது.

(தொடரும்)

டீன் ஏஜ் பிரச்னைகள்

—சமாளிப்பது எப்படி?

டீன் ஏஜ் என்பது 'கனவுகள் மலரும் பருவம்.' பெற்றோருக்கோ, குழந்தைகளின் இந்தப் பருவமே 'சிம்ஹ சொப்பனமாக விளங்குகிறது! இதற்குக் காரணம் என்ன? அலசுகிறார் மனித இயல் நிபுணர் வில்வி நீலங்காவில்.

'மகன் சிகரெட் பிடிக்க ஆரம்பித்திருக்கிறான் என்ற வலுவான சந்தேகம் ஏற்பட்டுள்ளது. சராசரி அம்மா இந்தப் பிரச்னையை எப்படி அணுகுவாள்? ஒரேயடியாக உணர்ச்சிவசப்பட்டுப் போய், கண்ணெல்லாம் நீர் மல்கப் பேசுவாள். "உன்னை மலைபோல நம்பியிருந்தேனே... இப்படிப் பண்ணிட்டியே...! உனக்கப்புறம் ஒரு தங்கை இருக்காடா. — அவளுக்குக் கல்யாணம் பண்ணணும். நீ எங்களை வைச்சுக் காப்பாத்தலைன்னாலும் தங்கையைக் கரையேத்தணும், தம்பி வேறே இருக்கான்..."

அப்பா இப்படி வெடிப்பார்: "நம்ம குடும்ப கௌரவம் என்ன ஆகிறது! நாளைக்கு உனக்கு ஏதாவது ஒண்ணு வந்து, நீ படுத்தா இங்கே வைத்தியம் பண்ண யாருக்கு வசதி இருக்கு... காசைக் கரியாக்கற இந்தப் பழக்கமெல்லாம் எப்படிக் கத்துக்கிட்டே...?"

அப்பாவும் சரி, அம்மாவும் சரி, 'மகனே! உன் ஆரோக்கியம் எங்களுக்கு முக்கியம், நீ எங்களுக்கு முக்கியம் என்பதைச் சொல்வதேயில்லை. குடும்ப கௌரவம், அதன் எதிர்காலம், செலவு என்பனவற்றை மட்டுமே பெரிதாகக் கருதி, குறிப்பிடுகிறார்கள்.

டீன் ஏஜ் பருவம் என்பது சுதந்திரத்தை நாடும் பருவம். ஆனால் அதே சமயத்தில் எதிர்காலம் பற்றிய ஸ்திரமான நம்பிக்கைகள் வேரூன்றாத பருவம். இந்தப் பருவத்தில் தப்பு செய்யும் ஓர் இளைஞனிடம் எதிர்காலத்தைப் பற்றிப் பயமுறுத்தும் விதமாகப் பேசும் பெற்றோர்கள் அவனுடைய நெகடிவ் சிந்தனையைத்தான் வளர்க்கிறார்கள்.

'எனக்காகச் செலவு செய்வது இவர்களுக்குக் கசக்கிறது; தங்கையின் கல்யாணத்துக்கு மட்டும் செலவு செய்யத் தயாராய் இருக்கிறார்கள். என்னைப் பயன்படுத்தி இந்தக் குடும்பத்தின் எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள நினைக்கிறார்கள். ஆனால் என் மீது இவர்களுக்கு அக்கறை இல்லை' என்று சிந்தித்து முடிவுக்கு வந்து விடுவான். விரக்தி, அதன் பயனாக இன்னும் கொஞ்சம் முரட்டுத்தனம் என்று அவன் திசை திரும்பி



* சிகரெட் பற்றிய சந்தேகமிருந்தால் என்ன செய்வது...?

விடுவான்.

உங்கள் மகன் சிகரெட் பிடிக்கிறான் என்று நீங்கள் சந்தேகித்தால் அவன் கண்களை நேராகச் சந்தித்து வெளிப்படையாகக் கேளுங்கள்:

''நீ சிகரெட் பிடிக்க ஆரம்பித்திருக்கிறாயா?'' நெஞ்சை ஊடுருவும் பார்வையோடு இக்கேள்வியைக் கேட்டால் உண்மையான பதில் நிச்சயம் கிடைக்கும்.

* வாக்கு வாதங்கள்: அறிவு பூர்வமாக அணுகுங்கள்.



''உனக்கே தெரியும், அது உடம்புக்கு நல்லதல்ல என்று... இருந்தாலும் நினைவு படுத்தறேன்...'' என்று ஆரம்பித்து விளக்கி, ''நீ ஆரோக்கியமாக வாழ்ந்து வாழ்க்கையில் எல்லாச் சந்தோஷங்களையும் அனுபவிக்கணும் என்பதுதான் எங்கள் ஆசை. அதற்காகத்தான் சொல்கிறோம்'' என்று சொல்லி முடியுங்கள். அப்பாவும் அம்மாவும் சேர்ந்து இந்தப் பிரச்னையை அணுகுவது மிகவும் நல்லது.

அப்பாவுக்கே சிகரெட் பழக்கம் இருந்தால்...?

வெளிப்படையாக ஒப்புக் கொள்ளுங்கள்.

''தெரிந்தும் தப்பு செய்து இந்தப் பழக்கத்திலிருந்து விடுபட முடியாமல் கஷ்டப்படுகிறேன்'' என்று சொல்லுங்கள். ''எனக்கு ஆபிஸில் டென்ஷன் அதிகம்!'' என்று சப்பைக்கட்டுக் கட்டுவதோடு, ''உனக்கென்ன, விளையாட்டுப் போக்கா ஊர் சுத்திட்டுத்திரியறே... ஒரு பொறுப்பு கிடையாது; வேலை கிடையாது. வேளைக்கு அம்மா ஆக்கிப்போடறாங்க. கேக்கறப்பல்லாம் பாக்கெட் மணி குடுத்துடறேன். உனக்கு என்னை மாதிரி டென்ஷனா? ஒரு கேடும் இல்லையே?'' என்று மகனை மட்டம் தட்டாதீர்கள்.

'உன் சந்தோஷம் தான் எங்கள் சந்தோஷம்' என்ற ரீதியில் பேசினால் 'சினிமா'த்தனமாக இருக்குமே? என்கிறீர்கள். தினம்தினம் குத்தலாகவே பேசிப் பழகிவிட்டால் உண்மையான அன்பின் எளிமையான வெளிப்பாடு கூட 'சினிமா'த்தனமாகத்தான் தோன்றும். எனவே குழந்தைகளிடம் எப்போதுமே குத்தலாகப் பேசுவதில்லை என்று தீர்மானித்துக் கொள்வதோடு, அன்பை வெளிப்படுத்துவதற்கும் பழகிக் கொள்ளுங்கள். அது நிச்சயமாக வளரும் குழந்தைகளை — மிதமான கட்டுப்பாட்டுக்குள் வைக்கும் கருவியாக விளங்கும்.

*வசந்தி ஒரு நாள் இரவு தனியாக உட்கார்ந்து கொண்டிருந்தாள். முகம் நிறைய ஏமாற்றம். மகள் கீதா அவளிடம் வந்தாள். ''என்னம்மா! இப்படிச் சோகமா இருக்கே?''

''மணி பத்தரை ஆச்சு. அப்பா இன்னும் ஆபீஸ்லேர்ந்து வரலை பாரு...''

''அப்பா இல்லாம உனக்கு 'போர்' அடிக்குதா?''

''ஆமாம்.''

''நான் பக்கத்தில் இருந்தால் கூட



* பெயர்கள் கற்பனை

மாதம் ஒரு தொகுதி

நிலக்கோட்டைத் தொகுதி வாசகர்களே!

உங்கள் தொகுதி நிலை பற்றிய கடிதங்களையும் அதன் முன்னேற்றத்துக்கான யோசனைகளையும் எழுதி அனுப்ப வேண்டிய கடைசித் தேதி: 7.6.90.

உங்கள் கடிதங்களைப் படித்து விட்டு, தொகுதியை 'ரவுண்ட்' அடித்து, உங்கள் எம்.எல்.ஏ.வையும் சந்திப்போம்.

கடிதங்கள் அனுப்பினால், உறையின் மேல் 'மாதம் ஒரு தொகுதி' என்று அவசியம் குறிப்பிட வேண்டும்.

— ஆசிரியர்.

அப்பா இல்லாதது உனக்குக் குறையாவே இருக்கும் இல்லையா?''

''ஆமாம்கோ. நீ இருக்கறது சந்தோஷம் தான். ஆனால் அப்பா இன்னும் வராதது வருத்தம்தான்.''

— வசந்தி தன் உணர்ச்சிகளை மறைக்கவில்லை. கணவனின் வருகைக்காக மனைவி ஏங்குவது டீன் ஏஜ் பருவ மகளுக்குத் தெரியக் கூடாது என்று வேஷம் போட்டு 'அதிகப் பிரசங்கி' என்று அவளைத் திட்டவில்லை. தன் வெளிப்படையான பேச்சு மூலம் இதுவே உலக இயல்பு — இயற்கையான நிகழ்வு என்பதை மகளுக்கு உணர்த்தினாள்.

இத்தகைய ஆரோக்கியமான பரிமாற்றங்கள் 'செக்ஸ்' பற்றிய சரியான கணிப்புக்களையும் சிந்தனைகளையும் டீன் ஏஜ் பருவக் குழந்தைகளின் மனத்தில் வளர்க்க உதவும். தங்கள் உடலில் ஏற்படும் இரசாயன மாற்றங்களை விளங்கிக் கொள்ளவும் தங்களைச் சுதாரித்துக் கொள்ளவும் பருவ வளர்ச்சி குறித்து வெட்கமும் அவமானமும் படாமல் இருக்கவும் உதவும்.

நளினி அன்று மிகவும் களைத்துப் போய் 'லேட்' ஆக ஆபீஸிலிருந்து திரும்பிய போது மகள் பானு போனில் பேசிக் கொண்டிருந்தாள். நளினி உடை மாற்றி, முகம் கழுவி, சமையலறையில் நுழைந்து, காய்கறி நறுக்கி, குக்கர் வைத்த பிறகுதான் பானுவின் 'போன்' பேச்சு முடிந்தது.

''ஏன் பானு! நான் வீடு வந்து சேரலைன்னா நீ கொஞ்சம் பார்த்துச் சமையலை ஆரம்பிக்கக் கூடாதா? நான் வந்தப்புறமும் இவ்வளவு நேரம் போனில் பேசிக்கிட்டே யிருக்கியே...?''

''......''

''என்ன நான் கேக்கறேன்! பதிலைக் காணும்...''

''அது உன் வேலை. இது என் தேவை...'' என்று பதில் கூறினாள் பானு.

பானு சொன்ன பதில் அதிகப்பிரசங்கித்தனமாகத் தோன்றினாலும் அதில் உண்மை இல்லாமல் இல்லை.

டீன் ஏஜ் பருவத்தின் உணர்ச்சி, சிந்தனை, தேவை ஆகிய மூன்றுமே அலாதி தான். இவ்வளவு காலமாக இந்த மூன்றிலும் பெற்றோரின் நிழலாக பிம்பமாக இருந்த குழந்தைகள் சுதந்திர இளைஞர்களாகவும் யுவதிகளாகவும் மலர ஆரம்பிக்கிறார்கள். செலவுகளுக்குப் பெற்றோர்களைச் சார்ந்தும், முடிவுகளெடுக்க மட்டும் அவர்களைச் சாராமலும் இருக்க நேர்கிறது. இந்த முரண்பாடு மன சஞ்சலங்களைத் தோற்றுவிக்கிறது. பெற்றோர் கட்டுப்பாடுகளை அதிகரிக்க விரும்புவதும் இந்தக் கட்டத்தில் தான். 'நான் பணம் கட்டித்தானே படிக்க வைக்கிறேன், என் இஷ்டப்படி படிக்கக் கூடாதா?' என்றும் 'நான்தானே இவ்வளவு நாள் கஷ்டப்பட்டு வளர்த்தேன்... நான் சொல்வதைக் கேட்கக் கூடாதா?' என்றும் அப்பாவும் அம்மாவும் நினைக்க ஆரம்பிக்கிறார்கள். அன்பு, எல்லைகளைக் கடந்து ஆதிக்கமாக, ஆக்கிரமிப்பாக மாறுகிறது.

போராட்டங்களும் வாக்குவாதங்களும் வலுவான மனக் காயங்களை ஏற்படுத்தி, பல சமயங்களில் நிரந்தரமான வடுக்களை விட்டுச் செல்கின்றன.

வாக்குவாதங்களை உணர்ச்சிவசப்பட்டு வளர்க்காமல், அறிவுபூர்வமாக அணுகி அணை போடுவது மட்டுமே இப் பிரச்னைக்குத் தீர்வு.

நளினி — பானு இடையேயான வாக்குவாதம் இப்படி வளர்ந்தது:

நளினி: முளைச்சு மூணு இலை விடலை அதுக்குள்ள பேச்சைப் பாரு! நீயெல்லாம் எப்படி கல்யாணம் பண்ணிக்கிட்டு குப்பை கொட்டப் போறே...?

பானு: கொட்டும் போது பாரு...

நளினி: எதிர்த்தாப் பேசறே?

பானு: ஆமாம்! போ!

பானு அழ, நளினி கையாலாகாத கோபத்துடன் பதற....

நளினி இந்த வாக்குவாதத்தை இப்படியும் வளர்த்திருக்கலாம் அல்லவா...?

பானு: அது உன் வேலை. இது என் தேவை.

நளினி: ரொம்ப கரெக்ட். ஆனால் நாம்


ஹார்லிக்ஸ்
கூடுதல் கால்ஷியத்துடன்
Great Nourisher
"வளரும்
குழந்தைகளுக்கு
கூடுதல்
கால்ஷியம் தேவைப்படுகிறது"
ஹார்லிக்ஸ் கூடுதல் கால்ஷியத்துடன் செறிவூட்டப்பட்டிருக்கிறது—வளரும் குழந்தைகளின் வலுவான பற்களுக்கும், ஆரோக்யமான எலும்புகளுக்கும், குடும்பத்தினர் அனைவரின் ஆரோக்யத்திற்கும் மிகவும் முக்கியமானது.
ஹார்லிக்ஸ் முழுவதும் இயற்கை ஊட்டச்சத்துக்கள் நிறைந்தது—புரோட்டீன், விட்டமின்கள், மினரல்கள் மற்றும் கார்போஹைட்ரேட்டுகள்—இவை சக்தியும், ஊட்டமும் அளிக்கின்றன. கூடுதல் கால்ஷியத்தினால், கூடுதல் ஆரோக்யம்!
சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்
Horlicks
WITH EXTRA CALCIUM
The Great Nourisher
HTA6751TAM



மின்னலடிக்குது அதிவெண்மை
மிஞ்சிவெளுக்குது ஒரு துளி ரின்.
SUPER POWER
RIN
STRIKES WHITER
WASHES MORE
மாபெரும் சக்தி ரின்
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

ஊருக்கு உபதேசம்

இப்போதுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களிலேயே பேகராம் ஜெனகானுக்கு ஒரு சிறப்பு விசேஷம் உண்டு. இந்த ஜனதா தள எம்.பி.க்கு மொத்தம் பத்து குழந்தைகள். 'அதிக குழந்தைகளின் அப்பா' என்ற பெருமை கொண்ட எம்.பி. இவர்தான். ஆறு பிள்ளைகள். நாலு பெண்கள்.

பாராளுமன்றத்தில் இருப்பவர்களில், ஒன்பது குழந்தைகளைப் பெற்ற உறுப்பினர்கள் ஐந்து பேர். எட்டு குழந்தைகளின் அப்பாக்கள் பதினோரு பேர். பத்தொன்பது பேருக்கு ஏழு குழந்தைகள். 28 உறுப்பினர்களுக்கு ஆறு குழந்தைகள். 53 எம்.பி.க்களுக்கு ஐந்து குழந்தைகள். எண்பத்தோரு பேருக்கு நான்கு குழந்தைகள். தொண்ணூற்று ஒன்பது பேருக்கு மூன்று குழந்தைகள். இரண்டு குழந்தைகள் பெற்றவர் எண்ணிக்கை முப்பத்து ஒன்பது. ஒரே குழந்தை பெற்றெடுத்தவர்கள் முப்பத்து ஒன்பது பேர்.

— ஜூலி.



ஒரே வீட்ல இருக்கோம். ஒரே குடும்பம். இதில் ஒவ்வொருவரும் தன் தேவைகளை மட்டுமே நினைச்சுக்கிட்டிருக்க முடியுமா? கொஞ்சம் மத்தவங்க தேவைகளையும் பாரு... புரிஞ்சுக்கோ. இப்போ எனக்குத் தேவை ஓய்வுதான். நான் கால் நீட்டிப் படுத்துட்டா எட்டரை மணிக்கு நம் எல்லாருடைய வயிறும் 'தேவை தேவை'ன்னு கேட்குமே... அப்ப என்ன பண்றது. உம்...?

பானு, அம்மாவின் இந்தப் பதிலைக் கேட்டுச் சிரித்து விடுவாள். வாக்குவாதம் வளராது. வடுக்கள் ஏற்படாது.

சசிகலாவின் அம்மாவுக்கு ஏக கவலை. 'அவள் எப்போது பார்த்தாலும் தனியாகப் படுத்துக் கொண்டு ஏதோ 'வெஸ்டர்ன் மியூசிக்' கேட்டுக் கொண்டிருக்கிறாள். கலகலப்பாகப் பேசுவதில்லை' என்று விசாரத்தோடு கூறுகிறார்.

பிரதீப்பின் அம்மாவுக்கு அவன் டிரெஸ் செய்து கொள்வதைப் பார்த்தால் 'பெற்ற வயிறு பற்றி எரிகிறது.' 'இப்படியா ஒரு பிள்ளை தலையைக் கலைத்து விட்டுக் கொண்டு, அழுக்குத் துணியோடு அலையும்? சதா வாயில் சூயிங்கம்; ஒரு காதில் டோலக்கு...!' — புலம்புகிறார் பிரதீப்பின் அம்மா.

இவ்வாறு தனிமையை நாடுவதும் மற்றவர்களினின்று தன்னை வேறுபடுத்திக் காட்டிக் கொள்ளும் வகையில் உடுத்திக் கொள்வதும் டீன் ஏஜுக்கு உரிய பழக்கங்கள். இதைப் பார்க்கும் பெற்றோர்களுக்குக் கவலையும் கோபமும் வந்தாலும் அவற்றைக் கொஞ்சம் கட்டுப்படுத்திக் கொண்டு, பொறுமை சாதிக்க வேண்டும். கிண்டலும், கேலியும் குத்தல் வார்த்தைகளும் இத்தருணங்களில் பிள்ளைகளுக்கு மிகுந்த வேதனையை அளிக்கும். தொடர்ந்து வேறுபட்டே நிற்கச் செய்யும். அவர்களிடம் ஏற்பட்டுள்ள மாற்றங்களை நீங்கள் கவனித்துள்ளதாக உணர்த்தும் அதே நேரத்தில் அதைப் பற்றி அதிகம் கோபத்தையோ கவலையையோ வெளிப்படுத்தாதீர்கள். உங்களுக்குப் பிடிக்கவில்லை என்பதை ஒளிக்காதீர்கள். அதே நேரத்தில் அவர்களுடைய தனிப்பட்ட ரசனைகளை உணர்வுகளைப் புரிந்து கொள்வதாகவும் மதிப்பதாகவும் காட்டிக் கொள்ளுங்கள். டீன் ஏஜினருக்கு உங்களிடம் மதிப்பு அதிகரிக்கும். நாளடைவில் தாற்காலிக மோகங்கள் மாறி விடும்.

டீன் ஏஜ் — குழந்தைகளுக்குக் கனவுகள் மலரும் பருவம் 'என்றால், பெற்றோரைப் பொறுத்தவரையில் அது பிடிகளைத் தளர்த்த வேண்டிய பருவம். உங்கள் குழந்தையைத் தனி மனிதனாக நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிய காலம் வந்து விட்டது. அதற்கு உங்களை நீங்களே தயார் செய்து கொள்ள வேண்டும்:

- அவர்கள் எத்தகைய எதிர்காலக் கனவுகளைக் காண வேண்டும் என்பதை நீங்கள் நிர்ணயிக்காதீர்கள். அவர்களுடைய கனவுகளைப் புரிந்து கொண்டும் பகிர்ந்து கொண்டும் பேசி உதவுங்கள். யோசனை கூறுங்கள்.
- அன்பைப் பொழியுங்கள்.
- உணர்ச்சிகளை மறைக்காமல் மிதமாக வெளிப்படுத்துங்கள்.
- ஆனால் உணர்ச்சிவசப்பட்டு கடும் வார்த்தைகளை வீசாதீர்கள்.
- நட்போடு எடுத்துச் சொல்லுங்கள்
- முடிவுகளைத் திணிக்காதீர்கள்.
- உங்கள் குழந்தைகளை அவர்களின் நிறை — குறைகளுடன் முழுமையாக ஏற்றுக் கொள்ளுங்கள்.

— தொகுப்பு: **அலமேலு கணேசன்.**

வண்ணப்படங்கள்: **உத்ரா.**

நடிப்பு:

வத்ஸ், விஷ்ணுமோகன், தீபா, ஜானகி கிருஷ்ணசாமி.

ஜாதி இரண்டொழிய...

ப்ரொபஸர் நரசிம்மன் அறைக்கு வெளியே எட்டிப் பார்த்தார். இண்டர்வியூவுக்காகக் காத்திருந்த இளைஞர்கள் இன்னும் இருந்தார்கள். ஆளுக்கொரு சான்றிதழ் கத்தை. ஆளுக்கோர் ஆர்வம். கிடைத்து விடும் என்கிற நம்பிக்கையுடன் நாற்காலியில் காத்திருந்தார்கள். சேதுராமன் ஒழுங்காக அமைத்த பெயர்ப்பட்டியலை அவரிடம் கொடுக்க, ''இன்னும் எத்தனை பேர்ப்பா?'' என்று கேட்டார் நரசிம்மன்.

''இருபத்து ஏழு ஸார். மத்தியானத்துக்குள்ளே முடிச்சுரணும். எஸ்ஸி எஸ்டி கோட்டா இண்டர்வியூ மத்தியானம். காலையிலே இவங்க ரெகுலர் காண்டிடேட்ஸ். முடிச்சுடலாம் ஸார்.''

''காலைல ஃபார்வர்டு கம்யூனிட்டி. சாயங்காலம் பாக்வர்டு கம்யூனிட்டியா? சாதி இரண்டொழிய வேறில்லைன்னு ஔவையார் சொன்னது இப்பகூட பொருந்துது பார்த்தீங்களா ப்ரேம்!''

அவர் சொன்னது கெட்ட வார்த்தை போல அத்தனை பேரும் அவரை ஒரு மாதிரி பார்க்க, ப்ரேம்நாத், ''அடுத்த ஆசாமியைக் கூப்பிடுப்பா... ஸார், 'ஹிண்டு' மாட்ரிமோனியல் காலத்தைப் பாருங்க, சாதி எங்கேயும் போயிரலை,'' என்றார்.

அந்த இளைஞன் உள்ளே வந்து ''குட்மார்னிங் ஸர்ஸ்'' என்று சொல்லிவிட்டு நின்று கொண்டிருக்க, ''சிட் டவுன்'' என்றார்.

''உன் பேர்?''

''ரமேஷ்.''

''லெட்மி ஸீ... டிஸ்டிங்ஷன் டிஸ்டிங்ஷன், டிஸ்டிங்ஷன். ஜிபிஏ த்ரீ பாயிண்ட் நைன், காலேஜ்லே எத்தனாவது ராங்க்?''

''இரண்டாவது ஸார்.''

''முதல் யாரு?''

''சுரேஷ்னு.''

''ஃபார்வர்டு கம்யூனிடி மொத்தமும் ரமேஷ் சுரேஷ்னு பேர் வெச்சுக்குது கவனிச்சீங்களா?'' என்றார் சித்தார்த்தன்.

''நரசிம்மன் வெங்கடாச்சாரின்னு வெச்சுக்கிட்டா வேலை கிடைக்கல்ல. அதனாலதான்'' என்றார் ப்ரேம்நாத். அந்தப் பையன் அவர்களை மாற்றி மாற்றிப் பார்த்து, மையமாகச் சிரித்துக் கொண்டிருந்தான்.

''அவனும் இண்டர்வியூவுக்கு வந்திருக்கானா?''

''ஆம்.''

''யுனிவர்ஸிட்டியில எத்தனாவது ராங்க்?''

''எட்டு அல்லது ஒம்பது. நாட் ஷ்யூர்.''

''வேற ஏதாவது வேலைக்கு அப்ளை பண்ணியா?''

''ஆம், ஸார்.''

''செலக்ட் ஆச்சா?''

''இன்னும் தெரியலை ஸார். பி எச் இ எல், ஐ டி ஐ, என் டி பி ஸி.''

''யு பி எஸ் ஸி எல்லாம் எழுதியிருக்கியா?''

''எழுதியிருக்கேன்.''

''கேட்?''

''அதுவும் எழுதியிருக்கேன் ஸார்.''

ப்ரேம்நாத் டெக்னிக்கலாக் கேட்பதற்கு முன், ''ரமேஷ், லெட்மி ஆஸ்க் யூ எ ஃப்ராங்க் கொஸ்சன். இத்தனை நல்ல மார்க் வாங்கியிருக்கே... ஏன் பாஸ் ஆகி ஒரு வருஷமா வேலையில்லே? வாட் வெண்ட் ராங்?'' என்றார் நரசிம்மன்.

ரமேஷை உன்னிப்பாகப் பார்த்தார். அவன் கண்ணாடியைக் கழற்றித் துடைத்துப் போட்டுக் கொண்டு, லேசாகப் புன்னகைபுரிந்தாலும் அந்தக் கேள்வி அவனைத் தாக்கியிருக்க வேண்டும். ''ஐ ஜஸ்ட் டோண்ட் நோ ஸார்! லக் இல்லைன்னு நினைக்கிறேன்...''

''ப்ரேம்?''

ப்ரேம்நாத், ''ரமேஷ், உன் ஸ்ட்ராங் சப்ஜெக்ட் என்ன?''

''கம்யூனிகேஷன்.''

''அனலாக்? டிஜிட்டல்?''

''இரண்டும்.''

ப்ரேம்நாத்தின் கேள்விகளைக் கேட்டு, போர்டில் படம் வரைந்து பதில் சொன்ன ரமேஷின் வாழ்க்கைக் காகிதங்களைப் பார்த்தார் நரசிம்மன். சரித்திரமே சர்ட்டிபிகேட்கள் வடிவில் இருந்தது. காலேஜ் பேச்சுப் போட்டி, ட்ரெக்கிங், என்ஸிஸி, அனைத்துக் கல்லூரி விவாதம், கம்ப்யூட்டர் சொஸைட்டி மாணவப் பரிசு... ப்ரேம்நாத் முடித்ததும் தன்னருகில் உட்கார்ந்திருந்தவரிடம், ''எனிதிங் சித்து?'' என்றார் சித்தார்த்தனைப் பார்த்து. அவர் தலையை ஆட்டினார். ''ரமேஷ் யூ கேன் கோ நௌ.'' போகுமுன் ரமேஷ் சற்றுத் தயங்கி, ''ஸார் ஒரு விஷயம்...!'' என்றான்.

''என்ன?''

சுஜாதா

''இந்த இண்டர்வியூவில நான் நல்லா செய்தேனா? எனக்குச் சான்ஸ் இருக்கா?''

''யூல் ஹியர் ஃப்ரம் அஸ் ஸூன்! லெட்டர் போடுவம்பா. இப்பவே தெரியாது.'' அனைவரும் அவனை ஆயாசத்துடன் பார்த்தனர். அவன் உதடுகள் லேசாகத் துடித்தன.

''இது எனக்கு எட்டாவது இண்டர்வியூ ஸார். ஒருவிதமான எல்லைக்கு வந்துக்கிட்டு இருக்கேன். ஐ'ம் டெஸ்பரேட். குடும்பத்தைக் காப்பாத்த வேண்டிய பொறுப்பு இருக்குது. வி ஆர் வெரி புவர்.''

''குடும்பத்தைக் காப்பாத்த வேண்டிய பொறுப்பு எங்க எல்லார்க்கும்தான் இருக்குப்பா'' என்றார், சித்தார்த்தன். மற்றவர் சிரித்தனர். நரசிம்மன் சிரிக்கவில்லை.

''வாட்ஸ் யுவர் ஃபாதர் ரமேஷ்?''

''ரிட்டயர்டு எலிமெண்ட்ரி ஸ்கூல் டீச்சர் ஸார்'' என்றான்.

''ஒன்லி ஸன்?''

''ஆமா ஸார்.''

''வேறே?''

''நாலு சிஸ்டர்ஸ் ஸார்.''



''குட். செலக்ட் ஆச்சுன்னா லெட்டர் போடறோம், என்ன...?'' என்றார் சித்தார்த்தன். ''தாங்க்யூ ஸார்'' என்று அவன் திகைப்புடன் தன் காகிதங்களைச் சேகரித்துக் கொண்டு சென்றான். போனதும் சித்தார்த்தன், ''மிஸ்டர் சேர்மன், குடும்ப விவரங்களைக் கேக்கறதில அர்த்தமில்லைன்னு நினைக்கிறேன்,'' என்றார். அவர் ஷெட்யூல்ட் காஸ்ட் பிரதிநிதி.

''இல்லை, சித்தார்த்தன். இந்தப் பையன் அந்தச் சூழ்நிலையில் இருந்து கஷ்டப்பட்டுப் படிச்சு முன்னுக்கு வந்திருக்கான். இவனுக்கு வேலை கொடுக்க வேண்டாமா?''

''மற்ற கேண்டிடேட்டுகளையும் வேக்கன்ஸியையும் பார்க்கலாமா?''

''ப்ரேம்... பையன் எப்படி?''

''என் கேள்விகளுக்கெல்லாம் நல்லாவே பதில் சொன்னான். ப்ரில்லியண்ட்!''

''ப்ரைட் பாய்! அகடமிக்கலாகவும் நல்லா வாங்கியிருக்கான். பொதுவா செலக்ட் பண்ணி வெக்கலாம்.''

''மொத்தம் இருபத்தேழு பேர். இருக்கிறது நாலு வேக்கன்ஸி. ஃபைனல் ராங்க்கிங்கில வந்தா வி கன் க்வாலிஃபை ஹிம்.''

''ஒரு பள்ளி வாத்தியாரின் மகன், ஒரே மகன், நாலு பெண்கள்... சிஸ்டர்ஸ்.''

''இதெல்லாம் பத்தி நாம கவலைப்பட வேண்டாம்னு தோணுது.'' பர்ஸானல் சேது ராமனைப் பார்த்து, ''சேது, மொத்தமே நாலு வேக்கன்ஸிதானா?''

''ஆமா ஸார்.''

மீண்டும் காகிதங்களைப் பார்த்து. ''பின்ன பத்துன்னு போட்டிருக்கு.''

''ஆறு வேக்கன்ஸி ஷெட்யூல் காஸ்ட், ஷெட்யூல் ட்ரைபுக்கு ஸார்!''

''அது மத்தியானம்.''

''அப்ப இந்தப் பையனுக்குக் கிடைக்கிறது கஷ்டமா?''



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி — 1990

முடிவு தேதி: ஜூன் 15.

விவரங்களுக்குச் சென்ற வாரக் கல்கி இதழைப் பாருங்கள்.
அல்லது
அடுத்த வாரக் கல்கி இதழை எதிர்பாருங்கள்.

— ஆசிரியர்.

"ஆமா ஸார். ஏற்கெனவே அஞ்சு பேரை க்வாலிஃபை பண்ணி வெச்சிருக்கோம். எல்லாரும் 'டாப்பர்ஸ்!'"

"ஷெட்யூல்ட் காஸ்ட் வேக்கன்ஸியைக் க்ன்வர்ட் பண்ண முடியாதா?" சேதுராமன் பயந்து போய், "ஸார்! அந்தப் பேச்சே வேண்டாம். நாம ஏற்கெனவே டிஃபால்ட்," என்றார்.

"டிஃபால்ட்டுன்னா?"

"சொல்றேன்" என்றார் சித்தார்த்தன். "மிஸ்டர் சேர்மன். இது மத்திய சர்க்கார் கம்பெனி. அதில் மொத்த வேலைகளில இத்தனை சதவிகிதம் எஸ்ஸி, எஸ்டிக்குன்னு ஒதுக்கீடு பண்ணிக் கோட்டா இருக்குது. அதை இவங்க ஃபில்அப் பண்ணாம, சரியா காண்டிடேட்ஸ் கிடைக்கலைன்னு கதை பண்ணிட்டு, இதுவரை பாயல் காட்டியிருக்காங்க. இந்த அம்பேத்கர் நூற்றாண்டு வருஷம் எல்லாத்தையும் நிரப்பி ஆகணும்னு சர்க்கார்லருந்து உத்தரவு வந்திருச்சு. அதனால் அந்தக் காலி இடங்களை ரெகுலர் காண்டிடேட்ஸ் வெச்சுக்கிட்டு நிரப்ப முடியாது."

"சேதுராமன், அவங்க எத்தனை பேர் மத்தியானம் வர்றாங்க?"

"ஆறு பேர் ஸார்."

"எத்தனை வேக்கன்ஸி?"

"ஆறு. அவங்களுக்கு நல்ல டிமாண்ட் ஸார்!"

நரசிம்மன் புரியாமல் "அபத்தமா இருக்குது!"

"இதில அபத்தம் ஒண்ணுமில்லை ஸார் இவங்களுடைய கடந்த காலப் பாவங்களை இப்ப திருத்திக்கிறாங்க. கம்பெனியில மெத்தனமான போக்கினால இந்த நிலை. வருஷா வருஷம் நிரப்பாமலேயே இருந்திருக்காங்க. கமிஷன் இவங்களைப் பத்தி ரொம்பக் காட்டமாக் குறிப்பு எழுதியிருக்காங்க!"

"அப்ப அந்தப் பையனுக்குக் கிடைக்காதுங்கறீங்க?"

"கஷ்டம் ஸார்."

"இட்ஸ் எ பிட்டி! பிராமணனாப் பிறந்ததினால அத்தனை கஷ்டப்படறானே!".

"ஹௌ டு யூ நோ ஹி இஸ் எ ப்ராமின்?"

"இல்லை, முதலியார், செட்டியார், பிள்ளை...!"

அனைவரும் சித்தார்த்தனைப் பார்க்க, "நாம இதைப் பத்தி விவாதிக்காம இருக்கிறது நல்லதுன்னு நினைக்கிறேன். இந்தப் பையனை விசாரிச்சீங்க. அதே போல மத்தியானம் வர்றவங்களையும் விசாரிச்சுப் பாருங்க. அப்பா யாருன்னு. செருப்பு தைக்கிறவங்க, விவசாயிங்க, போர்ட்டர்ங்க இப்படி இருப்பாங்க. லெட்ஸ் நாட் கெட் எமோஷனல். இந்த விதிமுறைங்கள்ளாம் நூற்றாண்டுக் கணக்காக நிகழ்ந்த அநியாயங்களைத்திருத்தப் பெரியமனுசங்க அமைச்சது."

"என்னதான் இருந்தாலும்..." என்று ஆரம்பித்த நரசிம்மனைத் தடுத்து, "நெக்ஸ்ட்" என்றார் சித்தார்த்தன்.

மற்ற பேர்களைப் பேருக்கு மூணு நிமிஷம் என்று மேம்போக்காகத்தான் இண்டர்வியூ பண்ண முடிந்தது. அவசரமாக முடித்துவிட்டு இடைவேளையில் சாப்பிடச் சென்றார்கள். சித்தார்த்தன் தனிப்பட்டுச் சேதுராமனிடம் சற்றுக் கோபமாகப் பேசிக் கொண்டிருந்தார். "என்னய்யா சேர்மன்! இந்த ஆளு ரெக்ரூட்மெண்ட் விதிமுறைங்கள்ளாம் தெரியாம ஜாதி பத்திப் பேசிக்கிட்டு?"

சேதுராமன் சற்றே பதற்றத்துடன், "ஸாரி ஸார்! அவரு அமெரிக்காவில் இருந்தவரு. இப்பத்தான் இந்தியா திரும்பியிருக்காரு. நம்மூரு நெளிவு சுளிவெல்லாம் தெரியலை."

"அவன் எவனா இருந்தா என்னய்யா?"

மத்தியானம் எஸ்ஸி எஸ்டிக்காகத் தனிப்பட்ட இண்டர்வியூ நடந்தது. சித்தார்த்தன் "ப்ரொபஸருக்கு எல்லா விதிங்களையும் சொல்லிடுங்க சேதுராமன்," என்றார்.

"என்னப்பா?" என்றார் நரசிம்மன்.

"இந்த இண்டர்வியூவை நடத்தற போது நாம ஸ்டாண்டர்ட்ஸ் கொஞ்சம் குறைச்சுக்கணும் ஸார். அவங்களுக்குக் கேள்வி புரியலைன்னா விவரமா விளக்கணும்."

"எதுக்கு அப்படிச் செய்யணும்?"

"ரூல்ஸ் அப்படி மிஸ்டர் நரசிம்மன்," என்றார் சித்தார்த்தன்.

"அப்படியா?"

"தாழ்த்தப்பட்ட வர்க்கத்தில இருந்து வந்ததினால, அவங்களுக்கு அதிகம் வாய்ப்புக்கள் இல்லாததினால அவங்களை முன்னுக்குக் கொண்டுவர எல்லா முயற்சிகளும் செய்யணும். அதுக்காகத்தான் இந்த விதிகள்."

"சரி, நீங்களே கேளுங்க. நான் ஏதும் கேக்கலை."

''அப்படி இல்லை. தாராளமாக் கேக்க லாம். ஆனா அவனுக்கு என்ன தெரியும்னு கண்டுபிடிச்சுக் கேளுங்க. என்ன தெரியா துன்னு கண்டுபிடிக்க அல்ல.''

முதலில் வந்தது ஒரு பெண். ''உக்கா ரும்மா, உன் பேர் என்னம்மா?''

''ஷீலா'' என்றாள் ஷீலா. தலையைக் கச் சிதமாக வெட்டியிருந்தாள். பென்சிலை உருட்டிக் கொண்டு பெரிய பெரிய விழிக ளால் மாற்றி மாற்றி அனைவரையும் பார்த் தாள். லேசாக மேல் நாட்டு ஸெண்ட் வாசனை அடித்தது.

''சேதுராமன், ''ஷீலா! நீங்க நேத்திக்கு வர வேண்டியவங்கதானே?''

''எஸ் ஸார். ஸாரி ஸார். நேத்திக்கு வர முடியலை.''

''அதனால் பரவாயில்லை.''

ப்ரேம்நாத், ''ஷீலா உனக்குப் பிடித்த மான சப்ஜெக்ட் எது?''

''ம்யூஸிக் ஸார்.''

''பாடங்களில.''

''ம்ம்... ஆஸ்க் மி...'' என்று பென்சில் கடிக்க,

''எது வேணா கேக்கலாமா?''

சித்தார்த்தன் குறுக்கிட்டு ''ஷீலா நீ எந்தப் பாடத்தில கேள்வி கேக்க, பதில் சொல்ல விரும்பறே?''

''ம்ம் எனிதிங்'' என்று மோகனமாகச் சிரித்தாள்.

நரசிம்மன் ''லுக் யங் லேடி! டு யூ அண் டர்ஸ்டாண்ட் தி கொஸ்சன்?'' என்றார். உடனே அவள் சிரிப்பு உறைந்து போய், ''எஸ்'' என்றாள், ஹீனமாக.

ப்ரேம் ''ஆல் ரைட் உன் ப்ராஜெக்ட் என்ன?''

''அவள் தன் ப்ராஜெக்ட் ரிப்போர்ட்டை அவர்களிடம் நகர்த்தினாள்.

''ப்ராஜெக்ட் பேர் கூடவா தெரியாது?''

''ஃபில்டர் டிஸைன்'' என்றாள்.

''அதைப் பற்றி நாலு வாக்கியங்கள் சொல்லு,'' என்றார் நரசிம்மன்.

மறுபடி சிரித்து, ''ஸாரி ஸார், ஐ ஃபர் காட்.'' என்றாள்.

''இந்த ஸப்ஜெக்ட் எப்ப முடிந்தது?''

''மார்ச்சில்.''

''யூ மீன், அதற்குள் இரண்டு மாதத்தில் மறந்து விட்டாயா?''

சித்தார்த்தன், ''ஷீலா, டைட்டிலாவது ஞாபகமில்லை?''

''ஊருக்குப் போயிருந்தேன். என் அப்பா வுடன். இன்று காலைதான் திரும்ப வந்த தும் இண்டர்வியூவுக்கு வருகிறேன். அத னால் படிக்க முடியவில்லை.'' — அவள் ஆங்கில உச்சரிப்பில் கான்வெண்ட் கலந்தி ருந்தது.

''ஃபேர் இனஃப்.''

''எனிதிங் எல்ஸ் ஜெண்டில்மன்?'' என் றார் சித்தார்த்தன். பதிலுக்குக் காத்திராமல், ''ஷீலா யு மே கோ.''



ஸ்டாண்டர்ட் மோட்டர்ஸ் ஸ்ட்ரைக்

ரொம்பக் காலமாக மூடிக் கிடக் கும் ஸ்டாண்டர்ட் மோட்டார் தொழிற் சாலையின் எதிர்காலம், ஜூன் 28 ஆம் தேதி தில்லியில் கூடவிருக்கும் போர்டு மீட்டிங்கில் முடிவு செய்யப்படும் என்று தெரிகிறது.

வருகின்ற இரண்டு வருடங்களில் கிட்டத்தட்ட 24 கோடி ரூபாய், இந்த நிறுவனத்துக்குக் கொடுக்கப்பட்டால் தான் தொழிற்சாலை மறுபடி மூச்சு விட முடியுமாம். 'பிரமோட்டர்' என்ற வகையில் தொழிலதிபர் ஏ.சி. முத்தையா 4.13 கோடியும், வங்கிகள் 4.06 கோடி யும், நிதி நிறுவனங்கள் 11.09 கோடியும், தமிழக அரசு 3 கோடி ரூபாயும் கொடுக்க வேண்டும் என்று ஒரு திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கிறது.

தொடர்ந்து நடத்துவதற்கான முதலீடு, சப்ளையர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய தொகை, அன்றாடத் தேவை களுக்கு வேண்டிய நிதி — இவை போக, இப்போதைய தொழிலாளரின் எண்ணிக் கையை 999 ஆகக் குறைப்பதனால் விலகும் ஊழியருக்குக் கணிசமான நஷ்ட ஈட்டுத் தொகை தர வேண்டியிருக்கிறது. தமிழக அரசின் தொழிலாளர் நல ஆணையர் துணையுடன்தான், அதிகப் படி ஊழியர்கள் 'தாமாக முன் வந்து ஓய்வு பெறும்' திட்டம் உறுதி செய்யப் பட்டது. எனவே நஷ்டஈட்டுத் தொகையைக் கொடுக்க தமிழக அரசை யும் இந்தத் திட்டத்தில் இணைத்திருக் கிறார்கள்.

இனி, தொழில் துறையில் அநுபவம் உள்ள ஒருவரை மானேஜிங் டைரக்ட ராகவும், நிர்வாக அநுபவம் உள்ள ஒரு வரை டைரக்டராகவும் நியமித்து நடத்த வேண்டும் என்று நிதி நிறுவனங்கள் தீர் மானித்திருக்கின்றன.

மூடிக் கிடக்கும் இந்தச் சென்னைத் தொழிற் சாலையின் திறவு கோல், இப் போது தமிழக அரசின் கையில்தான் இருக்கிறது என்கிறார்கள். ஏனென்றால் அரசின் ஒப்புதல் மட்டும் இன்னும் கிடைக்கவில்லையாம்!

— எஸ். வி. என்.

மத்யமர்: வாசகர் விமர்சனம்

'ஜாதி இரண்டொழிய...' — சுஜாதா எழுதி வரும் 'மத்யமர்' சிறுகதைகளுள் ஐந்தாவது. இக்கதையின் எந்த அம்சம் உங்களை மிகவும் கவர்ந்தது? ஏன்? என்பதைக் குறிப்பிட்டுத் தபால் கார்டில் எழுதியனுப்புங்கள். கடந்த சில வாரங்களில் வெளிவந்துள்ள விமர்சனங்களைப் படித்திருப்பீர்களே; அவற்றைப் போல் சுருக்கமாக நடை, கரு, பாத்திரப் படைப்பு போன்றவற்றுள் ஏதேனும் ஒன்றை மட்டும் விமர்சிக்க வேண்டும். குறையிருந்தாலும் சுட்டிக் காட்டலாம்.

பிரசுரமாகும் விமர்சனங்களுக்கு ரூ. 25 சன்மானம். சிறந்த விமர்சனத்துக்கு ரூ. 50 சிறப்புப் பரிசு.

தபால் கார்டில் விமர்சனங்கள் வந்து சேர வேண்டிய கடைசித் தேதி: 5.6.90.

ஷீலா எழுந்திருக்க, நரசிம்மன், ''ஷீலா., உன் தந்தை பெயர் என்ன?''

அவள் தயங்கி, இதற்குப் பதில் சொல்லித்தான் ஆக வேண்டுமா என்பது போல் அனைவரையும் பார்த்தாள்.

''உன் தந்தை என்ன வேலையிலிருக்கிறார்?''

''டைரக்டராக...''

''எங்கே?''

''ஸி ஆர் எல் இ.''

''சரி, நீ போகலாம்'' என்றார் சித்தார்த்தன்.

''ஒன்மோர் கொஸ்சன் ஷீலா. உன் தந்தையுடன் எந்த ஊருக்குப் போயிருந்தாய்?''

''ஸ்விட்சர்லாந்து'' என்று சொல்லிவிட்டு அனைவரையும் வசீகரமாகப் பார்த்துப் புன்னகைத்துவிட்டு, ''குட்டே'' என்று சென்றாள்.

அவள் போனதும், ''வாட் டு யு ஸே மிஸ்டர் சித்தார்த்தன். இவளுக்கு வேலை கொடுக்க வேண்டுமா?'' என்றார் நரசிம்மன்.

''ஏன்? அதில் என்ன சந்தேகம்?''

''இந்தப் பெண் பாக்வர்டு கிளாஸா? தந்தை சென்ட்ரல் கவர்ன்மெண்ட் லாபில் டைரக்டர். ஸ்விட்சர்லாந்து எல்லாம் சுற்றிவிட்டு வருகிறாள்.''

சித்தார்த்தன், ''சேதுராமன், அந்தப் பெண்ணின் காஸ்ட் சர்ட்டிபிகேட்டைப் பாருங்கள்,'' என்றார்.

சேதுராமன் பார்த்து, ''சர்ட்டிபிகேட்டெல்லாம் ஒழுங்காகத்தான் இருக்கிறது. ஷெட்யூல் வகுப்பைச் சேர்ந்தவள்தான்.''

''என்னய்யா அநியாயம்? இவள் பிற்பட்டவளா?''

சித்தார்த்தன், ''அதில் என்ன அநியாயம்?''

''வாட் நான்சென்ஸ்!''

சித்தார்த்தன், ''இதையெல்லாம் வினவ நமக்கு உரிமையில்லை, ப்ரொபஸர் ஷி ஈஸ் எ பாக்வர்ட் க்ளாஸ் — சர்க்கார் அமைத்த ஷெட்யூல் அங்கீகரித்தபடி'' என்றார்.

''இந்தப் பெண்ணுக்கு வேலை கொடுக்கணுமா?''

''கட்டாயம்!''

''பதிலும் சரியாச் சொல்லலையே?''

''நீங்க சரியாக் கேக்கலையே! அவ அப்பா பிறப்பைப் பத்தியே கேட்டுக்கிட்டு இருந்தீங்க!''

''எனக்கு என்னவோ இந்தப் பெண்ணுக்குக் கொடுக்க வேண்டாம்னு தோணுது.''

சேதுராமன் கொஞ்சம் பதற்றத்துடன், ''சார், க்வாலிஃபை பண்ணிடுங்க ஸார். ஏற்கெனவே ஷெட்யூல்ட் காஸ்ட் கமிஷன்ல ஏன் நிரப்பலைன்னு காச்சறாங்க. இந்த வருஷம் நிரப்பியே ஆகணும்.''

''சித்தார்த்தன் நீங்களே சொல்லுங்க. இது அநியாயமா இல்லையா?''

''எது?''

''அந்தப் பையனுக்குக் கொடுக்காம இந்தப் பெண்ணுக்குக் கொடுக்கறது. ரெண்டு பேரும் கேள்விங்களுக்குப் பதில் சொன்னதைக் கேட்டீங்க.''

சித்தார்த்தன் ப்ரொபசரை நேராகப் பார்த்து, ''ஆமாம் ப்ரொபஸர். இது அநியாயம்தான்! ஆனா இதைவிட அநியாயம் ஒண்ணு இதுக்கு முன்னால் இழைக்கப்பட்டது ப்ரொபஸர்! ஆயிரம் வருஷங்களுக்கு முன்னால! அந்த அநியாயத்தையே இன்னமும் நாம நிவர்த்தி பண்ணலை...''

''அப்ப சேதுராமா, கொடுத்தே ஆகணுங்கறே?''

''ஆமாம்'' என்றார் சித்தார்த்தன் — லேசான புன்னகையுடன். ஷீலாவின் பெயருக்கு எதிரில் 'ஸெலட்டட்' என்று எழுதிக் கையெழுத்திட்டார் நரசிம்மன்.

''யாரு பாக்வர்டு! யாரு ஃபார்வர்டு! என்னய்யா தேசம் இது!''

நரசிம்மன் இண்டர்வியூ முடிந்து, லிப்டில் வெளிப்பட்டு, காரில் கிளம்பும் போது அந்தப் பையன் ரமேஷை மறுபடி பார்த்தார். தெரு மூலையில் பெட்டி, தோள் பையுடன் பஸ்ஸைப் பார்த்து நின்று கொண்டிருந்தான். இன்னுமா நிற்கிறான்... பக்கத்துக் காலனியில் தெரிந்தவர்கள் யாரையாவது பார்த்து விட்டு இப்போதுதான் கிளம்புகிறானோ?

அந்தப் பெண் ஷீலாவுக்கு ஸி ஆர் எல் இயிலிருந்து கார் வந்திருந்தது. அதில் அவள் ஏறிக் கொண்டு செல்ல, அந்தப் பையன் முனிசிப்பல் குழாயில் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தான். நரசிம்மன் அவனைக் கூப்பிடுவதற்குள் பஸ் வந்துவிட, அதில் ஏறிக் கொண்டு சென்றான்.



* காதல் ஒரு கவிதை: தமிழில் என்னாகும்?

சினி சிப்ஸ்:



* விண்ணிலிருந்து மண்ணுக்கு: சாவித்திரியின் சுவடுகள்...

சாவித்திரியின் சுவடுகள்

●● முற்றிலும் புதியவர்களைக் கொண்டு 'ஒரு புதிய கதை' என்ற படம் உருவாகிக் கொண்டிருக்கிறது. நடிகர்கள், டெக்னீஷியன்கள் எல்லோருமே புதியவர்கள். படத்தின் நாயகி புதுமுகம் மீனா, வித்யோதயாவில் ஒன்பதாம் வகுப்புப் பரீட்சை எழுதியுள்ளார். பார்ப்பதற்குப் பெரிய பெண்ணாகத் தெரிந்தாலும் இன்னும் குழந்தையாகவே இருக்கிறார் என்று கூறுகிறார்கள். சினிமா பற்றிச் சுத்தமாகத் தெரியவில்லையாம். ஒவ்வொன்றையும் விளக்கமாகக் கூற வேண்டுமாம். ஆனால் சொன்னதைச் சுருதி சுத்தமாகச் செய்து விடுகின்றார். அதுதான் மீனாவின் பிளஸ் பாயிண்ட்! அது சரி. எந்தத் தைரியத்தில் இப்படிப் புதியவர்களைப் போட்டுப் படம் பண்ணத் துணிச்சல் வந்தது? ''புதியவர்களின் வரவால் தமிழ் சினிமாவின் சரித்திரம் கொஞ்சமாவது மாறும் என்பது என் நம்பிக்கை. அதனால் தான் துணிந்து பரிசோதனையில் இறங்கியுள்ளேன்'' என்று கூறுகின்றார் இந்தப் படத்தின் தயாரிப்பாளர் கம் டைரக்டர் ராஜாராம்.

●● நடிகை சாவித்திரியின் வாழ்க்கையை மையமாக வைத்துத் தயாரிக்கப்பட்டுள்ள 'விண்ணிலிருந்து மண்ணுக்கு' என்ற டீ.வி. சீரியலில் நடிக்கும் போது ஏகப்பட்ட அனுபவங்கள் வைஷ்ணவிக்கு ஏற்பட்டனவாம். ஒரு காட்சியில் மூவி காமெரா ஒன்றையும் இணைத்துப் படமாக்க நேர்ந்ததாம். அப்போது ஒரு சிப்பந்தி **Newall** என்ற காமெராவைக் கொண்டு வந்து கொடுத்து, 'இதை யூஸ் பண்ணுங்க; நடிகை சாவித்ரி காமெரா யூனிட் வைத்து நடத்திய காலத்தில் அவர் பயன்படுத்திய காமெராதான் இது' என்று கூறியிருக்கிறார். வலசரவாக்கத்தில் ஒரு வீட்டில் ஷூட்டிங். அந்த வீடும் அதைச் சுற்றியுள்ள வீடுகளும் ஒரு காலத்தில் சாவித்திரியோட வீடுகளாக இருந்தவைதான் என்று அக்கம் பக்கம் கூறியிருக்கிறார்கள். இப்படித் தொட்ட இடங்கள் எல்லாம் சாவித்திரியின் சுவடுகளைக் கண்ட அனுபவமாம் வைஷ்ணவிக்கு.

●● 'ராஜஸ்ரீ பிக்சர்ஸ்' என்ற கம்பெனியை இழுத்து மூடி விட வேண்டியதுதான் என்ற நிலை வந்த போது அந்தக் கம்பெனியின் தயாரிப்பான ''மே நே பியார் கியா'' என்ற ஹிந்திப் படம் எதிர்பாராத அளவு ஹிட் ஆகி விட்டது. வடக்கில் பரபரப்பாகப் பேசப்படுகின்ற அந்தப் படம் இப்போது தமிழில் 'காதல் ஒரு கவிதை' என்ற தலைப்பில் 'டப்' செய்யப்பட்டு வருகிறது. இப்படத்துக்குப் பின் இப் பட நாயகி பாக்யஸ்ரீக்கு ஏகப்பட்ட வாய்ப்புக்கள் வந்து குவியத் துவங்கி விட்டன. ஆனால்...? பாக்யஸ்ரீ தான் சப்தமில்லாமல் பக்கத்து வீட்டுப் பையனைக் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டு (ஓடிப்) போய் விட்டார்!

●● ரஜினிகாந்த், ராமராஜன், படங்களுக்கும் இன்னும் சில நிறுவனங்கள் தயாரிக்கும் படங்களுக்கும் இளையராஜா இனி இசையமைக்க மாட்டார் என்ற செய்தி ஊர்ஜிதம் ஆகி விட்டது. ராஜாவைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு கூத்தாடியவர்கள் புதுப் புது இசையமைப்பாளர்களைக் கொண்டு வந்து குவித்துக் கொண்டிருக்கிறார்கள் — எப்படியும் இளையராஜாவை வீழ்த்தி விட வேண்டும் என்றுதான்! ஆனால் இவர்கள் எல்லோர் முகத்திலும் கரி பூசப் போகிறார் ராஜா என்பது வேறொரு பிரிவினரின் கணிப்பு. ''ராஜா இப்போது ஒரு புதிய இசை 'யாகம்' செய்து கொண்டிருக்கிறார். விரைவில் இசையில் ஓர் 'அற்புதம்' நிகழ்த்திக் காட்டப் போகிறார்'' என்கிறார்கள்.

— எஸ். பாலு



* பிரபு ராஜ் — மீனா: புதியவர்கள்

* ஒப்புக் கொண்டார்!



* இருட்டில் தவிப்பு!





* பாராட்டும் தாக்குதலும்!



* நூறு காண ஆசை!

கலைஞர் அடிக்கடி விடுதலைப் புலிகளுக்கு எச்சரிக்கை விடுக்கிறாரே'

* ரேவதிப்ரியன், ஈரோடு.

? அடிக்கடி கலைஞர் விடுதலைப்புலிக ளுக்கு எச்சரிக்கை விடுக்கிறாரே?

! அதுதான் வேடிக்கை. இங்கே புலிகளே இல்லை என்கிறார். கூடவே எச்சரிக்கையும் விடுக்கிறார்!

* கே. பாலமுருகன், வேங்கிக்கால்.

? தமிழக ஆளுனராக பர்னாலாவை நியமிக்க தேவிலால் வற்புறுத்தினாராமே? ஏன்?

! தமிழ்நாடு இன்னொரு பஞ்சாப் ஆகி விடாமல் இருக்க வேண்டுமானால் பஞ்சாப் நிலவரத்தில் நன்கு அடிபட்ட ஒருவரை இங்கே ஆளுனராக அனுப்பி வைப்பது நல்லது என்று கருதியிருக்கலாம்!

* இரா. ஆதிநாராயணன், தஞ்சை.

? இன்றையத் தமிழகத்தின் ஒவ்வொரு பெண்ணும் கண்ணகியாக மாறினால்...?

! சிலை வைக்கத் தமிழகக் கடற்கரையில் இடம் போதாது.

* ஏரல். எஸ். யோகா.

? சிவாஜி, பாக்யராஜ், டி. ராஜேந்தர் — மூவருக்கும் உள்ள ஒற்றுமை என்ன?

! அரசியலில் பாஸ் மார்க் வாங்காதவர் கள்!

* ஆர். கே. லிங்கேசன், மேலகிருஷ்ணன் புதூர்.

? 'இருட்டிலிருந்து தவிக்கிறேன்' என்கி றாரே ஆர். எம். வீ.?

! ஜன்னல்களையும் கதவுகளையும் மூடி இருட்டடிப்பு செய்து கொண்டது அவரே தானே!

* க. கோபி, ஆவடி.

? சம்திங் கொடுத்தால்தான் பதில் சொல் வீரா?

! கேள்வியில் சம்திங் இருந்தால் பதில் சொல்வேன்!

* மல்லிகை மன்னன், மதுரை.

? 'நான் உயிரோடு இருக்கும்போதே எனது நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங் களைக் காண ஆசைப்படுகிறேன்' என்கி றாரே, ம. பொ. சி.?

! ம. பொ. சி.க்கு ஏகப்பட்ட ஆசைகள்! நூறு வயது ஆகிறபோது ஆகட்டும். கொண் டாட்டத்தை இப்போதே வைத்துக்கொண்டு விடலாம் என்கிறார் போலும்! நடந்தால் ஆதாயம்தான்!

* ஜி. அர்ஜுன், திருப்பூர் — 7.

? "அப்புசாமி படம் எடுக்கிறார்" பார்த் தீர்களா?

! படிக்கிற போது இருந்த சுவாரஸ்யம் இல்லை.

* கே. ஏ. காளிமுத்து, காரை.

? "தி. மு. க. வில் நான் புறக்கணிக்கப் படுகிறேன். தமிழகத்திலிருந்து மக்கள வைக்கு நியமன உறுப்பினராக என்னை நியமியுங்கள்" என்று கோரி, பிரதமர் வி. பி. சிங்குக்கு ஆலடி அருணா கடிதம் எழுதியிருப் பது பற்றி...?

! தேர்தலுக்கு பிறகு, ஆலடி அருணாவை 'எங்கே காணோம்' என்று தேடிக் கொண் டிருந்தவர்களுக்கு முகவரி கொடுத்திருக் கிறார், அவ்வளவுதான்.

நீங்கள் கேட்டவை — தராசு

* வசந்தா காந்த், கருப்பம்புலம்.

? தமிழக காங்கிரஸில் மொத்தம் எத்தனை கோஷ்டி?

! இந்தக் கேள்வியை நீங்கள் எழுதி முடிப்பதற்குள் மேலும் இரண்டு கோஷ்டிகள் தோன்றியிருக்கும்!

* சம்பம் தமிழ்ச்சிற்பி, நாமக்கல்.

? இங்கிலாந்து செல்லவிருக்கும் இந்திய அணியில்ஸ்ரீகாந்த்இடம்பெறாததுகுறித்து?

! கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டு இனி சீட்டுக் குலுக்கிப் போட்டு வீரர்களைத் தேர்ந்தெடுத்தாலும் ஆச்சர்யமில்லை.

* கே. ரமேஷ், செங்குன்றம்.

? "அரசியலைப் பற்றி எதுவும் தெரியாத நிலையில்தான் நான் அரசியலில் நுழைந்தேன்" என்ற அமிதாப்பச்சனின் பேச்சு குறித்து?

! பெரும்பாலான அரசியல்வாதிகள் விஷயமும் அப்படித்தான். நாடு குட்டிச் சுவராகப் போய்க் கொண்டிருப்பதற்குக் காரணமும் அதுதான். அமிதாப் தைரியமாக ஒப்புக் கொண்டார்; மற்றவர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். அதுதான் வித்தியாசம்.

* ஜி. எம். ஜனார்த்தனன், மதுரை.

? கேள்வி — பதில் பகுதியில் உங்களுக்குப் பிடித்த கேரக்டர் கே. பி. என்று கூறி அவரைப் பாராட்டியிருக்கிறீர்கள்; அதே இதழில், உபேந்திரா பேட்டியில், கே. பி. யைத் தாக்கிக் கேள்வி கேட்டிருக்கிறீர்கள். ஏன் இந்த முரண்பாடு?

! ஒரு மாம்பழம் இருக்கிறது. காம்புப் பகுதியில் அழுக ஆரம்பிக்கிறது. முழுசாகத் தூக்கி எறிந்து விடுவீர்களா? அழுகத் தொடங்கிய பகுதியை மட்டும் வெட்டி எடுத்து எறிந்து விட்டு மிச்சத்தைச் சுவைக்க மாட்டீர்களா? இதில் முரண்பாடு எங்கே இருக்கிறது? நேற்று அழுகல் பகுதி என்று கூறியதை இன்று சுவையான பகுதி என்று சொன்னால்தான் முரண்பாடு தோன்றும்.

* பணிவரசன்மேதாவி, பூங்குளம்.

? சமீபத்தில் ரசித்த ஜோக் ஒன்று கூறுங்களேன்?

! 'மரங்களை வெட்டுவதைக் குறைக்க வேண்டும்; அதற்கு வழி என்ன?' என்று ஓர் அரசு யோசித்தது. மரப் பெட்டிகளில் ஆப்பிள், ஆரஞ்சு போன்ற பழங்கள் 'பேக்' செய்து அனுப்பப்படுகின்றன. இதற்காக மரங்கள் வெட்டப்படுகின்றன. இதைத் தவிர்க்க அட்டைப் பெட்டிகளில் 'பேக்' செய்து அனுப்பலாம். எனவே அட்டைப் பெட்டி தயாரிக்கப் பயன்படும் அட்டைகளுக்கு வரிச் சலுகை என்று அறிவித்தது அரசு! இந்தச் சலுகையைப் பயன்படுத்திக் கொள்ள ஏராளமான அட்டைப் பெட்டிகள் தயாராயின. மிக அதிகமாக அட்டை தேவைப்பட்டது. இதற்கேற்பக் காகிதக் கூழ் தயாரிக்க ஏகப்பட்ட மரங்கள் வெட்டப்பட்டன! இது எப்படி இருக்கு? ஒரே ஒரு வருந்தத்தக்க உண்மை என்னவெனில் இது ஜோக் அல்ல. இந்தியாவில் நடந்த கதை!

* ரூ. 20 பரிசு பெறுபவர்:

ஜெ. ஜெயக்குமார்,
452, காந்திபுரம்,
பொள்ளாச்சி — 642 006.

* ஜெ. ஜெயக்குமார், பொள்ளாச்சி. *

? மத்திய அரசை ராஜீவ் சாடியிருக்கிறாரே?

! இன்று எதிர்க்கட்சித் தலைவராக உள்ள அவர் அரசைச் சாடுவதில் தவறில்லை. அவரது கடமையும் அதுதான். ஆனால் உற்சாகம் எல்லை கடந்து போக, உளறி விடக் கூடாது. உதாரணமாக, 'தமது சிறுபான்மை அரசையும் தமது கட்சியையும் காப்பாற்றிக் கொள்வதற்காகவும் தமது பலவீனத்தைமறைத்துக்கொள்வதற்காகவும் வி. பி. சிங் இந்திய நாட்டை யுத்தத்தில் தள்ளுகிறார்' என்று பேசியிருக்கிறார். முந்நாள் பிரதமரின் இத்தகைய பொறுப்பற்ற பேச்சு, பாகிஸ்தானுக்குப் பக்கபலமாக அமையும் என்பது ஒருபுறமிருக்க, உண்மைக்கும் புறம்பானது. 'பாகிஸ்தான் யுத்தத்தை நோக்கி ஓர் அடி எடுத்து வைத்தால், நான் நல்லுறவு நோக்கி இரண்டு அடி எடுத்து வைப்பேன்' என்று கூறியவர் வி. பி. சிங். தற்காப்புக்கு ஆயத்தமாக இருப்பது வேறு; யுத்தத்துக்குத் தயாராவது வேறு.

* எச்சரிக்கை!



* அடிபட்ட ஒருவர்!





* முகவரி தந்தார்!



* எல்லை கடந்த உற்சாகம்!

மின்னலாய்ச் சில இலட்சியங்கள்

மாலை நேரத்தில் ராஜமாணிக்கத்தைப் பார்ப்பதென்பது முடியாத காரியம். நேற்றும் அதற்கு முந்திய நாளும் சென்று பார்த்த சிலமுத்துவுக்குக் கிடைத்த அனுபவம் அது. காலை நேரத்தில் ஒருவரிடம் போய்க் "கடன் கொடு" என்று கையேந்தி நிற்பதற்கும் அவர் மனம் இடம் தரவில்லை. ஆனால் வேறு வழி கிடையாது. அவருக்கு ரொம்பவும் பண நெருக்கடி. கௌரவங்கள் பார்த்தால் ஆகாது. எனவே அதிகாலை ஆறு மணிக்கே ராஜமாணிக்கம் வீட்டின் முன் நின்றார்.

அவர் நினைத்தது சரியாயிற்று. அப்பொழுதுதான் தூங்கி எழுந்து பல் விளக்கிக் கொண்டு நின்றார் ராஜமாணிக்கம்.

"குட்மார்னிங் சார்..."

"வாங்க... வாங்க. ரெண்டு நாளா தேடி வந்தீங்களாம். வீட்டில் சொன்னாள்." பேஸ்ட் நுரையைக் கொப்பளித்துக் கொண்டே வரவேற்றார்.

"ஆமா சார். சாயங்காலம் உங்களைப் பிடிக்க முடியல்லே. அதான் இன்னிக்குக் காலையிலேயே வந்தேன்."

"ரொம்ப முக்கியமான விஷயமா?"

தெரிந்து கொண்டே கேட்கிறார். இவன் வாயால் சொல்லட்டுமே என்று எதிர்பார்க்கிறார்.

கடன் கொடுப்பவர்களுக்கென்றே ஒரு திமிர் இரத்தம் ஓடும். அது இவன் உடம்பிலும் ஓடுகிறது. 'எத்தனை நாளைக்குடா இந்த வாழ்வு? உன்னை மாதிரி ஆளையெல்லாம் ஒரு நாள் என் வீட்டு வாசல்ல வந்து நிக்க வைக்கறேண்டா!...'

"சார்... என்ன பதிலைக் காணோம்?"

சிலமுத்து கற்பனையை விட்டுக் கீழிறங்கி யதார்த்த உலகுக்கு வந்தார்.

ராஜமாணிக்கம் தண்ணீர்ச் செம்பைக் கீழே வைத்து விட்டு, தேங்காய்ப் பூ துண்டால் முகத்தை அழுத்தித் தேய்த்துக் கொண்டிருந்தார்.

"அன்றைக்கே வீட்டுல சொல்லியிருந்தேனே..." அவசரமா ஒரு ஆயிரம் ரூபா வேணும்."

"ஓ! அதுவா.. சொன்னாள். தினம் பத்து பேரு வர்றாங்க. அவளால் எல்லார் சொன்னதையும் ஞாபகம் வச்சுக்க முடியாது பாருங்க..."

"அது சரிதான் சார்."

"இப்பல்லாம் முன்ன மாதிரி பணமே புரள மாட்டேங்குது சார். உங்ககிட்ட சொல்றதுக்கு என்ன! தோட்டத்துல இன்னொரு கிணறு புதுசா வெட்டறேன். பத்து ரூபா வேணும். நானும் எங்கெங்கேயோ சுத்திப் பார்க்கிறேன். கைக்குப் பணம் வந்த பாடு இல்லே." ராஜமாணிக்கம் மிகுந்த கவலையுடன் தமது தேவையைக் கூறினார்.

"ரொம்ப நெருக்கடி. இல்லேன்னா நான் உங்களைத் தொந்தரவு பண்ண மாட்டேன்."

"பழைய பாக்கி எதுவும் இருக்கா சார்?"

"ஒண்ணும் கிடையாது சார். ஒரு ஐந்நூறு வாங்கியிருந்தேன். வட்டியோட அடைச்சுட்டேன் சார்."

"ஈ.பி.யில ஒரு பார்ட்டி ரெண்டு ரூபா தரணும். ஜவ்வா இழுக்கறான் சார். 'போனஸ்' வரணுங்கறான். போனஸ் வந்தா 'அர்ரியர்ஸ்' வரணுங்கறான். கடைசியா இன்னிக்குப் பணம் வரலேன்னா ஆபீஸ்ல வந்து நின்னு மானத்தை வாங்கிடுவேன்னு பயமுறுத்திட்டு வந்திருக்கிறேன்."

"கொடுக்கல் வாங்கல்ல... கரெக்டா இருக்கணும் சார். நாணயம்தான் மனுஷனுக்கு முக்கியம்" சிலமுத்து அனுசரணையாய்ப் பேசினார்.

"இதுல வர்ற லாபம்... பணத்தைத் திரும்பி வாங்கறதுக்கு... நான் நாயா... அலையறேன் பாருங்க... அதுக்கே சரியாப் போயிடும். என்ன சார் சொல்றீங்க...?"

"ஆமா..."

"தேவையில்லாமல் பேசிக்கிட்டே போறேன் சார். இன்னிக்கு வெள்ளிக் கிழமை. திங்கட் கிழமை காலையில இந் நேரம் வந்து பாருங்க" ராஜமாணிக்கம் பேச்சை முடித்து வைத்தார்.

தன்னை வாசலிலேயே நிற்க வைத்துப் பேசியிருக்கிறார் என்பது திரும்பி நடக்கும் போதுதான் சிலமுத்துவுக்கு உணர்வில் பட்டது. தன்மானம் ஐந்து தலை பாம்பு போல் உள்ளுக்குள் சீறிப் படம் எடுத்தது.

வீட்டிற்குத் திரும்பியவர் வெகுநேரம் உள் வீட்டில், வெறும் தரையில் கை நீட்டி, கால் பரப்பிப் படுத்து விட்டார்.

ஆயிரம் ரூபாய்க்காக... எத்தனை தடவை... யாருக்கெல்லாம் சலாம் போடுவது? எப்படியெல்லாம் பல்லை இளித்து பக்குவமாய்ப் பேச வேண்டியிருக்கிறது? தருகிறவன் சும்மாவா தருகிறான்? கனையாக வட்டி வாங்கிக் கொள்கிறானே!

சிலமுத்துவின் சிந்தனை இப்படி ஓடிற்று.



கமலவேலன்

இந்த இழி நிலைக்கு ஒரு முடிவு கட்டியாக வேண்டும். எவனிடமும் கை கட்டி, கடன் வாங்குவது இனி கூடாது என்ற வைராக்கியம் மூன்றாம் பிறை போல் அவர் உள்ளத்தில் தோன்றியது. இதனை முடிவுக்குக் கொண்டு வர ஒரே வழி... சிக்கனம்... சிக்கனம்!

வார இதழ்கள், மாத இதழ்கள் என வீடு முழுதும் புத்தகமாய்க் கிடக்கும். அவற்றை நிறுத்தினாலே குறைந்தது ஐம்பது ரூபாய் மிச்சமாகும். முதல் சிக்கன நடவடிக்கை இதுவாகத்தான் இருக்க வேண்டும்.

காலையில் ரெண்டு தரம் காப்பி வேண்டும். அதை முழுதுமாக 'கட்' பண்ண யாருக்குமே 'திராணி' போதாது. வேண்டுமானால் ஒரு வேளையாகக் குறைத்துக் கொள்ளலாம். வழக்கமாக டிபன் சாப்பிட்ட பிறகு குடிக்கும் காப்பி 'கட்'.

மாலை ஐந்நூறு பால் வாங்கி ஐந்து பேர் பங்கிட்டுக் கொள்வார்கள். அதில் ஒரு நூறு பாலைக் குறைக்கலாமே! கூடக் கொஞ்சம் தண்ணீர் சேர்த்துக் கொண்டால் சரிதான்.

கௌரவம் கருதிப் பையனையும் பெண்ணையும் பள்ளிக்கூடத்துக்கு ரிக்ஷாவில் அனுப்பிக் கொண்டிருந்தார். தேவையே இல்லை. 'கிரிமினல் வேஸ்ட்'. மெதுவாக நடந்து சென்றாலே பத்து நிமிடம்தான். அவர்களுக்கும் ஒரு 'எக்ஸர்ஸைஸ்' மாதிரி. தவிரவும் சின்ன வயசிலேயே சொகுசா வளர்த்துட்டா... அப்புறம் கஷ்ட நஷ்டங்களைத் தாங்குகிற பக்குவம் வராது. ரிக்ஷா வேண்டாம். அதில் ஓர் அறுபது ரூபாய் கட்டாயம் மிஞ்சும்.

சிலமுத்து உடல் நலனில் கொஞ்சம் அக்கறை உள்ளவர். பயம் காரணமாகத் தினம் நான்கு சிகரெட்டுகள் மட்டுமே குடிப்பார். அதை இனி இரண்டாகக் குறைத்துக் கொள்வதென்ற முடிவுக்கும் வந்து விட்டார்.

இப்பொழுது முதலிலிருந்து கூட்டிப் பார்த்தார். அடேயப்பா...? எவ்வளவு மிச்சம். கடனே இல்லாமல் சுகமாகக் காலம் கழிக்கலாமே.

தன்னை உணர்ந்தால் யாருக்கும் உய்வு உண்டு என்பதை அந்தக் கணமே உணர்ந்தார். சற்றே பெருமித உணர்வு ஆட்கொள்ள, கண் அயர்ந்தார்.

திங்கள் கிழமை காலை சரியாக ஆறு மணிக்கு ராஜமாணிக்கம் வீட்டு வாசலில் நின்றார் சிலமுத்து.

"சார்...."

"........."

"சார்..."

பதிலே இல்லை. சில நிமிடங்கள் கழித்து உள்ளேயிருந்து பதில் வந்தது.

"அவங்க இல்லீங்களே. காலையிலேயே யாரையோ பார்க்கப் போயிட்டாங்க" பதில் சொன்னது அவரது மனைவியாயிருக்க வேண்டும்.

"அப்படிங்களா? சார் வந்தா... நான் சிலமுத்து தேடிட்டுப் போனேன்னு சொல்லுங்கம்மா."

செவ்வாய் அன்றும் ராஜமாணிக்கத்தைப் பார்க்க முடியவில்லை.

புதன் அன்று காலை மறுபடியும் படையெடுப்பு.

''வாங்க சார். உங்க அதிர்ஷ்டமோ என்னவோ தெரியல்லே. கொடுத்த இடத்திலிருந்து பணமே வரல்லே. அதனாலே... நாளைக்கு நிச்சயமா... வேற மாதிரி தோது பண்ணிக் கொடுத்திடறேன்.'' சர்வ சாதாரணமாய்ச் சொன்னார் ராஜமாணிக்கம்.

ராஜமாணிக்கம் வீட்டு 'காம்பவுண்ட்' சுவரை ஒட்டி சிறிய வேப்ப மரம். காற்றுக்கு ஆடிக் கொண்டிருந்தது. தன்னைப் பார்த்து வேப்ப மரம் சிரிப்பது போல் சிலமுத்துவுக்கு ஓர் எண்ணம் ஓடியது.

தம் பலம் முழுதும் திரட்டி அந்த வேப்ப மரத்தை வேரோடு பெயர்த்து, ராஜமாணிக்கத்தின் முதுகில் 'படேர் படேர்' ன்னு அடிச்சுட்டு,

''நீயும் ஆச்சு உன் பணமும் ஆச்சு''ன்னு சொல்லிட்டு ஓடி விடலாம் போல் தோன்றியது அவருக்கு.

ஆனால் பல்லை இளித்தவராய், ''பரவாயில்லே... நாளைக்கு வர்றேன்'' என்று அசடு வழியச் சொல்லி விட்டு நகர்ந்தார்.

''**ப**ணம் சரியாயிருக்கான்னு எண்ணிப் பார்த்துக்குங்க. ஒரு மாத வட்டி நாற்பது எடுத்துக்கிட்டேன். பிராமிசரி நோட்டுக்கு ரெண்டு ரூபா போக பாக்கி ரூபா சரியான்னு பார்த்துக்குங்க.''

சிலமுத்து எண்ணினார். சரியாய் இருந்தது.

''இதுல ஸ்டாம்ப் ஒட்டிக் கையெழுத்துப் போட்டுருங்க...'' ராஜமாணிக்கம் பச்சைத் தாளை நீட்டினார்.

சிலமுத்து விழித்தார்.

''ரெவின்யூ ஸ்டாம்ப் இல்லையே சார்..''

''நீங்க வாங்கிட்டு வருவீங்கன்னு நினைச்சேன். நான் ஸ்டாம்ப் மட்டும் வைச்சுக்கற பழக்கம் இல்லே. அப்புறம் அந்த இருபது பைசாவ பார்ட்டிகிட்ட வாங்கவே முடியறது இல்லே.'' ராஜமாணிக்கம் விளக்கினார்.

''அதுவும் சரிதான். இதோ ஒரு நிமிடம். பெட்டிக் கடையில் போய் வாங்கிட்டு வந்திடறேன்'' — முடுக்கி விடப்பட்ட இயந்திரமாய் ஓடினார் சிலமுத்து.

இருபது பைசா ரெவின்யூ ஸ்டாம்பை முப்பது பைசா கொடுத்து வாங்கிக் கொண்டு ஓடோடி வந்தார். ஒட்டினார். பணத்தைப் பெற்றுக் கொண்டார்.

நாத்தழுதழுக்க ராஜமாணிக்கத்திற்கு நன்றி சொன்னார்.

''கரெக்ட்டா..... சொன்ன தேதியில் திருப்பிக் கொடுத்துட்டீங்கன்னா.. அவசரத்துக்கு அப்பப்ப... பணம் வாங்கிக்கலாம்.''

புரோ நோட்டை மடித்தவாறு, செல்லமாக எச்சரிக்கை கொடுத்தார் ராஜமாணிக்கம்.

'**சி**ன்னப் பயல்... கையில் கொஞ்சம் பணம் வந்தவுடனே கண்மண் தெரியறது இல்லே. பிச்சைக்காரப் பயல். இவனை மாதிரி கஞ்சப் பயலுகள் எத்தனை பேரை நான் பார்த்திருப்பேன். ஆயிரம் ரூபாய்க்கு நான் பொறாதவனா? அல்பப் பயல்... நான் 'சொடக்குப் போட்டேன்னா' பத்தாயிரம்.. லட்சம் கூடப் புரட்டிடுவேன். தரம் தெரியாத பயல்...'

'குறிப்பிட்ட தேதியில் திருப்பிக் கொடுத்துட்டா... இன்னும் உறவு வெச்சுக்கலாமாம்' போடா... பத்தே நாள்ள உன் பணத்தை உன் மூஞ்சியில் வீசி எறியறேண்டா! சிலமுத்து ரௌத்ரமாய்த் தமக்குத் தாமே பேசிக் கொண்டார்.

இரண்டு பாக்கெட் சிகரெட் வாங்கினார். வேண்டாம் என்று நினைத்திருந்த எல்லா வார, மாத இதழ்களோடு புதிதாகச் சில புத்தகங்களைச் சேர்த்து வாங்கினார்.

'இன்ஸ்டன்ட்' காப்பித்தூள் நூறு கிராம் வாங்கினார். பை நிறையப் பழங்களும் பச்சைக் காய்கறிகளும் வாங்கினார்.

'டேய் ராஜமாணிக்கம்! எனக்கும் ஒரு காலம் வரும்டா! அப்போ... நீ எங்கிட்ட வந்து நிக்கத்தாண்டா போறே...'

சிலமுத்து சிகரெட் பற்ற வைக்கத் தீக்குச்சியை உரசினார். தீச்சுடர் தோன்றியது. சில வினாடிகள் அந்தச் சுடர் ஒளிர்ந்தது; சில வினாடிகள்தாம்.

அடுத்த இதழில்...

- வன்முறைக்கு வித்திடும் விளையாட்டுப் பொம்மைகள்!

— கவர் ஸ்டோரி

- ஆரணி எம். எல். ஏ. என்ன செய்கிறார்?

— நமது நேரடி விசிட்!



ஆரோக்கிய ரகசியம்:
வி. என். குமாரசாமி

8

தனுராசனம்

உயிர்வாழ்வதற்காகச் சாப்பிடுகிறவர்கள்; சாப்பிடுவதற்காகவே உயிர் வாழ்கிறவர்கள் என்று இரண்டு வகை உண்டு. இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்களுக்குத்தான் அதிகமான வியாதிகள் வரும். உணவை ரசித்துச் சாப்பிட வேண்டும். ஆனால் அளவாக உட்கொள்ள வேண்டும்.

நாம் சாப்பிடும் ஆகாரத்தின் தன்மை, அளவு ஆகியவற்றின் அடிப்படையில் ஆகாரப்பை காலியாக மூன்று முதல் ஆறு மணி நேரம் ஆகும். அதன் பிறகுதான் பசி உணர்ச்சி ஏற்படும். அப்படிப் பசி தோன்றியதும் சாப்பிடாமல் அரை மணி, ஒரு மணி ஓய்வு கொடுத்துச் சாப்பிடுவது நல்லது. இடையிடையே சாப்பிடுவதெல்லாம் ஆகாரப் பைக்குத் தீங்கு செய்வதாகும்.

தாட்சண்யத்துக்காகச் சாப்பிடுவது, தமாஷாகச் சாப்பிடுவது, நாக்கின் நப்பாசைக்காகச் சாப்பிடுவது எல்லாம் வயிற்றுக்கு இழைக்கப்படும் கொடுமைகளே. அளவுக்கு அதிகமாக வேலை வாங்கினால் இரைப்பை சீக்கிரமே வலுவிழந்து, சக்தி இழந்து போகும்.

ஒருவேலைக்காரன் அன்றையவேலைகள் முடிந்ததும் சற்று ஓய்வெடுத்துக் கொள்வான். அவனை எழுப்பி மேலே மேலே வேலை வாங்கினால் நிலைத்து இருப்பானா? 'நீயுமாச்சு, உன் வேலையும் ஆச்சு' என்று கிளம்பி விடுவான். ஆனால் நம் வயிற்றுக்குள் சிறைப்பட்டிருக்கும் இரைப்பை எங்கே போகும்? கொத்தடிமை போல மேலே மேலே வேலை செய்து சோர்ந்து போகும். பிறகு வியாதிகள் வரக் கேட்பானேன்?

* சலபாசனம்: இறுதி நிலை
— சுவாமி கோவிந்தாத்தா.




சிலர் ஜீரணத்துக்கு மாத்திரைகளை விழுங்குவார்கள். சிலர் குடலில் புண் என்றால் அறுவைச் சிகிச்சை செய்து கொள்வார்கள். இன்னும் சிலர் காஸ் மாத்திரை முழுங்குவார்கள். மாத்திரைகள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிக்குமே யொழிய, நோய் குணமாகாது. செல்வந்தர்கள் ஆபரேஷன் பண்ணிக் கொள்ளலாம். ஏழைகள் நோயுடன் கஷ்டப்படுவது போதாது என்று ஆயுதச் சிகிச்சைக்கு ஆகும் செலவுக்காகவும் சேர்ந்து கஷ்டப்பட வேண்டும்.

இதெல்லாம் எதற்கு? தவிர்த்து விடலாமே? ருசியான, சத்தான ஆகாரம் அளவாகச் சாப்பிடலாமே? ஆசனம் செய்து வயிறுக்கும் குடல்களுக்கும் பயிற்சி அளித்து அவற்றைத் தெம்பாக நல்ல நிலையில் வைத்திருக்கலாமே?

இவ்வாறு கேட்டால், ''ஆசனம் பண்ண எங்கே ஸார் டயம் இருக்கு?'' என்று சிலர் திருப்பிக் கேட்கிறார்கள். மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. யோசித்துப் பாருங்கள். உங்களுக்கென்று, உங்கள் உடல் நலம் பேண

* புஜங்காசனம்: இறுதி நிலை
— குமாரி லக்ஷ்மி ஜெயராமன்.





* தனுராசனம்: முதல் கட்டம் (அ)



* தனுராசனம் முதல் கட்டம் (ஆ)
— குமாரி சாமுண்டேஸ்வரி.

ஒரு மணி நேரம் கிடைக்காமல் போய் விடுமா? வேண்டாம் ஐயா, முக்கால் மணி நேரம்? அதுகூடவா ஒதுக்க முடியாது?

சிலருக்கு நேரம் ஒதுக்குவது பிரச்னையாக இராது. ஆனால், "செய்து பார்த்தேன்; வரவில்லை; விட்டு விட்டேன்" என்பார்கள். இவர்களுக்காகத்தான் இங்கே இரு படங்களைப் பிரசுரிக்கிறோம். இவை புஜங்காசனம், சலபாசனம் ஆகியவற்றின் இறுதி நிலைகள். இந்த நிலைகளுக்கு நீங்கள் போக வேண்டாம். அவற்றை நிபுணர்களுக்கே விட்டுவிடுங்கள். ஆனால், ஆரம்ப நிலைகளைக் கூடவா உங்களால் செய்ய முடியாது! நிச்சயமாக முடியும். ஏற்கெனவே சொல்லிக் கொடுத்திருப்பதைத் திரும்பப் படித்துப் பாருங்கள். மறுபடி முயற்சி செய்யுங்கள். சிரமமாக இருக்கும். வலிக்கும். இழுக்கும். நிறுத்தி விடுங்கள். சற்று ஓய்வு எடுத்து மறுபடி முயன்று பாருங்கள். இப்போது முன்னைவிடச் சிறிது நன்றாகச் செய்ய வருவது போல் தோன்றும். நாளைக்கு மறுபடி முயற்சி செய்யுங்கள். இன்னும் கொஞ்சம் சுலபமாகியிருக்கும். இப்படியே படிப்படியாக முன்னேற வேண்டும். ஓர் ஆசனத்தின் முதல் நிலையை நன்றாகச் செய்யவே அவரவர் உடல்வாகைப் பொறுத்து ஒரு வாரம் முதல் ஒரு மாதம் வரை கூட ஆகலாம். அவசரம் இல்லை. அவசரப்படவும் கூடாது. சிறுகச் சிறுக முன்னேறுவதே நல்லது.

இனி தனுராசனம் பற்றிச் சொல்கிறேன்:

இளம் தொந்தி, பெரும் தொப்பை முதலியன கரைய தனுராசனம் போல் வேறு ஒரு விஷயமும் உதவாது. கொழுப்பு மூட்டைச் சதையாகச் சேர்ந்திருப்பதே தொப்பை. சரியான ரத்த போஷணை இன்றி மந்தப்பட்டிருக்கும். தனுராசனம் செய்யத் தொடங்கியதும் ரத்தம் அந்தப் பகுதிகளுக்கு நன்கு பாயத் தொடங்கும். தேவையற்ற சதைகள் படிப்படியாகத் தேய்ந்து கரையும். வயிற்று உறுப்புக்களுக்கு நன்கு பயிற்சி ஏற்பட்டு, ஜீரண சக்தி பெருகும். வாயு பிரியும். மிதமாக உணவு அருந்தி வந்தால் உடல், ஆரோக்கியமாகவும் வாலிப தேஜஸுடனும் விளங்கும்.

தனுசு என்றால் வில். தனுராசனத்தில் உடல் வில்போன்ற நிலையில் இருக்கிறது.

பயிற்சி செய்யும் முறை:

மிருதுவான விரிப்பில் குப்புறப்படுத்துக் கொண்டும் கைகளைப் பக்கத்தில் ஒட்டியவாறு நீட்டியும் வைத்துக் கொள்ளவும். முகத்தை விரிப்போடு சேர்த்து ஒட்டி வைத்துக்கொண்டு, உடலைத் தளர்த்த வேண்டும். பிறகு இரு கால்களையும் அகற்றி, முழங்கால்களைப் பின்னுக்கு மடித்து, இரண்டு கைகளால் கால்களின் மணிக்கட்டுகளைப் படத்தில் உள்ளபடி பிடித்துக் கொள்ளவும். (அ) உடனே கால்களை உதைத்து மேல் எழும்பக் கைகளை விடாமல் நாண் போல் பிடித்து இழுத்துக் கொண்டு முதுகைப் பின் பக்கம் கூடுமான வரை வளைக்கவும். (ஆ) வில்லின் வடிவத்தை மனத்தில் வைத்துக் கொண்டு செய்ய வேண்டும். சரியான படி வந்து விட்டதற்கு அடையாளம், வயிறு மட்டும் தரையில் ஒட்டியிருக்கும். மற்ற பாகங்கள் வளைத்துத் தூக்கப்பட்டிருக்கும். மூச்சை சௌகரியம் போல் இழுக்கவும் விடவும் செய்யலாம். மூச்சைப் பிடித்துச் செய்ய வேண்டுமென்பதில்லை. இவ்வாறு இரண்டு, மூன்று வினாடிகள் இருந்து, பழைய நிலைக்கு மெதுவாகத் திரும்பி வந்து இளைப்பாறவும். இதை மூன்றிலிருந்து ஆறு தடவை வரை செய்யலாம். இது முதல் கட்டம்.

இரண்டாவது, மூன்றாவது கட்டங்கள் பற்றி அடுத்த வாரம் சொல்கிறேன். கர்ப்பிணிகள் இந்த ஆசனத்தைப் புதிதாக ஆரம்பித்துச் செய்யவே கூடாது. வழக்கமாகச் செய்து வரும் சகோதரிகள் கருத்தரித்து ஓரிரு மாதங்கள் செய்யலாம். அப்புறம் நிறுத்தி விட வேண்டும்.

(தொடரும்)

புகைப்படங்கள்: உத்ரா.

 வித்தியாசமான வி.ஸி.

"விஞ்ஞான முன்னேற்றம், அறிவியல் வளர்ச்சி என்றெல்லாம் பெருமைப்பட்டுக் கொள்கிறோம். பெரிய பெரிய ஜவுளி ஆலைகளிலெல்லாம் விஞ்ஞான வளர்ச்சி புகுந்து சாதனைகள் படைக்க உதவியிருக்கிறது. ஆனால் நமது எளிய கைத்தறி நெசவாளர்களை மேம்படுத்த அந்த விஞ்ஞான அறிவைப் பயன்படுத்தியிருக்கிறோமா? செருப்பு தைப்பவனின் தொழிலை விஞ்ஞானம் சுலபமாக்கியிருக்கிறதா......? இல்லையே!"

— இப்படி வித்தியாசமாய்ச் சிந்திப்பவர் அனந்தகிருஷ்ணன். சென்னை அண்ணா பல்கலைக் கழகத் துணை வேந்தராகச் சமீபத்தில் பொறுப்பேற்றிருப்பவர்.

"நம் நாட்டின் பாரம்பரியப்பெருமைகளைக் காப்பாற்றி வருபவர்களே கிராமப் புறத்தில் முறைப்படுத்தப்படாத தொழில்களில் (unorganized sector) ஈடுபட்டுள்ள கைவினைக் கலைஞர்கள்தான். இவர்கள் வேலையையெல்லாம் எளிதாக்க, பாரம்பரியத்துக்கு உட்பட்டு விஞ்ஞான யுக்திகளைப் புகுத்துவது படித்த ஒவ்வொருவரது கடமையும் ஆகும்" என்கிறார் டாக்டர் அனந்தகிருஷ்ணன்.

வாணியம்பாடியில் எளிமையான குடும்பத்தில் பிறந்தவர் டாக்டர் அனந்தகிருஷ்ணன். மேல் படிப்புக்காக இவர் அமெரிக்கா சென்றபோது அந்நாளில் வாணியம்பாடி வட்டாரமே பரபரப்படைந்தது!

"இளம் ரத்தங்களுடன் பேசி, பழகி, பாடம் சொல்லிக் கொடுக்கும்போது கிடைக்கிற மகிழ்ச்சியும் புத்துணர்ச்சியும் வேறெதிலும் கிடைப்பதில்லை" எனக் கூறும் டாக்டர் அனந்தகிருஷ்ணன் கான்பூர் ஐ.ஐ.டி பணிக்காலத்தைத் தமது வாழ்வின் வசந்தகாலம் என்று குறிப்பிடுகிறார். "இந்தக் கால மாணவர்கள் ரொம்ப வித்தியாசமானவர்கள். நிறைய கேள்விகள் கேட்கிறார்கள். இந்த உரையாடலும் நல்லுறவும் வரவேற்க வேண்டிய விஷயமே" என்கிறார்.

வாஷிங்டன், இந்திய தூதரகத்தில் அறிவியல் ஆலோசகராக நான்காண்டுகள் பணியாற்றினார் டாக்டர் அனந்தகிருஷ்ணன்.

"அண்ணா பல்கலைக் கழகம் இந்தியாவின் மிகச் சிறந்த பல்கலைக் கழகங்களில் ஒன்று. புத்திசாலி மாணவர்கள், தேர்ந்த ஆசிரியர் குழாம் — இதனை இந்த அளவுக்கு வளர்த்த டாக்டர் வி. சி. குழந்தைசாமிக்கு நன்றி" எனக் கூறும் டாக்டர் அனந்தகிருஷ்ணனிடம் சுய நிதி கல்வி நிறுவனங்களுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது பற்றிக் கேட்டோம்.

"நான் புதிதாகப் பொறுப்பேற்றிருப்பதால் எனக்கு இன்னும் முழுமையான தகவல்கள் தெரியாது. ஆனாலும், ஐரோப்பிய,அமெரிக்கதனியார்பல்கலைக்கழகங்கள் நன்றாகவே இயங்கி வருகின்றன. அரசாங்கம் தரக்கட்டுப் பாட்டில் கண்டிப்பு காட்டினால் இங்கும் அவை வெற்றிகரமாக செயல்பட முடியும் என்று தோன்றுகிறது" என்றார்.

இங்கே பல சுயநிதிக் கல்லூரிகளில் கல்வி கற்பதற்கான அடிப்படை வசதிகள் கூட இல்லை என்பதை டாக்டர் அனந்தகிருஷ்ணனுக்குச் சுட்டிக் காட்டினோம்.


"இது நிச்சயமாகக் கெடுதல் விளைவிக்கும். நான் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்று ஒரு மாணவன் உணர்ந்து விட்டால் அவனுடைய பழிவாங்கும் உணர்ச்சி மேலோங்கும். அதனால் சமுதாயமே பாதிக்கப்படும். இத்தகைய விபரீத விளைவுகளுக்குஇடங் கொடாமல் காக்க வேண்டியது நம் கடமை" என்றார் டாக்டர் அனந்தகிருஷ்ணன்.

சந்திப்பு: **மௌலி.**

"எதைச் செஞ்சாலும் நல்ல நேரம் பார்க்கப் பஞ்சாங்கத்தை எடுத்துப் புரட்டுவாரே, உங்கப்பா, இப்ப அவர் என்ன செய்யறார்?"

"புதுப் பஞ்சாங்கம் வாங்க நல்ல நேரம் பார்த்துக்கிட்டிருக்கார்."

— ஷோபனா வெங்கட்ராமன்.





நம் நாட்டு ராஜாக்கள்

அரசியல் செல்வாக்கு, அதிகாரத் திமிர், பண நாயகம் இவற்றின் துணை கொண்டு அத்துமீறி நடந்ததாகக் கூறப்படும் பத்திரிகைச் செய்திகளின் தொகுப்பு. அவற்றை இணைக்க மெல்லிய நூலிழையாக உருவாக்கப்பட்ட கதை. இந்த ஒரு காரணத்தாலேயே கட்டுக்கோப்பில்லாமல் நிகழ்ச்சிகள் துண்டு துண்டாக நிற்கின்றன. என்றாலும்சுவாரசியத்துக்குக்குறைவில்லை. உதாரணத்துக்குச் சில நிகழ்ச்சிகள்:

அரசியல்வாதியின் கட்டுப்பாட்டில் நடைபெற்று வரும் ஒரு கல்லூரிக்கு நிதி சேர்க்கவென்று நடத்தப்படும் 'கார்னிவல்.' அதில் சூதாட்ட அரங்குகள். கலை நிகழ்ச்சி என்கிற பெயரில் 'டிஸ்கொதே', 'துணையைச் சந்தியுங்கள்' என்கிற பெயரில் மான பங்கப்படுத்தப்படும்கல்லூரி மாணவிகள்....

ஆளும் கட்சியில் தனக்குள்ள செல்வாக்கைப் பயன் படுத்தி ரேஷன் கடையைத் தன் கட்டுப் பாட்டில் வைத்திருக்கும் அரசியல்வாதி. அந்தக் கடையில் பணியாற்றும் அவருடைய கையாட்கள். அவர்களுடைய துணையுடன் அரிசி, சர்க்கரை, கிரசின் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் கள்ள மார்க்கெட் விற்பனைக்கென்று அகற்றப்பட்டு விட, 'ஸ்டாக் இல்லை' என்கிற காரணத்தினால் அவதிப்படும் பொது மக்கள்....

மேயர், அவருடைய ஆதரவாளர்கள் ஒரு புறம். பெண் எம்எல்ஏயின் தலைமையில் அதே கட்சியின் எதிரணியினர் மறுபுறம். கட்சிக்கூட்டத்தில், "நீ ஒரு ஊழல்வாதி" என்று மேயரைக் குற்றம் சாட்டுகிறாள் பெண் எம்எல்ஏ. நிரூபிக்கச் சொல்கிறார் மேயர். "இதோ" என்று ஒரு கட்டுக்காகிதங்களை அவர் முகத்தின் மீது வீசுகிறாள் அவள். கோபத்துடன், "வேசி" என்று கூறி மைக்கைப் பிடுங்கி அவள் மீது எறிகிறார் மேயர். அவ்வளவுதான். இரு அணியினரும் மோதுகிறார்கள். ஆதரவாளர்கள் அவளைச் சூழ்ந்து கொண்டு பெண் எம்எல்ஏக்குப் பாதுகாப்புக் கொடுக்க, அதிலும் ஓர் இடைவெளியைக் கண்டு பிடிக்கும் மேயரின் ஆதரவாளர் ஒருவர் கையை நீட்டி அவளுடைய புடவைத் தலைப்பைப் பற்றியிழுக்க.....

அரசியல் நெடி அதிமாகி விடாமலிருக்க அவ்வப்போது காதல் காட்சிகள் டூயட் பாடல்கள் தலை நீட்டுகின்றன.

"ராமர் போரை விரும்பவில்லை. என்றாலும் போரின் மூலம்தான் சீதையை மீட்க முடிந்தது. பாண்டவர்கள் போரை விரும்பவில்லை. என்றாலும்யுத்தத்தின் மூலம்தான் ராஜ்யத்தைப் பெற முடிந்தது. அதே வகையில் நீதி தேடும் இந்த இளைஞர்கள் 'நம் நாட்டு ராஜாக்கள்'' என்று நியாயம் கற்பித்துக் கடைசிக் காட்சியில் அக்கிரமம் செய்கிறவர்களைத் தாக்கச் செய்து ஏகமாக ரத்தம் சிந்தியிருக்கிறார்கள்.

ஏற்க முடியவில்லை. சென்஻ார் என்னமோ கத்தரிக்கோலைத் தீட்டியிருப்பதாகச் சொன்னாரே, உபேந்திரா... என்னாச்சு?

— சி. ஆர். கே.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: லெ. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/; விமானத் தபால் ரூ. 350/-.


Liril
கிளுகிளு பரவசக் களி:
லிரில் புத்துணர்வுக் குளி!
Liril
THE FRESHNESS SOAP
LINTAS LR 34 2517 TM
லிரில்
புத்துணர்வு சோப்!
லிரில். மனம் குளிரும் எலுமிச்சைப் புத்துணர்ச்சி
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

